Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -15 | வெள்ளி -02 | 05-11-மார்ச்-2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 05. 03 . 2004
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# மக்கள் ஆணை

ஜாதிக கெல உறுமயவை சேர்ந்த நூற்றுக்கணக்கான பிக்குகள் களனி இராஜமகா விகாரையிலிருந்து பேரணியாக சென்று கண்டி தலதா மாளிகையில் வைத்து தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைத்தீவில் இதுவரை இனவாதத்தின் பிறப்பிடமாக இருந்தவர்கள் மகாசங்கத்தினர் தான்.

1833 இல் கோல்புறூக் பிரபுவின் சிபார்சுகளின் படி வரலாற்றுக்காலத்திலிருந்து தமக்கென ஒரு மரபுவழித்தாயகத்தையும் அதில் தமக்கேயுரித்தான ஆட்சியுரிமையையும் இறைமையையும் கொண்டிருந்த தமிழ் தேசிய இனம் இலங்கைத்தீவில் ஒரே ஆட்சியின் கீழ் ஒரே நிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர், 1931 ஆம் ஆண்டின் டொனமூர் யாப்பு சீர்திருத்தங்கள் தீவில் அனைவருக்குமான சர்வஜன வாக்குரிமையை வழங்கியதிலிருந்து சிங்கள பெரும்பான்மை இனத்தவரின் அதிகார அரசியல் நாட்டின் அரசியலாக மாறியது.

1948ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இறுதியாக ஆங்கிலேயர் இலங்கைத்தீவை விட்டு வெளியேறிய பின், தமிழ்தேசிய இனம் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு சிங்கள அதிகார அரசியலினால் தீர்மாணிக்கப்படும் முடிவுகளின் படி வாழுமாறான நிர்ப்பந்தம் தமிழர்கள் மீது தொடர்ந்த காலங்களில் திணிக்கப்படுவதாயிற்று.

சிங்கள மக்களின் எல்லாவகையான செயற்பாடுகளையும் வழிநடத்துவபவர்களாக, இனவாத அதிகார அரசியலின் கருவியாக மதமும் மகாசங்கமும் எழுச்சி பெற்றன.

இதன்பின் சிங்களத்தில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற எல்லாத் தேர்தல்களிலும் இனவாதம் பேசுவது மாத்திரமே ஆட்சியைக் கைப்பற்ற போதுமானதொன்றாக மாறியது.

இன்றும் கூட இனவாதம் தன்னளவில் தன்கவர்ச்சியை இழந்துவிட்டதாக இல்லை.

அது இம்முறை பச்சை இனவாதம் பேசும் ஜே.வி.பியினருடனான சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணியின் கூட்டாக வேணும் சரி, தன்னை ஜாதிக கெல உறுமய எனக்கூறிப் பெயர் மாற்றிய இனவாதக் கட்சியான சிகல உறுமயவின் மறு அவதாரமாயினும் சரி- அதன் நிலை மாறியதாக இல்லை.

இதில் தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டியது ஒன்றுதான். சிங்களத்தில் இதுவரை இனவாதம் பேசுவதற்கும், அதைப்பின்பற்றுவதற்கான கவர்ச்சி குறைந்து விடவில்லை என்பதுதான்.

இதுதான் சிங்களத்தின் மாறாத அரசியல் சூத்திரம். எப்போதும் யாரோ ஒருவர் "எமது தேசத்தை தமிழர்களுக்கு விற்கின்றார்கள்" எனக் கோஷம் இடுவதன் மூலம் தமது கதிரைகளை பலமாகவும், தமிழர்களின் உரிமைகளை உதாசீனப்படுத்தியவாறும் இருந்திருக்கிறார்கள் என்பதே வரலாறு.

எனினும், ஈழத்தமிழரின் இன்றைய நிலை வேறுபட்டது.

இரண்டு தசாப்தகாலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமையில் போராடி, தமிழரின் இராணுவபலத்தை சிங்களத்துடனான சமபல நிலைக்கு ஈழத்தமிழினம் இட்டு வந்துள்ளது. புலிகள் இயக்கத்தின் தலைமையும், இலட்சிய உறுதியும் அர்ப்பணிப்பும் அதைச்சாத்தியமாக்கியுள்ளன. அதேவேளை அவர்களின் விடுதலைப்பற்றும், வீரமும் இராணுவ பலமுமாக சேர்ந்து ஈழத்தமிழரின் அரசியல் தனத்தை சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் பலமடையுமாறு வைத்துள்ளது.

எனினும், ஈழத்தமிழினம் விடுதலைப்புலிகளின் தலைமையில், தாம் கொண்டுள்ள அரசியல் பலத்தை ஏகோபித்து நிருபித்துக் காட்டவேண்டிய தார்மீக கடப்பாடு தமிழீழ மக்கள் அனைவருக்கும் உண்டு.

தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும் அதற்கான தார்மீக பலத்திற்குமான மக்கள் ஆணையாகவே இது அனைவராலும் நோக்கப்படும். அதுவே இதுவரையான சிங்களத்தின் இனவாத கருத்தியலை சிதைக்கப்போகும் ஆணையாகவும் இருக்கும்.

# அரசியல் வரலாற்றில் ஜே.வி.பி.யின் குழறுபடிகள்

**ஜெயமயூரன்**

**இலங்கையின** அரசியல்களத்தில் அவ்வப்போது சர்ச்சையைக் கிளப்பும் ஒரு கட்சியாக ஜே.வி.பி. இன்று இனங்காட்டபடுகிறது. அச்சமற்ற, பிச்சையற்ற சமதர்ம ஆட்சி எனும் ஆணிவேரில் உருவாக்கப்பட்ட ஜே.வி.பி தனது பாதையிலிருந்து பிறள்வடைந்து பல கோணங்கள் சிதறிவிட்டிருக்கின்றது. உண்மையில் இலங்கையின் அரசியல், பொருளாதார தலைவிதியை சோசலிச ரீதியில் திருத்தியமைக்கப்படும் என கணக்கிடப்பட்ட ஓர் இடது சாரிக் கட்சி இன்று இலங்கை வரலாற்றை கறை படிய செய்து வருகிறது.

ஓர் அரசியல் கட்சி ஏதாவதுஒருகொள்கை அல்லது கொள்கைகளை அடிப்படையாக வைத்து நகர்த்தப்படும். ஆனால் ஜே.வி.பி தனது அரசியல் நகர்வுக்காகவே கொள்கைகளை காலத்திற்கு காலம் மாற்றி வருகிறது.

"வெளிநாட்டு தலையீடு எதிர்ப்பு கொள்கை", "தாராளமயமாக்கல் எதிர்ப்புக்கொள்கை", "முதலாளித்துவ எதிர்ப்புக்கொள்கை", தனித் தமிழீழ எதிர்ப்புக்கொள்கை" இந்த கொள்கை பட்டியல் நீண்டு வளர்ந்து இன்று "ஓட்டுமொத்த தமிழின எதிர்ப்புக் கொள்கை" ஆக விஸ்வரூபம் எடுத்துக் கொண்டுள்ளது.

இந்தக் கொள்கை மாற்றங்கள் எதற்காக? காலத்திற்குக் காலம் உடையலங்காரங்கள் மாறுவது போல இலங்கை அரசியலில் அந்தக் காலங்களில் சூடுபிடிக்கும் விவகாரங்களை ஜே.வி.பி கட்சியின் அரசியல் வியாபாரிகள் கொன்ராக்ட் (contract) எடுத்து விடுவார்கள். அதன்பின் விற்பனையை அதிகரிக்க விளம்பரம் செய்வது போல் நாளுக்கு நாள் அறிக்கைகளை எடுத்துவிட்டு அரசியல் சந்தையில் தமது இருப்பை ஏதாவது வழியில் உறுதிசெய்து விடுவர். இவர்களின் அரசியல் விளம்பரங்கள் (அறிக்கைகள்) பிரசித்தம் பெறுவதற்கு பேரினவாத பத்திரிகை ஊடகங்கள் ஆற்றும் பணியையும் இங்கு குறைத்து மதிப்பிட முடியாது.

ஜே.வி.பி.யின் உக்கிப் போண அரசியல் பொருட்களை வாங்கி இலங்கை மக்கள் சில வேளைகளில் சலித்துவிடுவது உண்டு. அப்படியான அரசியல் விவகாரம் தொய்ந்து போன நாட்களில் மக்களைக் கவரும் உத்தியாக மறியல் போராட்டம், எரித்தல் போராட்டம் போன்றவை நடத்தி மக்கள் தலையில் மிளகாய் அரைத்து விடுவது இவர்களுக்கு கைவந்த கலை (இப்படியான செயற்பாடுகள் பொதுவாக அரசியல் வாதிகளின் இரத்தத்தில் கலந்தது. ஆனால் ஜே.வி.பி.யிற்கு பொழுதுபோக்கானது).

ஈழப்போர் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றுவரை ஜே.வி.பி தன்னை ஒரு பேரினவாதக் கட்சியாக இனங்காட்ட தவறியதே இல்லை. அனைவருக்கும் சம உரிமை எனும் சிவப்பு கொள்கை கொண்டவர்கள் தமிழர் உரிமை விடயத்தில் மட்டும் கோமாளியாக மாறியுள்ளனர்.

இன,மத,மொழி கடந்து உலகளாகிய ரீதியில் சிறந்து நின்ற சோசலிச கொள்கையை வரிந்து கட்டிக்கொண்டு தொடங்கிய கட்சி இன்று இராணுவ அடக்குமுறைக்கு பிரித்தோதும் காவியுடைக் கூட்டத்துடன் கைகோர்த்து நிற்கிறது. தேசத்தின் உழைப்பாளர்களின் ஒருமித்த கை என பறைசாற்றும் கட்சியின் கை இன்று மனித இரத்தத்தில் ஊறிக்கிடக்கிறது.

சமாதான சூழல் என்பது ஜே.வி.பி.யை பொறுத்தவரை சகிக்கமுடியாத ஒன்று. இக்காலத்தில் அக்கட்சி தலைமை பெரிதும் குழம்பிப் போய்யிருந்தது. இதனை அக்கட்சியின் இசகு பிசகான அறிக்கைகளே வெளியிட்டன. ஆயுதப் போராட்டத்தை முன்னிலைப்படுத்தி விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக்கூறி கூக்குரலிடும் இக்கட்சி ஒரு பெரிய உண்மையை மறந்துவிட்டதா?.

இலங்கை வரலாற்றில் ஒரு குழுவின் சுயலாபம் கருதி கொடூரம் மிகுந்த ஆயுதக் கலாச்சாரத்தை அறிமுகப் படுத்தியதே ஜே.வி.பிதான். அதன் பயங்கரவாதச் செயற்பாடுகளால் இலங்கை அடைந்த பின்னடைவுகளை இலங்கை குடிமக்கள் இலேசில் மறந்துவிடமாட்டார்கள். தற்போது தாம் சனநாயகத்தில் கலந்துவிட்டதாகக் கூறிக்கொண்டாலும் அவர்களின் குரூரமான சிந்தனைகள் ஓய்ந்துவிடவில்லை. நாடாளுமன்றத்தில் கூச்சலிடும் செயற்பாடும் அந்த சிந்தனைகளும் ஒரு வடிவமே.

சிறு, சிறு விடயங்களை கூட அரசியல் பூதமாக மாற்றும் திறன் ஜே.வி.பியிற்கு உண்டு. தென்னிலங்கை மக்கள் அறிந்தே இருக்காத குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரத்தை பெரும் பூதாகரமாக கிழப்பி தென்னிலங்னையில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தி அதில் ஒரு வகையான அரசியல் லாபத்தையும் ஈட்டி கொண்டது இக்கட்சி.

எவ்வகையிலாயினும் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தி அதில் குளிர் காய்ந்தபடி அரசியல் நடத்த ஜே.வி.பி துடிக்கிறது. இன்று சர்வதேசமும் ஜே.வி.பியை புரிந்துவிட்டது எனலாம். உதாரணமாக இலங்கை யுத்தநிறுத்தத்திற்கு நடுநிலையாகச் செயற்படும் நோர்வே மீதான விரோத போக்கும் அந்நாட்டின் தேசியக கொடியை எதிர்த்தமையும் ஜே.வி.பி.யை உலகம் உணர்வதற்கு வழி கோலின. விடுதலைப்புலிகளும்- ரணில் அரசும் உறுதியாக கடைப்படித்து வருகின்ற யுத்தநிறுத்தத்தை கொச்சப்படுத்தி "இலங்கையை புலிகளுக்கு தாரைவார்த்தல்" எனும் பொருளில் இனவாதப்பிரச்சாரத்தை ஜே.வி.பி இன்று மேற்கொண்டு வருகிறது.

அப்படியானால் உண்மையில் சிங் கள இனத்தின் நலனிலாவது ஜே.வி.பியிற்கு அக்கறை உள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது. யுத்தகாலத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு யுத்த களங்களில் பலியிடப்பட்ட இலங்கை இராணுவ ஆளணிகளை ஜே.வி.பி சிந்தித்து பார்த்ததுண்டா? தமிழர் நிலப்பகுதி எங்கும் அநாதரவாக சிதறிக் கிடந்த சிங்கள இராணுவ உடல்களை ஜே.வி.பி ஏன் மறந்தது? தமது இளைஞர்களின் உயிரற்ற உடல்கள் கூட்டம் கூட்டமாக இனியும் தென்னிலங்கை வரக்கூடாது என்பதற்காக ரணில் அரசை பெரும்பாண்மை இனத்தவர்கள் ஏற்றுக் கொண்டனர். அப்படி இருக்கையில் புலிகளை ஒடுக்கவேண்டும் என ஜே.வி.பி பூச்சாண்டி காட்டுவது வேடிக்கையானது. இன்று ஒட்டு மொத்த உலகமும் புலிகளை தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டபோது ஜே.வி.பி மட்டும் புலிகளை தனியாக கபடி ஆட அழைக்கிறது. இவையெல்லாம் அக்கட்சியின் அரசியல் பலவீனத் தையே காட்டுகிறது.

ஜே.வி.பியின் பிரச்சார செயலர் விமல்வீரவன்ச தன் வாழ்நாளில் அதிகம் உச்சரித்த வார்த்தை "புலி" என்பதே ஆகும். வெளியுலகில் லக்ஸ்மன் கதிர்காமர் எந்தளவுக்கு "புலி புராணம்" பாடுகிறாரோ அதற்குச் சமனாக உள்நாட்டில் அந்த பெருமை விமல் வீரவன்சவுக்குத்தான்.

இக்கட்சி தனது அரசியல் ஆடுகளத்தில் பகடைக் காய்களாக சிலவேளைகளில் முஸ்லிம்களையும்

(19ஆம் பக்கம் பார்க்க)



அறிவற்ற அச்சம், ஆபத்தை இரட்டிக்கின்றது. - தாமஸ் ஃபுல்லர்

# கிளிநொச்சியிலிருந்து எடுக்கப்படும் முடிவுகள்

# கொழும்பு அரசியலை தீர்மானிக்கும் ஒரு நிலைவருமா?

தமது அரசியல் இலக்குகளை அடைவதற்காக தேர்தலை ஒரு பிரதான வழிமுறையாகக் கையாளும் மரபு விடுதலைப்புலிகளிடம் அனேகமாக இருந்ததில்லை.

இதை இன்னொரு விதமாகச் சொன்னால் நாடாளுமன்ற அரசியலுக்கூடாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளின் விளைவும் புலிகள் போன்ற விடுதலை இயக்கம் தோன்றக்காரணமெனலாம்.

எனவே ஆயுதமேந்திய புலிகள் போன்ற இயக்கத்துக்குத் தேர்தல் என்றாலே அலர்ஜிக் ஆக இருப்பது ஒரு விதத்தில் பிறப்பியல்பு போன்றதே.

எனினும் ஆயுதப்போராட்டங்கள் நிகழ்ந்த அயர்லாந்து, தென்னாபிரிக்கா, கிழக்குத்தீமோர் போன்ற நாடுகளில், போராட்ட இயக்கங்கள் ஒரு கட்டத்தில் போராட்டத்துக்கான தமது மக்களின் ஒருமித்த ஆதரவை வெளியுலகிற்கு நிரூபிக்கும் ஒரு வழிமுறையாக தேர்தலைக் கையாண்ட உதாரணங்களும் உண்டு.

இதில் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை தேர்தலை குறைந்தபட்சம் ஒரு மறைமுக வழியாகவேனும் கையாளும் விதத்தில் தமது இலட்சியத்தை ஏற்றுக்கொண்ட மிதவாதிகளை ஆதரிக்கும் ஒரு போக்கை இருமுறை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

முதலில் ஐ.பி.கே.எவ். காலத்திலும் பின்னர் கடந்த தேர்தலின்போதும் சமாதானத்துக்கும் விடுதலைப்போராட்டத்தின் நியாயத்துக்கும் ஆதரவாக நின்ற கட்சிகளே புலி[illegible]ர் மறைமுகமாக ஆதரித்து அல்லது [illegible]திர்க்காதுவிட்டு வெற்றிபெற வைத்[illegible]ருக்கிறார்கள்.

ஆனால் இம்முறை அவ்வாறில்லை. வரப்போகும் தேர்தலுக்கான புலிகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் வெளிப்படையானதாகவும் அதிகரித்த அளவினதாகவும் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் தேர்தலை நடாத்துவது குறித்து முடிவெடுக்கும் அளவுக்கு நிலைமைகள் வந்துவிட்டன.

இதிலுள்ள நடைமுறைப்பிரச்சினைகள் ஒரு புறமிருக்க இப்படியொரு முடிவை எடுக்குமளவுக்கு புலிகள் நெகிழ்ந்துவந்திருப்பது முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத ஒன்று. புலிகள் இதுவரை காட்டிய சனநாயகபூர்வமான சமிக்ஞைகளில் அதிகம் பிரகாசமானது இது.

கொழும்பில் தற்சமயம் நிலவும் தலைமைத்துவ வெற்றிடத்தின் பின்னணியில் புலிகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான ராஜீய உறவுகள் அதிகரித்துவரும் ஒரு சூழலில் தேர்தல் குறித்த புலிகளின் இம்முடிவு மேற்கு நாடுகளுக்கு அதிகம் ஆறுதல் அளிப்பதாகவும், மகிழ்ச்சியூட்டுவதாகவும் இருக்கும். அதாவது, புலிகளின் சர்வதேச அந்தஸ்தை இது மேலும் உயர்த்தும்.

அதேசமயம் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் யார் என்ற தெளிவான மக்கள் ஆணையை பெற்றுத்தரும் ஒரு தேர்தலாகவும் இது இருக்கும்.

இது தவிர கொழும்பில் உள்ள சில விமசகர்கள் அஞ்சுவதுபோல தமிழர்கள் தீர்மானகரமான ஒரு பாத்திரத்தை வகிக்கப்போகும் நாடாளுமன்றம் ஒன்றையும் இது உருவாக்கக்கூடும்.

தேர்தல் முடிவுகள் தமிழர்களுக்கே அதிகம் சாதகமாய் அமைந்துவிடலாம் என்ற அச்சம் கொழும்பில் சில வட்டாரங்களில் காணப்படுகிறது. தேர்தலில் ஒப்பீட்டளவில் தமிழ் வாக்குகள் அதிகம் சிந்திச் சிதறாது ஒன்று திரட்டப்படும் வாய்ப்புகள் பிரகாசமாகத் தெரிகின்றன. ஏனெனில், சமாதானத்துக்கா, அல்லது யுத்தத்திற்கா என்று கேட்கப்படும்போது அனேகமாக தமிழ் வாக்குகள் சமாதானத்துக்கேவிழும்.



இந்த நாட்டில் சமாதானம் செய்வதென்றாலும் புலிகள் வேண்டும். யுத்தம் செய்வதென்றாலும் புலிகள் வேண்டும். புலிகளுக்கு வெளியே சமாதானம் என்ற ஒன்று இலங்கைத்தீவுக்கு இல்லை. இதன்படி கூறின் புலிகள் எதை ஆதரிக்கிறார்களோ அதுதான் யதார்த்தத்தில் சமாதானமாகத் தோன்றும். எனவே, புலிகளை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளர்களால்தான் நடைமுறைச்சாத்தியமான சமாதானத்தை வாக்களிக்கமுடியும். தனிப்பட்ட முகங்கள் செல்வாக்குகள் என்பவற்றுக்காகவல்லாமல் சமாதானத்துக்காக அதுவும் நடைமுறைச் சாத்தியமான ஒரு சமாதானத்துக்காக தமிழர்கள் வாக்களிக்கும்போது நாடாளுமன்றத்தில் தமிழர்களின் சக்தி ஒன்று திரட்டப்பட்டு பிரயோகிக்கப்படும் நிலைமைகள் அதிகமுண்டு.

ஆனால், சிங்கள மற்றும் முஸ்லிம் வாக்குகள் அவ்வாறில்லை. அங்கே தலைமைகள் பிளவுண்டும் சிதறுண்டும் காணப்படுகின்றன. எனவே, ஆட்சியமைக்கும் பொருட்டு சிங்களக் கட்சிகள் சில சமயம் தமிழர்களிடம் தங்கியிருக்கும் ஒரு நிலை வரலாம்.

இப்படியொரு நிலை தோன்றுவதைத் தடுப்பதற்கே பிக்குகள் களத்தில் இறங்கியதாகக் கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் சமாதானத்தின் எதிர்நிலையில் இருப்பதால் அவர்களால் சமாதானத்துக்கான வாக்குகளைப் பிரிக்கமுடியாது. பதிலாக சமாதானத்துக்கு எதிரான வாக்குகளைத்தான் பிரிக்கமுடியும்.

அதாவது, பிக்குகளின் வருகை உடனடியாகவும் நேரடியாகவும் பிரித்தெடுக்கப்போவது சமாதானத்துக்கு எதிராக நிற்கும் ஜே.வி.பி.- எஸ்.எல்.எவ்.பி. கூட்டின் வாக்குப் பரப்பைத்தான்.

இப்படிப்பார்த்தால் தமிழர்கள் ஒன்று திரட்டப்பட்ட ஒரு சக்தியாக நாடாளுமன்றத்துக்கு வந்து அங்கே சிங்களக் கட்சிகளை தம்மில் தங்கியிருக்கச் செய்யும் ஒரு நிலைதோன்றுவதைத் தடுக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டு தேர்தலில் குதித்திருக்கும் பிக்குகள் அதன் இறுதி விளைவாக சிங்கள வாக்காளர்களை மேலும் குழப்பத்திலாழ்த்தி சிங்களக்கட்சிகளை மேலும் பலவீனப்படுத்தப் போகிறார்கள் என்பதே உண்மை.



எனவே இம்முறை தேர்தலில் பலமடையப்போவது தமிழர்களே. ஏனெனில் அவர்கள்தான் ஒன்று திரட்டப்பட்ட சக்தியாகவும். ஒருமித்த மிகத்தெளிவான இலக்குகளோடும் காணப்படுகிறார்கள்.

அண்மைக்காலங்களில் புலிகளின் பலம்பற்றிக் கூறும்போதெல்லாம் சிறிலங்காவை உற்றுக்கவனித்துவரும் வெளிநாட்டு அவதானிகள் ஒரு ஆங்கில வார்த்தையை - Consolidate பாவிக்கிறார்கள். அதாவது புலிகள் தமது பலத்தை ஒன்று திரட்டிவருகிறார்கள் என்று பொருள். கடந்த இரண்டாண்டு கால யுத்தநிறுத்தத்தின் பின்னணியில் குறிப்பாக, கொழும்பில் தற்பொழுது நிலவும் தலைமைத்துவ வெற்றிடத்தை வெற்றிகரமாகக் கையாண்டு வருவதன்

**நிலாந்தன்**

விளைவாய் கொழும்பில் எனி எத்தகைய திருப்பம் நிகழ்ந்தாலும் அது புலிகளுக்கு வாய்ப்பாகவே அமைதல்கூடும்.

சனாதிபதி சந்திரிகா எதை நினைத்து காய்களை நகர்த்தினாரோ அதெல்லாம் தலைகீழாகிவிடும்போலத் தோன்றுகிறது. தேர்தலில் அவர்வென்றாலும் புலிகளுக்கே லாபம். அவர் தோற்றாலும் புலிகளுக்கே லாபம் இது எப்படியென்று பார்ப்போம்.

அவர் ஆட்சி அமைப்பதென்றால் சில சமயம் இப்பொழுது தனித்துப் போட்டியிடும் பிக்குகள் போன்ற தீவிர இனவாதக்கட்சிகளோடு தேர்தலின் பின் கூட்டுவைக்க வேண்டிவரும். முஸ்லிம்களையும் சில உதிரிக்கட்சிகளையும்கூட அவர் கூட்டுச்சேர்க்க வேண்டிவரலாம்.

கொழும்பில் இப்போதுள்ள வெளித் தோற்றத்தை வைத்துச்சொன்னால், நீலக்கொடிகளே எங்கும் பறப்பதாக அண்மையில் கொழும்பிலிருந்துவந்த ஒரு அவதானி சொன்னார். யூ.என்.பி.யின் பொருளாதாரக் கொள்கைகள் பெருமுதலாளிகளையே கொளுக்கவைத்ததாகவும் இதனால் பாதிக்கப்பட்ட நடுத்தரமுதலாளிகளும் சிறு முதலாளிகளும் எஸ்.எல்.எவ்.பி. - ஜே.வி.பி. கூட்டை ஆதரிக்கமுடியும் என்றுமவர் சொன்னார். எஸ்.எல்.எவ்.பி. - ஜே.வி.பி. கூட்டின் பொருளாதாரக் கொள்கைகள் பெருமளவுக்கு நடுத்தர முதலாளிகளையும் சிறு முதலாளிகளையும் கவரும் விதத்திலேயே காணப்படுகிறது.

இந்நிலையில் சில சமயம் சந்திரிகா ஏனைய தீவிர இனவாதக் கட்சிகளையும் அமைத்துக்கொண்டு ஆட்சி அமைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறாயின் அவரால் இப்போது வாக்களிப்பதுபோல சமாதானத்தை அதிககாலத்துக்கு இழுத்துக் கொண்டுபோகமுடியாது. கூட்டரசாங்கத்தால் அதுவும் தீவிரவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து அமைக்கப்படும் ஒரு அரசாங்கத்தால் சமாதானத்தை முன்னெடுப்பது எத்துணை சோதனையானது என்பதற்கு இஸ்ரேல் ஒரு நல்ல உதாரணம்.

இப்படிச் சமாதானத்தை அதிக காலம் இழுக்கமுடியாது போகும்போது முடிவில் யுத்தத்தைத் தவிர வேறுதெரிவில்லை என்று வரும். அப்போது புலிகளே முன்பு மேற்குலகிடமிருந்து தனிமைப்படுத்தியதுபோல தனிமைப்படுத்தி யுத்தம் செய்யமுடியாதிருக்கும். ஏனெனில் சந்திரிகா சமாதானத்துக்கு எதிரான தீவிரவாதிகளுக்குத் தலைமை தாங்கிக்கொண்டு புலிகளை மேற்குலகிடமிருந்து தனிமைப்படுத்தமுடியாது. எனவே சந்திரிகா யுத்தத்தைத் தொடங்கினாலும் அது புலிகளுக்கே சாதகமாய் முடியக்கூடும்.

அல்லது ரணில் ஆட்சி அமைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் அப்படி ஆட்சி அமைப்பதென்றாலும் அனேகமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் அணி சேரவேண்டிவரும் அல்லது அதில் தங்கியிருக்க வேண்டிவரும் என்றே அவதானிகள் கூறுகிறார்கள்.

அப்படியேதும் நடந்தால் நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கும் சக்திகளாக தமிழ்ப் பிரதிநிதிகளே காணப்படுவார்கள்.

அதாவது, வடக்கிலும்- கிழக்கிலும் வாழும் தமிழர்களின் அரசியல் தலை விதியை தீர்மானிக்கும் முடிவுகள் மட்டும்தான் கிளிநொச்சியில் வைத்து எடுக்கப்படும் என்பதல்ல. முழுத்தீவுக்குமான கொழும்பு மைய அரசியல் குறித்த முடிவுகளும் இனிமேல் கிளிநொச்சியில் வைத்தே எடுக்கப்படும் ஒரு நிலை வந்தாலும் வரலாம். ●



உண்மையாய் இருக்கத் துணிவு கொள்; எதற்குமே, பொய், தேவைப்படுவதில்லை. - ஜார்ஜ் ஹெர்பெர்ட்

# நறுக்கென...

## சொக்சியார் இப்படி பேசலாமா?



அரச ஊடகங்களைக்கட்டுப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு என சிறிலங்காவின் நிதி அமைச்சர் கே.என். சொக்சி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சொக்சி இவ்வாறு கூறுவதற்குக்காரணம் அரச ஊடகங்கள் சனாதிபதி சந்திரிகாவுக்கு ஆதரவாகவும் பிரதமர் ரணிலுக்கு எதிராகவும் செயற்படுவதே காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதில் என்ன வேடிக்கை என்றால் தேர்தல் ஆணையாளரால் அரசியல் ஒலிபரப்புக்களைக் கட்டுப்படுத்தமுடியும். அத்தோடு நடு நிலைத்தன்மையைப்பேண முடியும் என்றும் தெரிவித்தார். இதற்கான முழுமையான அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டாம்.

சனாதிபதி சந்திரிகாவிடம் நிறைவேற்று அதிகாரத்தை விடவா தேர்தல் ஆணையாளருக்கு இருக்கும் அதிகாரம் சக்திவாய்ந்தது.

சந்திரிகா தனம் புரிந்து கொண்ட பின்னும் அமைச்சர் சொக்சி இப்படிக் கூறுகிறார்.

அது சரி, ஊடகங்களைத்தான் கட்டுப்படுத்தமுடியும் என்றாலும் இப்போது ஊடகங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் சந்திரிகாவின் ஆலோசகரான கடிர்காமரை எப்படிக்கட்டுப்படுத்தமுடியுமாம்?

அமைச்சர் கடிர்காமரே ஆயிரம் ஊடகங்களுக்கு சமமானவராயிற்றே.

கடிர்காமர் அடிக்காதகுத்துக் கரணமா? அவர் பேசாத வெட்டிப் பேச்சா? எத்தனை பெரிய மனிசர் அவர்.

அமைச்சர் சொக்சியாரே அம்மணி பிடுங்கிய கதிரைகளில் ஒன்று ஊடகத்துறையும் என்பதை மறந்துபோகலாமா?

அது சரி ஐம்பது கடந்து விட்டாலே அரளை பேர்ந்து போய்விட்டது என்று கூறுவது பொய்யாகுமா?

அம்மையார் நினைத்தால் ஊடகம் என்ன தேர்தல் ஆணையாளரையே கட்டுப்படுத்துவார்.

## றொக்காவின் விருப்பும் சந்திரிகாவின் மறுப்பும்



தென்னாசியாவுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜங்கச் செயலாளர் கிறிஸ்மனா றொக்கா சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவுடன் கடந்த வாரத்தில் பலதடவை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றும் முடியாமல் போய்விட்டதாம்...!

முடியாமல்போய்விட்டது என்பதைவிடவும், சந்திரிகா அவருடன் பேசுவதை தவிர்த்துக்கொண்டார் என்பதே பொருத்தமானதாகும்.

இம்மாதிரியிலான சந்திரிகாத் தனங்கள் பல அவரது ஆட்சிக்காலத்திலும், பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்திலும் பல அரங்கேறி அவரது தொலைநோக்கு சிந்தனையற்ற அரசியல் மற்றும் இராஜதந்திர குறைபாடுகளை தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் பிரபலமாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாட்டு - அதுவும் நற்பு நாட்டு இராஜதந்திரி சனாதிபதியுடன் பல தடவைகள் முயற்சிக்கின்றார் என்றால் அதில் எதாவது முக்கிய அம்சம் இருக்கவேண்டும் என்பதை இயல்பாகவே எவராலும் உணரமுடியும்.

ஆனால், சந்திரிகா அவ்வாறான சிந்தனையுடைய ஒருவரல்ல. தனக்குப் பிடிக்காத, தனக்கு அபிலாசைகளுக்கு முரணான, தான் பல்வேறு காரணங்களுக்காக எதிர்கொள்ள விரும்பாத எந்தவொரு நபரையும் அவர் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்தாலும் புறக்கணிக்க சந்திரிகா பின்வாங்கியது கிடையாது.

நோர்வே தூதர், யப்பானிய விசேட தூதர் இந்த பட்டியலில் அடக்குவர். இதற்கான காரணங்கள் வெளிப்படையானவையே.

பொதுத்தேர்தல் சுதந்திரமானதாகவும், நீதியானதாகவும் நடைபெறுவது தொடர்பாகவும், உதவி வழங்கும் நாடுகளின் நிதி உதவி வழங்கல் குறித்தும் இவற்றுடன் தேர்தல் எந்த வகையில் தொடர்பு கொண்டுள்ளது என்பது பற்றியும் 'றொக்கா' சனாதிபதியுடன் பேச விரும்பியதாக தெரிகிறது. ஆனால் தனது பதவி நிலைக்கும், றொக்காவின் பதவி நிலைக்கும், தனது அரச அந்தஸ்திற்கும், றொக்காவின் அந்தஸ்திற்கும் எட்டப் பொருத்தம் என்பதாலேயே தான் பேசவில்லை என்று காரணம் கூறியுள்ளராம் சனாதிபதி.

தன் கணவனைக் கொன்ற கொலைக் கும்பலின் தலைவனான ஒரு கிருமினல் குற்றவாளியை தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த ஒரு தேச விரோதியான சோமவன்ச அமரசிங்கவை எந்த அந்தஸ்தின் அடிப்படையில் சந்திரிகா வரவேற்று சந்தித்துப் பேசினராம்....?

விஜயகுமாரணதுங்க என்ற அவரது கணவனின் ஆத்மாவிற்கே இது

## சந்திரிகாவின் பண்டாரநாயக்கத்தனம்...



விடுதலைப்புலிகளின பிரதேசத்தில் தேர்தலை நடத்த முடியாது என சனாதிபதி திட்ட வட்டமாகத் தெரிவித்துள் ளார்.அது மட்டுமல்ல எந்த ஆணையாளரும் அதற்கு அனுமதியளிக்கவில்லை அப்படி நடந்தாலும் அது நீதியான தும் நேர்மையானதுமான தேர்தலாக இருக்காது என்றும் கூறியிருக்கிறார்.


அது சரி சந்திரிகா எந்தக்காலத்தில் நீதியானதும் நேர்மையானதுமான ஒரு தேர்தலை நடத்தியிருக்கிறாராம்?

சென்ற தேர்தலில் அவரது சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும், பிரதிபாதுகாப்பு அமைச்சரும் அவரது மாமாவான அநுருத்த ரத்வத்தையும் சேர்ந்து ஆடிய கூத்துக்கள், வன்முறைகள், கொலைகள் எல்லாம் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடவடிக்கைகளின் அம்சங்கள் என்று அவர் கருதுகின்றாரா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தலை நடத்தமுடியாது என்று எந்த ஆணையாளரும் இது வரைவெளிப்படையாக தெரிவிக்கவில்லை என்பது கிளிநொச்சி போன்ற பகுதிகளின் அரச அதிபர்கள் தேர்தலை நடத்த முடியும் எனப் பகிரங்கமாக தெரிவித்திருப்பது உண்மைதான்.

சனாதிபதி இதற்கு முரணாகவே கதைக்கிறார். அவரால் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. அவரது ஆதரவுக் குழுக்களான டக்ளஸ்தேவானந்தா, ஆனந்தசங்கரி தலைமையிலான அணியினர் புலிகளின் பகுதிகளில் தேர்தலில் நிக்கும் மனோதைரியம் அற்றவர்கள் புலிகளின் பகுதிவாழ் மக்கள் ஒன்றுதிரண்டு வாக்களிப்பார்களேயானால் அந்த வாக்குகள் விகிதாசார அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மனத்தை வெகுவாக சுத்திகரித்துவிடும் என்றும் அதனால் கடந்தவருடம் கிடைத்த பன்னிரண்டு இடங்களும் தமக்கு கிடைக்காமல் போய்விடும் என்றும் அவர்கள் தீர்க்கமாகவே உணர்ந்துள்ளனர். இப்பகுதிகளில் தேர்தல் நடத்தக் கூடாது என்பதை சந்திரிகாவுக்கு வலியுறுத்துபவர்களாகவே அவர்கள் உள்ளனர். இதுதான் சந்திரிகா புலிகள் பிரதேசத்தில் தேர்தல் நடத்தமுடியாது என்று கூறுவதற்கு காரணமாகும்.

சமாதானம் நிலவும் சூழலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இராணுவ அக்கிரமிப்பு பகுதிகளுக்கும் இடையே மக்களின் போக்குவரத்து பல்லாயிரக்கணக்கில் சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் பாது காப்பை காரணம்காட்டி தேர்தலை நடத்தமுடியாது என்று கூறுவது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். தோல்வி பற்றிய அச்சமே அவரின் இந்த அறிவிப்புக்கு காரணமாகும். சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல் நேர்மையாக நடப்பதை உறுதிப்படுத்தவும் மேற்பார்வையிடவும் தயாராகயிருக்கையில் சந்திரிகா அதனை நடத்தமறுப் பது சுத்த ஜனநாயக விரோத, தமிழின விரோத பண்டரநாயக்க தனமேயாகும்.

## ரவூப் ஹக்கீமின் குத்துக்கரண அரசியல்...



தடுமாறும அரசியல்வாதி என்றால் அது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்தான்....

அஷ்ரப்பின் பின்னர் முஸ்லிம் காங்கிரசின் தலைமையைப் பிடிக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளில் இருந்து இன்று அதனை தக்கவைத்துக்கொள்ள மேற்கொண்டுவரும் பகீரதப்பிரயத்தானங்கள் வரை அவர் கையாண்ட அரசியல் கொள்கை ரீதியிலான 'தடுமாறும்' உத்திகள் அவரது சந்தர்ப்பவாத அரசியல் போக்கினை மிகத்தெளிவாக வெளிப்படுத்திவருவதாகவே உள்ளன. அவருக்கான சிறப்பான அரசியல் கொள்கையோ இலக்கோ ஏதும் இருக்குமென அது அவரது பதவியை காப்பற்றிக் கொள்வதை குறிக்கோளாக கொள்வதாகவே இருக்கும்.

கடந்த கால அரசியலில் அடித்த குத்துக்கரணங்கள் ஒரு புறம் இருக்கட்டும். தற்போது தேர்தல் அரசியலில் அவர் அடித்து வரும் 'பல்டி'கள் முஸ்லிம் மக்களுக்கு இப்படியும் ஒரு கொள்கை உறுதியற்ற தலைவரா என எண்ணவைக்கின்றது.

அண்மையில் தேர்தல் பிரச்சார கால அறிக்கைகளில் அவர் தெரிவித்த கருத்துகள் குறித்துப்பார்ப்போம்.

ஐ.தே.முன்னணி ஆட்சிபீட ஏறிய பின்னர் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட விட்டால் அதனுடான கூட்டணியில் இருந்து விலக்கிக்கொள்வராம். இது அவருடைய கருத்துக்களின் ஒன்று.

அதாவது, இரண்டாண்டு காலத்திற்கும் அதிகமான வருடங்கள் ஐ.தே. முன்னணி அரசில் பொறுப்பான அமைச்சராக பதவி வகித்து வந்த காலத்தில் முஸ்லிம்களின் அபிலாசைகளை கவனிக்க அவருக்கு நேரமே இருக்கவில்லையா? அப்போது அந்த அரசிடம்- அதே ஐ.தே.முன்னணி அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியாத முஸ்லிம் மக்களின் உரிமைகளையா இனி மீண்டும் ஒரு முறை அக்கட்சி ஆட்சியை அமைத்த இரு வாரங்களில் பெற்றுக்கொடுக்கப் போகிறார்?

முஸ்லிம் மக்கள் இளிச்சவாயர்கள் என நினைத்துவிட்டரா?

அடுத்த விடயத்தைப் பாருங்கள், ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைந்து அதில் அமைச்சராக இருந்து அனைத்து வசதிகளையும் அனுபவித்த பின்னர் அந்த அரசை தனது நிறைவேற்று அதிகார சனாதிபதிக்குரிய அதிகாரபரவரலாக்கலைப் பயன்படுத்தி கலைத்த சந்திரிகாவுக்கு ஆதரவாக இன்னமும் அதே ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து கொண்டே வக்களாத்து வாங்கியிருக்கிறார்.

அதாவது, எந்த அரசியல் கட்சியாவது நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழிக்க முனையுமானால் அதனை தான் எதிர்ப்பாராம். அது சிறுபான்மை இனங் களுக்கு பாதுகாப்பு வழங்கும் ஆட்சி முறையாம்....? எந்த சுவற்றில் போய் மண்டையை மோதுவதாம்?

சந்திரிகா தலைமையிலான புதிய சுதந்திர முன்னணி ஆட்சிபீடம் ஏறினால் அதிலும் ஓர் அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ள முன்னேற்றபடாக சனாதிபதிக்கு ஐஸ் வைக்கும் அறிக்கையாகவே இதனைக் கூற முடியும்? இது முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை- உரிமைகளை எந்த வகையிலும் பாதுகாக்கமுடியாது என்பது மட்டும் நறுக்கான உண்மையாகும்.

**செங்குட்டுவன்**

## தேர்தல் அறிமுகம்



### வி.ஆனந்தசங்கரி

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய யாழ்மாவட்ட சுயேச்சைக்குழு தேர்தல் வேட்பாளரும்)

ஆனந்தமாகத்தான் வாழ்வதற்காகத் தன் இனத்தையே விற்றுவிட தேர்தல் சங்கதிகளில் ஈடுபடும் ஆனந்த சங்கரியாரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டாமா?

ஒருசட்டத்தரணியான இவர்சுய இலாபங்களுக்காக தாராளமாகக் கட்சிதாவும் ஒரு சுயநல அரசியல்வாதி. இவரது சகோதரரோ ஒரு தமிழின விரோதி.

இவர் அயலகத்தாரின் பெருந்தொகை நிதியோடும் நிறைவேற்று அம்மணியின் அரவணைப்போடும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு பூட்டுப் போடப்புறப்பட்டுள்ள ஒரு கோடாரிகாம்பு. இதனாலோ என்னவோ சுயேட்சையான இவருக்கு தேர்தலில் பூட்டுச் சின்னம் கிடைத்தது.

ஆனால், இந்தச் சட்டத்தரணிக்கே சட்டம் விளையாட்டுக் காட்டியதுதான் பாவம்.

கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து தூக்கி எறிந்தபோதும் கதிரையைவிட்டு இறங்கமாட்டேன் என அடம்பிடித்துக் கடைசியில் கூட்டணியின் உதிக்கும் சூரியனையே வாக்குச் சீட்டிலிருந்து மறையச் செய்த பெரிய மனிதர்.

கூட்டணி தன்னுடைய சொத்துப் போல பேசிய இவர் எத்தனையோ கட்சி மாறியவர்.

சமசமாஜக் கட்சியிலிருந்து சோசலிசம் பேசினார். பிறகு காங்கிரசுக்குத் தாவி தமிழரசுக் கட்சியைத் திட்டினார். கடைசியிலை கூட்டணியோடு வந்து ஒட்டிக்கொண்டு முதலில் நாடாளுமன்றக் கதிரையைப் பிடித்தார்.

பின்னர் கட்சியின் தலைமையைப்பிடித்துக் கொண்டு கட்சிக்குள்ளேயே நிறைவேற்று அதிகாரத்தை கைப்படுத்த நினைத்த அயல் நாட்டினதும் சந்திரிகா அம்மையாரினதும் கைப்பாவை.

இப்பொழுது இந்த ஆனந்தமான சங்க(தி)ரியாருக்கு பிடித்ததெல்லாம் இருக்கும் சுகபோக வாழ்வு பத்தாது இன்னும் சுகபோக வாழ்வு-

இவர் இப்போதெல்லாம் கொள்கை கோட்பாடுகளைப்பற்றியெல்லாம் பேசுகிறார். ஆனால் இவருக்கு என்று எந்தக் கொள்கையும் கோட்பாடும் இல்லை.

இவர் எதிர்பார்க்கும் கொள்கையும் கோசமும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் கூட்டணியின் தலைவர் என்ற பட்டமும் மட்டும்தான்.

அயல்நாடு வற்றாது வாரிவழங்கும் நன்கொடைகளும் அம்மையாரின் ஆசீர்வாதமும்தான் இப்போது இவருக்குத் தேவை.

இந்த ஆனந்தமானவர் ஆசைப்படுவதெல்லாம் கூட்டணியின் தலைமைக்கதிரையில் இருந்து கொண்டு சனாதிபதித்தனம் காட்டி சனாதிபதிக்கு நல்ல விசுவாசியாக இருக்கவேண்டும் என்பதே.

இவரின் கனவெல்லாம் எப்படியாவது வீட்டுக்கு பூட்டுப்போட வேண்டும் என்பதே.

இதற்காகவே தேர்தல்அன்று மக்கள் வாக்களிக்க முடியாதவாறு பிரதான வீதிக்கு பூட்டுப்போட நிற்கிறார்.

அன்னார் போடும் பூட்டு தமிழருக்கு பல சங்கடங்களை ஏற்படுத்தும். சுயேட்சையாக இருக்கும் சங்கரியாரின் ஒரே இலக்கு தேர்தளால் வெற்றிபெறமுடியாது போய்விட்டாலும் தமிழ் மக்களின் வாக்குகளையாவது சிதைத்துவிட வேண்டும் என்பதே.

இதனால்தான் இப்போதெல்லாம் இவர் ஒரு வாலாட்டும் ஒரு சாரைப்பாம்பு. அதனால் இவருக்கு வேட்புமனுத்தாக்கல் செய்யவரும் ஆயுதப்படையினரின் பாதுகாப்புத் தேவைப்பட்டது.

ஒட்டு மொத்தத்தில் தமிழினம் ஒற்றுமைப்பட்டு நின்றபோது சாயம் வெளுக்கப்பட்ட ஒரு அண்மைய வரலாற்றுத்துரோகி.

**சிறி.இ.**

# சமாதானத்தின் தளத்தை தேர்தல் முடிவு நிர்ணயிக்கும்

**சிறி.இந்திரகுமார்**

கொழும்பிலுள்ள ஊடக நண்பர் ஒருவர் கேட்டார். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் புலிகள் இயக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பை பகிரங்கமாக ஆதரிப்பதன் மூலம், நாடாளுமன்றம், தேர்தல்களம் இவற்றில் நம்பிக்கை கொண்டு விட்டார்கள். இதன் மூலம் இவர்களின் கடந்தகால போராட்டம் இப்போது என்னாவது என்றார்.

இதன் மூலம் அந்த நண்பர் கேட்டார் சிங்கள தேசத்தின் நலன்களை மட்டும் அதிகம் கவனத்தில் எடுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகமாக பிரதிநிதித்துவப்படுத்தப் போகும் நாடாளுமன்றத்தினை நாடுவதன் மூலம் புலிகள் எதனைச் சாதிக்க முயல்கிறார்கள் என்றார் அவர்.

இந்த நண்பரின் கேள்விக்கான விடையை தெரிந்துகொள்வதற்கு முதல் ஒன்றை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும்.

அதாவது புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் இலட்சியத்துக்காக என்றும் தளராது போராடிவரும் ஒரு அமைப்பு என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

அந்த வகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் இலட்சியத்திற்கான பயணத்திற்காக தன்னுடைய போராட்ட இலட்சியத்தை மாற்றாது போராட்ட வடிவங்களை மாற்றியே வந்துள்ளது.

பல வடிவங்களினூடாகவும் தமிழ்மக்களின் தன்னாட்சி உரிமைக்காக போராடியே வந்துள்ளது. அந்தப் போராட்டத்தின் ஒரு வடிவமே தற்போதைய இந்த தேர்தலுக்கான பகிரங்கமான ஆதரவும் கூட.

இந்த வரலாற்றின் எடுத்துக்காட்டாக ஏற்கனவே இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் புலிகள் இயக்கம் மறைமுகமான தன்னுடைய ஆதரவை வழங்கியிருந்ததை கவனத்தில் எடுக்கவேண்டும்.

அடுத்தது இன்று சிங்களதேசம் சமாதானத்துக்காக எத்தனை தடவைகள் மக்கள் ஆணையை கோரி நின்றிருக்கிறது.

சந்திரிகா முதல் ரணில் வரை ஆட்சிப்பீடம் ஏற முடிந்தது. சமாதானத்துக்காக மக்கள் ஆணைமூலமாகவே தற்போது நடைபெறும் தேர்தல்கூட சமாதானத்துக்கான மக்களின் ஆணை என்றே கூறப்படுகிறது.

இங்கேதான் நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். சிங்கள தேசம் சமாதானத்தின் பெயரால் மக்களாணையை வேண்டிநிற்கும் வேளை சமாதானம் எந்தத்தளத்தில் எட்டப்பட வேண்டும் என்ற ஆணையை தமிழ் மக்கள் வழங்குகிறார்கள் என்பதை தெளிவுபடுத்துகின்ற ஒரு தேர்தலாக புலிகள் இயக்கம் இதனை பயன்படுத்துகிறது.

இது ஒரு வகையில் சிங்கள தேசத்தின் சூழ்ச்சிகளிற்கான ஒரு பதிலளிக்கும் ஒரு தேர்தலாக மாற்றப்படுகிறது.

எப்படியென்றால், அரசிற்கும், புலிகளிற்குமிடையில் சமாதான பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது 'சிறான்' அமைப்பை ஒப்புக்கு ஆரம்பித்து வைத்துவிட்டு அதனை செயற்படுத்த முடியாதவாறு சிறிலங்கா அரசு செயற்பட்டபோது,

புலிகள் இயக்கம் தமிழர் தாயகத்தில் சகல அதிகாரங்களுடனும் கூடிய ஒரு கட்டமைப்பைக் கோரியபோது உருப்படியான எந்த அம்சங்களையும் உள்ளடக்காது சர்வதேசத்தையும் புலிகளையும் ஏமாற்றும்வகையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இடைக்கால திட்டவரைபு ஆலோசனைகளை ரணிலின் அரசு சமர்ப்பித்து காலத்தை இழுத்தபோது,

உருப்படியான பல திட்டங்களுடன் தமிழர் தாயகத்திற்கு தேவையான இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை சமர்ப்பித்து அரசின் திட்ட ஆலோசனைகள் என்ற இழுத்தடிப்புக்கு புலிகள் இயக்கம் முற்றுப்புள்ளி வைத்ததுபோல,

சிங்கள தேசத்தை வெளிப்படுத்தும் இரண்டு பிரதான கட்சிகளினதும் சமாதானத்துக்கான மக்கள் ஆணை என்ற இழுத்தடிப்புக்கான ஒரு பதிலாகவும் இந்த நாடாளுமன்றத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கான புலிகளின் ஆதரவு மூலம் பெறப்படும் மக்கள் சக்திவெளிப்படுத்துவதாக இருக்கும்

சிங்கள் தேசம் கோரி நிற்கும் ஆணைக்கு தமிழ் மக்களின் தீர்வு வடிவமே இந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் ஆகும்.

இதனைத் தெளிவாகப்புரிந்துகொள்ள வேண்டுமானால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலேயே இந்த தேர்தலை புலிகள் ஆதரித்து நிற்பதை புரிந்துகொள்ளமுடியும்.

இதன்மூலம் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் கடந்த காலத்தில் புலிகளின் போராட்டத்தின் சகல அம்சங்களையும் கொண்டதாக தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருப்பதைப் புரிந்துகொள்ளலாம்.

பொதுவாக இன்றைய உலக மயமாதலின் பின்னணியில் இனங்களிற்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்தல் என்ற அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் அதிக பிரசன்னங்களோடு முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள் எல்லாம் பொதுவாக நாடுகளிற்கிடையிலான நலன்களும் இராணுவ மற்றும் வர்த்தக நலன்கள் என்பவற்றை முதன்மைப்படுத்தப்படுவதை கவனத்திற்கொண்டே பேச்சுக்களாக வடிவமைக்கப்படுகின்றன.

இதன் விளைவுகளால் எல்லா சமாதான முன்னெடுப்புக்களிலும் பொறிகளும், சூழ்ச்சிகளும் நிறைந்தே காணப்படுகின்றன.

இவற்றில் சர்வதேச நாடுகளின் பொறிகளும் அந்தந்த நாடுகளின் பொறிகளும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றன.

இவற்றை வெற்றி கொள்வதற்கு விடுதலை அமைப்புக்கள் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

அந்தவகையில் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களின் போதான பல சூழ்ச்சிகளையும் பொறிகளையும் வெற்றிகரமாகக் கையாண்ட ஒரு அமைப்பாக புலிகள் இயக்கம் உள்ளது.

அண்மையில் உலக உதாரணங்களில் விடுதலைக்காக போராடும் மக்களை நோக்கி வைக்கப்பட்ட பொறிகளையும், சூழ்ச்சிகளையும் வெகுவாக வெற்றிகொண்ட ஒரு அமைப்பாகவே புலிகள் இயக்கம் இதுவரை திகழ்ந்து வருகிறது.

இதன் இன்னுமொரு படியாகவே புலிகள் இந்த நாடாளுமன்றத் தேர்தலை உலகிற்கு வெளிப்படுத்த உள்ளனர்.



இன்றைய உலக நகர்வின் அமைவுக்கு ஏற்ப புலிகள் இயக்கம் நகர்வுகளை செய்யவேண்டிய தேவையுள்ளது.

அதன்மூலமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் தனித்துவத்தை பாதுகாப்பாக பேணவேண்டிய கடப்பாடு உள்ளது.

எப்படியென்றால் புலிகளின் கடந்த கால அசாதாரண இராணுவபலமே ஒரு நெகிழ்வுப் போக்குடன் புலிகளை சர்வதேச சமூகம் அரவணைத்துச் செல்லவேண்டியிருந்தது.

இந்த இராணுவ பலத்தின் மூலமான புலிகளின் நன்மதிப்பை சனநாயகம் என்ற போர்வையில் மக்களின் கருத்துக்களை புலிகள் முழுமையாக பிரதிபலிக்கின்றார்களா என்ற வகையில் சில சந்தேகங்கள் கிளப்பப்பட்டன.

இவற்றை முடிவுக்குக் கொண்டு வரக்கூடியவாறு புலிகள் இயக்கத்தில் மக்கள் சக்தியை வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இதனை பயன்படுத்துகிறது.

இதன்மூலம் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் எவராலும் புறந்தள்ள முடியாதவாறு வரலாற்றுப்பதிவொன்றை மேற்கொள்ளமுடியும்.

அந்தவகையில் இந்த தேர்தல் தமிழ் மக்களின் கடந்தகால துன்பங்கள் இழப்புக்கள் என்பவற்றின் பெறுமதிகளை உலகிற்கு உணர்த்தப்போகும் ஒரு களமாகும்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் அரசோடு மேற்கொள்ளப்போகும் சமாதான பேச்சுக்களின் போதான புலிகளின் கரங்களை அதிகவலுவுடன் பலப்படுத்துவதாக நிச்சயம் அமையும். ●

நேர்நோக்கு

# ஆனந்த சங்கரியை அரவணைக்கும் ஜே.வி.பி

வடக்கு-கிழக்கு தேர்தல் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் ஈ.பி.டி.பி யினரையும் ஆனந்தசங்கரியையும் கலந்தாலோசித்த பின்பே முடிவு எடுக்கவேண்டும் என ஜே.வி.பி.யின் மத்தியகுழு கூறியிருக்கிறது.

இதிலே ஈ.பி.டி. பியினரைக் கலந்தாலோசித்த பின்பே முடிவுகளை எடுக்கவேண்டும் என ஜே.வி.பி கூறுவது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். ஏனெனில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுக்க ஈ.பி.டி.பி முன்வந்துள்ளது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயத்தை ஏற்றுக்கொள்வதாக அது கூறுகிறது எனவே ஈ.பி.டி.பி ஜே.வி.பி.யின் ஆதரவு சக்தி. அதற்கு ஆதரவாக ஜே.வி.பி.பேசுவது ஒன்றும் ஆச்சரியத்திற்கு உரியதல்ல.

ஆனால் ஆனந்த சங்கரியை கலந்தாலோசிக்கவேண்டும் என ஜே.வி.பி. கூறுவது ஏன்?

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலுள்ள மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தங்கு தடையின்றி சுமுகமான முறையில் வாக்களிக்கத் தேவையானவற்றைச் செய்யவேண்டும் என்பது இப்பொழுது பலதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்கள் சுலபமான முறையில் வாக்களிப்பை மேற்கொள்ள பரவலாக வாக்குச் சாவடிகள் அமைக்கப் படுகின்றன. அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் எந்தவித நெருக்கடிகளுமின்றி வாக்களிக்கத்தக்கவாறு வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை இருக்கிறது.



இதன் மூலம் மக்கள் தமது சனநாயகஉரிமையைப் பிரயோகிக்க முடியும். தேர்தல் வன்முறைகள், முறைகேடுகளை ஒருபுறம்தள்ளி வைத்துவிட்டுப்பார்த்தால் இது சாத்தியமான ஒன்றே.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவ்வாறன வசதிகளைக் கொண்டவர்களாக இல்லை. ஏனெனில் அவர்கள் வாழும் பகுதிகளில் பரவலான வாக்குச்சாவடிகள் அமைத்தல் என்பது நிராகரிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. அடுத்து என்ன என்ற கேள்விக்கு இதனை வாசிக்கும் போது சிலவேளைகளில் உத்தியோக பூர்வமானமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது அவர்கள் ஏனைய பகுதி மக்களைப் போல சுலபமான முறையில் சென்று வாக்களிக்கக்கூடிய வகையிலானதாக இராது.

பெரும்பாலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கொத்தணி வாக்குச்சாவடிகளுக்குச் சென்றே அவர்கள் வாக்களிக்கவேண்டி வரும். எவ்வாறாயினும் வழமைபோல பல சிரமங்களின் மத்தியிலேயே அவர்கள் வாக்களிக்கவேண்டிவரலாம்.அதற்கு படையினரால் முட்டுக்கட்டைகள் போடப்படலாம் என்ற சந்தேகம் பல தரப்பினரிடையேயும் உண்டு.

இவ்வாறான நிலையில் இம் மக்கள் சுலபமான முறையில் வாக்களிப்பதை, முடிந்தால் வாக்களிப்பதையே தடுக்கும் நோக்கம் கொண்டதாகவே ஜே.வி.பி. உள்ளது. அவ்வாறு சுமுகமானமுறையில் தமிழ்மக்கள் அனைவரும் வாக்களிக்க முடிந்தால் அது தமிழ்க்கூட்டமைப்பின்- தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துவிடுமோ என்ற அச்சம் சிங்கள இனவாதிகள் மத்தியில் உண்டு.

இதேவேளை ஈ.பி.டி.பி. போன்றவற்றுக்கும் இதே அச்சம் உண்டு. 1994 தேர்தலில் சில ஆயிரம் மக்களை மட்டுமே கொண்ட தீவகத்தில் மட்டும்



நடைபெற்ற தேர்தலில் 09 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பின்னர் ஓரளவு சுமுகமான நிலையில் தமிழ் மக்கள் வாக்களித்தபோது இரண்டு ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்ததும் அதன் அனுபவமாகும். எனவே தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களித்தால் தமக்கு ஏற்படக்கூடிய நிலையை ஈ.பி.டி.பி. புரிந்துகொண்டிருக்கும். தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களிப்பில் கலந்துகொள்வதை ஈ.பி.டி.பி.விரும்பாது. இந்த நிலையில்தான் சுயேட்சையாகப் போட்டியிடும் ஆனந்தசங்கரியும் உள்ளார். எனவே அவ்வாறாக தமிழ்மக்கள் சுமுகமான முறையில் வாக்களிப்பதை அவரும் விரும்பமாட்டார் என்பது ஜே.வி.பி.க்குத் தெரியும்.

அதேவேளை ஈ.பி.டி.பி. யினர் எப்பொழுதும் தமக்கு ஆதரவாகவே செயற்படுவர் என்பது ஜே.வி.பி.யினருக்குத் தெரியும்.

இப்போது ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக் குழுவும் தமிழ்மக்களுக்கு எதிராகச் செயற்படுவதை ஜே.வி.பி.புரிந்து கொண்டுள்ளது. எனவே தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக்கொண்ட ஜே.வி.பி, ஈ.பி.டி.பி.யினரையும் ஆனந்த சங்கரியையும் கலந்தாலோசித்தே வடக்கு-கிழக்கில் தேர்தல் குறித்து முடிவெடுக்கவேண்டும் எனக் கோரியுள்ளது.

இதன்மூலம் ஆனந்த சங்கரி குழுவினரின் உண்மை வடிவத்தையும் ஜே.வி.பி.வெளிப்படுத்தியுள்ளது.

**வேலவன்**

---

# விசுவாசத்தின் வெளிப்பாடே கதிர்காமரின் சீற்றம்

சிறிலங்காவின் ஊடகத்துறை அமைச்சரும் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமரின் அண்மைய கோபத்திற்கு உள்ளானவர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மைக் ஓ பிறெய்ன்.

காரணம் மைக் ஓ.பிறெய்ன். "நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளால் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் - யுத்தநிறுத்தத்தை பாதிக்காத வகையிலும் சிறிலங்காவின் அரசியல் வாதிகள் நடந்துகொள்ளவேண்டும்'' என கேட்டுக் கொண்டமையேயாகும்.

இதிலும் முக்கியமாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கூறியது நீதியாகவும் நியாயமாகவும் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதுடன் வாக்காளர்கள் தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதே ஆகும்.

ஏனெனில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முழுமுதற் பொறுப்பு சனாதிபதி சந்திரிகாவே காரணம் என்பதால் இந்தத் தேர்தலில் சந்திரிகாவின் கட்சியினை ஆட்சிபீடம் ஏறுவதை மேற்குலகம் விரும்பவில்லை. என்றதன் தொனியே பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் கருத்து வெளிப்படுவதாக கதிர்காமர் கருதியிருக்கக்கூடும்.

இதற்கு அவர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிட்டதன்பால் கதிர்காமர் தெரிவித்த கருத்து சனாதிபதி சந்திரிகாவுக்கான விவகாரத்தை வெளிப்படுத்தும் முகமாகவே இதனை வெளிப்படுத்தி உள்ளார் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஒரு காலக்கட்டத்தில் சர்வதேச ரீதியாக இலங்கையின் வெளியுறவு அமைச்சராக இருந்த கதிர்காமர் இந்த நாடுகளின் தலைவர்களுடன் அதிக ஈடுபாட்டைகொண்டிருந்தார் என்பதுடன் தனது ஈடுபாடு காரணமாக தனிப்பட்ட நட்பு ரீதியாக சர்வதேச ரீதியில் அரசியலில்அதிகம் சாதித்தார் என்றதகவல்கள் முன்பு வெளிவந்தன.

இதனால்தான் ஒவ்வொரு நாட்டிற்கும் விஜயம்செய்த கதிர்காமர் விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்த நாடுகள் தடைகளை ஏற்படுத்தும் அளவுக்கு அவரதுவிஜயங்கள் அமைந்திருந்தன.

அந்தத் துணிவின் அடிப்படையிலும்கூட யாழ் நகரில் இருந்து சூரியகதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக ஒரே இரவில் இடம்பெயர்ந்த யாழ்மக்களின் துயரம் தொடர்பாக அப்போதைய ஐக்கிய நாடுகள் சபைக்கான பொதுச்செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி கவலை தெரிவித்த போது இதே கதிர்காமர் ஐ.நா.சபையின் வேலை மலேரியாவை கட்டுப்படுத்த மருந்து தெளிப்பது என்ற வகையில் கிண்டலாக தனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தார்.

இப்போது எதிர்கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு அமைச்சு பொறுப்பொன்றை ஏற்றிருப்பதன் வாய் வீரத்தை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருக்கு தெளிவாக தெரிவித்திருக்கிறார்.





இங்கே நாம் கவனிக்க வேண்டியது அமைச்சர் கதிர்காமர் வெளியுறவு அமைச்சராக இருந்த போது விமானப்பரப்பிற்கு மேல் பறப்பாக பயணம் செய்து புலிகளிற்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை ஏற்படுத்தி வைத்திருந்தார் புலிகளோ அவரது வியுகத்திற்கு எதிர்மாறாக வன்னியிலிருந்து. கொண்டு வெளிநாட்டு அமைச்சர்களையும் இராஜதந்திரிகளையும் வன்னிக்கே வரவளைத்து புலிகள் மீதான சர்வதேச ரீதியான நல்ல அபிப்பிராயத்தை கட்டிவளர்ப்பதை பொறுக்க முடியாதிருப்பதுதான்.

ஏனென்றால் அமைச்சர் கதிர்காமரின் தூரநோக்கற்ற அரசியல் நடவடிக்கைகளின் தோல்விகளே மேற்குலக நாடுகளின் கருத்துக்கள் இப்போது பிரதிபலிக்கதொடங்கியுள்ளன.

இதனை அவரால் எப்படி பொறுத்துக்கொள்ளமுடியும்.

அதுவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பதவிக்கு கனவுகண்டு அது முடியாமற்போய் பின்னர் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டு படுதோல்வி கண்டு துவண்டு போயிருக்கும் அவரால் எப்படி இந்த தேர்தலில் வெற்றி பெற்றால் சில வேளைகளில் தனக்கு கிடைக்கும் என எதிர்பாககும் பிரதமர் கனவை சிதைக்கும் வகையில் தான் சார்ந்து நிற்கும் கட்சிக்கு சேதத்தை ஏற்படுத்த அவரால் முடியும்.

இவைதான் அமைச்சர் கதிர்காமர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மீதான சீற்றமாகவும் இருக்கும்.

ஆனால் அரசியல் கனறுகுட்டிகள் அல்ல தாங்கள் என கூறும் இந்த அரசியல் மேதாவிக்கு ஏதோஇன்றைய உலகை பகைத்துக்கொண்டு அரசை கொண்டுசெல்லமுடியாது என்பது புரியவில்லை என்பதுதான்.

இதேநேரம் அமைச்சர் அதிக விஜயங்களை மேற்கொள்ளும் அண்மைய நாட்டின் துணிவுதான் காரணமாக உள்ளது போல் உள்ளது. அமைச்சர் கதிர்காமரின் இந்த பாச்சல் இந்த தேர்தல் காலத்தில் அதிகமாக இருக்கத்தான் போகிறது.

இவருக்கு பக்கப்பலமாக இருக்கும் நீலக்கட்சியும் சிவப்புக்கட்சியும் இவரது அதிக பிரசங்கித்தனத்துக்கு ஏற்ற பங்காற்ற தாராளமாக வாசலைத் திறந்துவிடவே செய்தது.

ஆனால் அமைச்சர் கதிர்காமர் இதன் யதார்த்தத்தை புரிந்து கொள்ளப்போவதேயில்லை.

**நக்கீரர்**

# தியாக உணர்ச்சி மிக்க தமிழ்மகன்

**இ.கபிலன்**

இயற்கைத்துறைமுகம் இணைந்த சிறுகுடாக்கடல இங்கு மட்டிகள் விளைச்சல்களின் உச்சத்தால் மட்டிக்கழிக்கடலாகியது. நல்ல தண்ணீர் முனைதுறைமுகத்தின் மலைத் தொடர்களின் ஒருபகுதியாக இருப்பதனால் வனப்பை பருகும் ஆற்றலை லிங்கநகர் பெற்றது. முருகன், பிள்ளையார், யூதாதேயுகோயில்கள் ஊர்மக்களை ஆன்மீக ஆனந்தத்தில் கலப்பவைகளாகும்.அதுவும் யூதாதேயு கோயில் திருவிழா நாட்கள் விஷேடமானது. இத்திருவிழா நிறைவு பெறும் நாளில் நூற்றுக் கணக்கான மக்கள் குவியும் சிறப்பு எழுச்சிமிக்க நிகழ்வ்ரக இருக்கும்.

ஊரின் சிறிய மைதானத்தில் மாலையானதும் கால்ப்பந்தாட்டம் விளையாடும் இளைஞர்கள் இவ் விளையாட்டில் திறன்பெற்ற, ஆற்றல் பெற்ற இளைஞர்களை உருவாக்கிய உருவாக்கி வருகின்ற பெருமை இம்மைதானத்திற்குண்டு. திருமலை மாவட்டரீதியிலான 7பேர் கொண்ட போட்டிகளில் முதலாம் இடவெற்றிக் கிண்ணக்கோப்பைகளை சில தடவைகள் பெற்ற சிறப்புமுண்டு. பாரம்பரியமான திருமலை முதன்மை அணிவீரர்கள் கால்பதித்த இன்னொரு சிறப்பையும் பெற்றே உள்ளது. இப் பூமி சிங்களவர்களது குடியிருப்புக் களால் குடையப்பட்டு தமிழர்களின் தனித்துவத்திற்கு அச்சுறுத்தும் வகையில் ஊர் உள்ளது. சிங்களவர்களால் சூழப்பட்ட ஊராக இருப்பதனால் இம் மக்களது தமிழ்தேசிய பக்தி உன்னதமாகவே இருக்கின்றது.

இவ்வூரிலேயே தன்தாய், தந்தை, சகோதரிகள் சகோதரர்களுடன் இருதயமண்ணன் வாழ்ந்து வந்தார். கட்டுக்கடங்காத உத்வேகமும்,உச்சாகம் நிறைந்த இளமைப்பருவமுமான அவர் தந்தையின் தொழிலிற்கு உதவியாக செயல்பட்டார். சுகயீனமான தந்தை இறந்த நாளிலிருந்து குடும்ப பொறுப்பு மிக்க பக்குவமுள்ளவராக வாழத் தொடங்கினார். மனித உள்ளங்களில் தூங்கிக்கிடந்த அழகை தட்டி எழுப்பி அறியாமையும், மூடபக்தியையும் விரட்டியடிக்க உழைக்கும் பகுத்தறிவாளர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார். மக்கள் சுதந்திரமாக சிந்திக்கும் பகுத்தறிவுவாதிகளாக மாற்றுவதை விடச்சிறந்த பணிவேறு ஏதும் இருக்க முடியுமென உறுதியாக நம்பினார். அவருடன் உறவு வைத்திருக்கும் இளைஞர்களுக்குள் தன்னிடமுள்ள அறிவார்ந்த ,பயனுள்ள விடயங்களை புகுத்தி சீர்திருத்தும் சீர்திருத்தவாதியாகவும் செயல்ப்பட்டார்.சம்பவங்களை நகைச்சுவையாக உடல் அசைவுடன் விளக்கும் அபார திறமையும் வாய்க்கப்பெற்றவர் பேசுவதில் அவருக்குள்ள இயற்கையான திறமை அவரை ஓர் சிறந்த அறிவிப்பாளராக அடையாளம் காட்டியது.

உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே உலகை புது முறையில் உண்டாக்கும் கைகளே எம்.ஜி.ஆர் படப்பாடலைத்தான் அவர் பாடுவார். அவரது நாட்கள் உழைப்புடனே நகர்ந்து பொருளாதார வளம் மிக்கவராக முன்னேற்றம் அடைந்தார். அவரின் வாழ்கை மலர்ச்சி பெற்று உருவடைந்து "தாசன் சிகை அலங்கரிப்பு நிலையம்" நகரில் முதன்மை இடத்தினை வகித்தது அவர் நகைச்சுவை நடிகர் நாகேசின் படமே நிலைய பெயர்பலகையில் பதித்து இருந்தார். மனிதர்களை சீர்படுத்தி நேர்த்தியுள்ள மனிதர்களாக வெளிக்காட்டுவதிலும்,மனிதர்களின் உளநலத்தை சிறப்புறவைத்திருப்பதிலும் சிகை அலங்கரிப்பாளர்களது பணிதுணைபுரிவதாக உளநலநிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இத்தொழிலை நடாத்திவரும் முதலாளியாக இருந்து வரும் அதே வேளை சமூக நல முன்னேற்றபணிகளில் தன்னை ஈடுபடுத்தியவராகவும் செயலாற்றினார்.

சிங்கள பேரினவாத அரசுகளின் எழுச்சியால் சிங்களமொழி வலுப்பெறவும் தமிழ்மொழி ஒதுக்கப் படவும் மொழிப்போர் ஆரம்பித்தது. இவ்வரசியல் சூழ்நிலையால் அவரின் மனதில் தமிழ்தேசிய பக்தியாகிய விதை முளையிட்டு வளரத் தொடங்கியது. அக்காலகட்டங்களில் தான் தமிழ் இளைஞர்கள் அரசியல்போராட்டத்திலீடுபடும்படி நேர்ந்தது. அவரது ஊர் இளைஞனான சத்தியமூர்த்தி (N.S மூர்த்தி)யும். அவரது தம்பி மேரியும் வாலிப முன்னணிக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தார்கள். அரசியல் ஞானமூட்டும் நோக்குடன் வகுப்புக்களை நடாத்தினார்கள் அத்தகைய பணிகளுக்காக தைரியத்துடன் தன் நகரிலுள்ள தங்குமிடத்தினை ஒதுக்கிக் கொடுத்தார். இருதயமண்ணன்.

தமிழ்தேசிய சக்திகளை உருவாக்கும் கருத்து விதைகளை விதைப்பதில் முன்னின்று உழைத்து வந்த மூத்தபுரட்சிகர போராளிகளது சந்திப்பு. கருத்தரங்கு ஆகியவற்றிக்கான இடவசதியை தன்தாயின் பூரண ஒத்துழைப்புடன் சொந்த வீட்டை ஒதுக்கிக் கொடுத்தார். அதில கலந்து கொள்ளும் தன்தம்பி மேரியையும் ஊக்கப்படுத்தினார்.

இப்படி வாழ்ந்து வரும் போது தன் உறவினரான சந்திராவை சீதனம் ஏதுமின்றி முற்போக்கு சிந்தனையுடையதாக திருமணம் செய்தார். அதாவது தன் வீட்டுமுற்றத்தில் தன் விதைவைத் தாய் முன்னணியில் தாய் வழங்கிய மாலைகளை அணிவித்தே திருமண நிகழ்வை நிறைவுசெய்தார். அவர்களின் இல்வாழ்வு இருவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தன.

இக்காலகட்டத்தில்தான் தமிழ் இனத்தை பூரண அடிமைத் தனத்தில் ஆழ்த்தக்கூடிய சிங்களக் கொள்கைக்கு எதிராக போராடிவரும் புலிகளின் மூத்த தளபதி சந்தோஷ மாஸ்ரரின் தொடர்பு தம்பிமேரி மூலம் அண்ணனுக்கு கிடைத்தது.

மாஸ்ரருக்கு புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல் நிதித்தேவையை நிறைவு செய்தல், சிறிய ஆயுதத்தை , வெடிகுண்டினை மறைத்து வைத்தல், பிரசார ஊடக புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், மாஸ்டரை பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல் என அண்ணனின் பணிகள் தொடர்ந்தன நகைக்கடை அசனின் உதவியும் அப்போது அண்ணனுடன் துணை புரிந்தது.

மூத்த தாக்குதல் தளபதி சீலன் வீரச்சாவடைந்த செய்தியை அறிந்து உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்த ஒருநாள் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் எழுதுதல்பணிகள் அனைத்தும் அண்ணனின் தம்பிமேரி, பேபி, ஜெயமதி, பவான் ஆகியோர் முன்னின்று செய்தார்கள்.அதற்கான இட ஒழுங்கு பிற உதவிகள் என அண்ணனே ஏற்பாடு செய்து கொடுத்தார்.

சிங்களவர்களது சரீரத்தில் தமிழ்விரோத எண்ணம் ஊறி இருந்ததால் இனக்கலவரம் வெடித்தது. இக்காலப்பகுதியில் லிங்கநகர் மக்கள் தம்மைப்பாதுகாக்க இளைஞர்களுக்கு தம்மாலான நிதியை வழங்கினார்கள் அதற்கு வெடிமருந்து கொள்வனவு செய்யப்பட்டு வெடிகுண்டுகளாக்கப் பட்டது. அதன் தாக்கத்தினை பரிச்சயம் செய்யச் சென்ற இளைஞர்களுடன் அண்ணனும் இணைந்து இருந்தார். குணம் அண்ணன் தன்னிடமிருந்த உருக்கிலானகட்டை வேட்டைத்துப் பாக்கியை இளைஞர்களிடம் ஒப் படைத்து ஊரை பாதுகாக்க உதவினார். அரசபடைகளின் உதவியோடு உள்நுழையமுற்பட்ட சிங்களக் காடையர்கள் இளைஞர்களால் விரட்டியடிக்கப்பட்ட வீரத்தனமான சம்பவங்கள் ஊரில் நிகழ்ந்தன. அதில் அண்ணனின தம்பிமேரி,ராமு காயப்பட்டுவைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டார்கள். இளைஞர்களை உற்சாகப்படுத்தும் நோக்கோடு அவர்களுடன் இணைந்து பின்புலப்பலமாக அண்ணன் செயலாற்றினார். அத்தோடு பூபதி அண்ணனின் துணிவுமிக்க குண இயல்புகளும் இளைஞர்களது எதிர்த்து போரிடும்மனப் பாங்குக்கு வலுசேர்த்தது.

இளைஞர்களது வேட்டைத் துப்பாக்கி, வெடிகுண்டுகள் ஆகியவற்றை தன் வீட்டுவளவினுள்ள சிறிய நிலவறையில் பாதுகாத்து கொடுத்தவர் சத்திய மூர்த்தி அண்ணரின் தாய். அத்தாயின் வீரப்பண்பால் ஈர்க்கப்பட்ட அண்ணன் அவருடன் நெருக்கமான உறவைப் பேணினார். அவ்வீட்டில் சந்தோஷ மாஸ்டர் தங்கிநின்று சென்ற நாட்களும் உண்டு.

இதில் வேட்டைத்துப்பாக்கி நகருக்குள் கொண்டு போகவேண்டிய தேவை ஏற்பட இருதயமண்ணன் தன்பையினுள் மறைத்து வைத்து சைக்கிள் மூலம் கடற்படையினரின் இறுக்கமான பாதுபாப்பினுள்ளால் கொண்டு சேர்த்து உதவினார்.

ஒருநாள் யாழ்ப்பாணத்திலிருத்து பேருந்து மூலம் பெரிய உழவு இயந்திரடயர் அண்ணனின் கடையடி முன்வந்து இறங்கியது அதனுள் புலிகளால் வெளியிடப்பட்ட அனைத்து புத்தகங்களும், துண்டுப்பிரசுரங்களும் மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்தன அந்தத் தகவலை அண்ணன் அறிந்தே இருந்தார். அதனை தன் நேரடிக்கண் காணிப்பினுள்வைத்திருக்க அவரின் தம்பிமேரியும், அரியமும் பொறுப்பேற்றார்கள். இருவரும் தம் கைகளால் டயரை வீதியில் உருட்டியபடி திருமால்வீதி பாஸ்கரலிங்கம் வீட்டிற்கு கொண்டு சேர்த்தார்கள். அதன் பின் அதனுள் இருந்த பிரச்சார ஊடகங்களை சிறிது சிறிதாக பிரித்து பரவலாக சனங்களுக்கு விநியோகம செய்ய ஒழுங்கு செய்தார்கள். அப் பணியில் அண்ணனும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

இன்னொரு பக்கம் இயக்க மறை முகச் செயற்பாட்டிற்கு பக்கபலமாக திருச்செல்வம், பகீள், கோணேஸ், பீற்றர், சந்திரகார்ந்தன் மாஸ்ரர், விபுலேந்திரன், அருணா, சித்திராவின் அப்பா ஆகியோர்கள் இயங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் மருத்துவபீடமாணவனான விபுலேந்திரன் மற்றும் அருணா போன்றோர் இயக்க நிதி தேவைக்காக சைக்கிளில் மீன்பெட்டி சுமந்து கன கம்மில் சந்தையில் விற்பனை செய் தார்கள். சிங்களப்படை சிங்கள உளவுப்பிரிவினரின் விழிப்புணர்வு ஏற்பட்ட ஆரம்ப காலப்பகுதியாக இருந்தது. அத்தேசிய சூழலில் அஞ்சாநெஞ்சத்துடன் இயக்கம் பலமாக காலூன்ற உதவிய இவ்இளைஞர்களுடன் இருதயமண்ணனின் பலமும் உரம்போட்டது.

அவரின் தம்பி பயிற்சிக்காக இந்தியா சென்றார். சில மாதங்களின்பின் இளங்கோ என்னும் பெயருடன் சொந்த மண்ணில் கால் பதித்தார். அச்சமயம் அண்ணன் சிங்களப்படையின் தேடுதலுக்கு உள்ளாகிய நிலையில் மூதூர்நகர்ப்பகுதியில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார் அங்கு மினி சினிமா கொட்டகை ஒன்றை நிறுவித் தன் சொந்த வருமானத்திற்கான ஒருமுதலீடாக அதை நிர்வகித்து வந்தார். எல்லாவசதிகளுடன் வாழ்ந்த அவருக்கு சில்லறைக்கஸ்ரங்கள் என ஆரம்பித்தது. அதிக கவலையின்றி சகித்துக்கொள்ளும் அவருக்கும் அவரின் மனையாளுக்கும் இருந்ததினால் அங்கும் மகிழ்வான வாழ்க்கையையே வாழ்ந்தார்கள்.

இளங்கோவும் தளபதி கணேசும் அண்ணன் வீட்டுக்கு வந்து உணவு உண்டு பிற உதவிகளையும் பெற்றுச் செல்வது வழமையாகியது. அவர்களின் வாழ்க்கை முன்பைப் போல் வசதியிராத நிலையிலும் தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் செய்யத்தவறவே இல்லை.

இது இப்படியிருக்க விடுதலைப்போரைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் திரைமறைவில் இயங்கினார்கள். அப்பாதகர்களின் ஒருவரான றஞ்சித் என்பவர் அண்ணனின் சினிமா கொட்டகைக்கு வந்து போகும தகவலை தளபதி கணேசுக்கு வழங்கினார். அத்துரோகிமீது கணேசும் இளங்கோவும் இணைந்து கைத்துப் பாக்கியால் அவனைச் சுட்டுக் கொன்றார்கள்.

அண்ணனின் இயக்க உதவிகள் எதிரிக்கு தெரியவரவும் தம்பி இளங்கோ வெருகலில் வீரச் சாவடைந்ததும் அவர் தன் குடும்பத்தோடு மட்டக்களப்புப் பகுதிக்கு சென்று வாழ நிர்பந்திக்கப்பட்டார். அங்கு அவருக்கு ஏதும் நன்கொடை அழிக்கப்படவும் இல்லை அவரின் சொந்த அறிவையும் தைரியத்தையும் கொண்டே அப்பூமியில் வாழக் கூடியவராக இருந்தார் பொருளாதாரச் சுமை வாட்டியதெனினும் அவர் மனோபலம் அணுவளவும் குன்றவே இல்லை அவ்விதம் பலபலநாட்களும் பலமாதங்களும் கழிந்தன.

இந்தியப்படை வருகையோடு சமாதானம் நிலவிவந்தபோதும் இங்கும்மங்கும் சில விபரீதங்கள் தென்பட்டன. இந்தியாவின் அக்கிரமம் நீதிதேவனுக்கே பொறுக்காத நிலையில் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்தார் அதனைத் தொடர்ந்து திருமலை நகரில் கிருபாவின் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போராட்டத் திற்கு பக்கதுணையாக எழுச்சி ஊர்வலங்கள் அடையாள உண்ணா விரதங்கள் என மக்களால் முன்னெடுக்கப்பட்டன. இவ் ஒழுங்குகளை நெறிப்படுத்திய ரவியுடன் இணைந்து அன்னையர் முன்னணியும் கடினமாக உழைத்தார்கள். அதிலும் இருதய அண்ணர் ஓர் அறிவிப்பாளராக, தொடர்பாளராக சுறுசுறுப்பாக இயங்கி அகிம்சைப் போராட்டத்திற்கு பலம் சேர்த்தார்.

இந்தியப்படைவிடுதலைப்புலியின் மீதான பற்றுதலை நசுக்க எவ்வளவுக் கெவ்வளவு முயற்சி அதிகமாயிற்றோ அவ்வளவுக்கவ்வளவு விடுதலைப் புலிகளை மக்கள் நேசிப்பது அதிகமாயிற்று.

ஆக்கிரமிப்புக்கு எதிரான போர்மூண்டது. அண்ணன் தேடுதலுக்கு உள்ளாகினார். குடும்பத்தை பிரிந்து வாழவேண்டியநிலை ஏற்பட இல்வாழ்வு துக்ககரமாக அவருக்கும் மனையாளுக்கும் மாறியது அவர்களது மனோவேதனைக்கு எல்லை இல்லை.

உப்பாறுப்பகுதியில் உள்ள பீச்முகாமில் செல்வண்ணன், மூர்த்தி அண்ணன், குணம்,பிரகாஸ், றோய், தாகூர்,சறோன், வசந்,பரமதேவா, பரமன்,பூபதி,றகுபதி ஆகிய போராளிகள் இருந்தார்கள். அப்போராளிகளின் வாழ்வியல்முறைக்குள் இருதயம்அண்ணர் தன்னை இணைத்துக்கொண்டார்.

-19 ஆம் பக்கம் பார்க்க



பணம் இல்லாமல் இருப்பதை விட, அனுபவம் இல்லாமலிருப்பதே பெருங்குறை. - திபெத் நாட்டுப் பழமொழி

கடந்த வாரம் கிளிநொச்சி மருத்துவமனைக்குப் போகவேண்டியேற்பட்டது. விபத்தொன்றில் சிறியளவில் காயப்படுத்தப்பட்டிருந்தேன்.

சைக்கிளில் சாதாரண வேகத்தில் சென்ற என்னை மோட்டார்பைக்கிளில் வந்தவர்கள் மோதித்தள்ளியிருந்தார்கள். கீழே விழுந்திருந்த என்னை தூக்கி உதவுவதற்குப் பதிலாக தம்மை நியாயப்படுத்தி என்னை பிழைகாரனாக்க முயன்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் என்னுடைய சைக்கிளுக்கு 'பிறேக்' இருக்கா? என்று கேட்டார் ஒருவர். நல்லவேளை 'நீ பிரேக்கைப் பிடித்தாயா' என்று கேட்கவில்லை மற்றவர்.

நான் எழுந்து 'என்னுடைய சைக்கிளை அவர்களிடம் கொடுத்தேன்- பிரேக் இல்லையா இருக்கிறதா என்று பார்க்கும்படி.

வலம்மாறிவந்து தாக்கியதுமில்லாமல் வாய்முந்திக் கதைத்து தம்மை குற்றவாளி நிலையிலிருந்து பாதுகாத்துக்கொண்டு தப்பிப்போதல் தான் அவர்களின் குறி.

இப்படித்தான் பெரும்பாலான விபத்துக்களின் போதும் நிகழ்கின்றது.

இவ்வாறான அனுபவம் உங்களின் பலருக்கேற்பட்டிருக்கும்.

பெரிய விபத்துக்கள் மட்டும் தான் காவல்துறை, நீதிமன்றம் என்ற அளவில் போகின்றன. அப்படி யானவை மட்டும் தான் மீடியாக்களிலும் செய்தியாகி வெளிவருகின்றன.

ஆனால், தினமும் சிறு சிறு விபத்துக்கள் பல நடந்துகொண்டிருக்கின்றன. இந்த விபத்துக்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவுமல்ல, சாதாரணமானவையுமல்ல.

இவ்வாறான விபத்துகளின்போது ஏற்படுவதெல்லாம் வாகனங்களுக்கோ ஆட்களுக்கோ சிறிய சேதம் என்றுதான் இவற்றைப் பார்க்கின்றோம். அப்படியானால் காவற்துறை, நீதிமன்றம் என்ற அளவுக்கு போகவேண்டிய அவசியமில்லை என்று விட்டுவிடுகிறோம். இதனால் இந்த விபத்துக்களைப்பற்றி நாம் பெரிதாக காவனமெடுத்துக்கொள்வதுமில்லை.

ஆனால் இந்த விபத்துக்களால் ஏற்படுகின்ற வாகனங்களின் சேதாரம் அல்லது சிதைவு சிறிதாக இருக்கலாம். அதைப் பொறுத்தும் கொள்ளலாம். ஆட்களுக்கேற்படும் சேதத்தை அல்லது தாக்கத்தை அப்படி விட்டுவிடமுடியாது.

சிறுகாயம், சிறியநோவு, சிலவேளைகளில் பெரிய அளவிலான விளைவுகளை, பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

வைத்தியசாலையில் எனது சிறுகாயத்திற்கு விபரம் கேட்டகளைப் பற்றியும் சகலதும் கவனத்தில் கொள்ளவேண்டியே இருக்கிறது.

சாதாரண சிறு விபத்தாகக் கருதப்படும் அத்தகைய சம்பவங்களினால் சிலருக்கு கால் கூட அகற்றப்பட்டிருக்கிறது.

விபத்தின் போது பாதிக்கப்பட்டவர் ஒரு நீரிழிவு வியாதிக்காரனாயின் அவருடைய காயம் ஆறாது அது பெரிய விளைவையே ஏற்படுத்தி விடுகிறது.

ஒரு இருதய நோயாளிக்கு விபத்தின் அதிர்ச்சி பெரும் தாக்கத்தையே தந்து விடும்.

இளவயதில் ஒருவர் தினமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வாறான விபத்துக்களால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமானது.

சட்ட நடவடிக்கை மையங்களின் கவனத்திற்கு இவை போகாமல் இருதரப்பாலும் உடனடிச் சமரசத்துக்குள்ளாகித் தணிந்து போகும் நிலையால் இவற்றுக்கான தீர்வுகளும் கவனத்திலில்லாமல் போய் விடுகின்றது.

மருத்துவமனைக்கு வரும் போதுமட்டும் இந்த விபத்துக்களின் பாதிப்புக்கள் தெரிகின்றன. எத்தனை வகையான விபத்துக்கள், எவ்வளவு தொகையாக நடக்கின்றன என்பதும் அப்போதுதான் தெரிகிறது.

...றார்கள்.

உயரத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள் கூட பாதுகாப்புப் பட்டியோ, கவன ஏற்பாடுகளோ இல்லாமல் தான் பணிசெய்கிறார்கள்.

இப்போது கட்டட வேலைகள், நிர்மாண வேலைகள் எல்லாம் துரிதமாகவும் ஏராளமாகவும் நடக்கின்றன இந்தத் தொகையின் அடிப்படையில் விபத்துக்களும் விளைவுகளும் கூட நிகழ்கின்றன.

பொதுவாக இந்தப் பாதிப்புக்களிலிருந்து மீழ்வதற்கு சகலருடைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் அவசியமாகின்றது.

ஒருவருடைய பொறுப்பின்மையும் அவதானக்குறைவும் அவரையும் அவரால் பிறரையும் பாதிப்புக்குள்ளாக்கின்றன.

# இங்கே கவனிக்கவும்

# இவை சாதாரணமானவையல்ல



மருத்துவர் கூறிய விடயங்கள் ஆச்சரியங்கொள்ளவைத்தன.

இதுமாதிரிக் 'கேஸ்'கள் தினமும் தங்களுக்கு வருவதாக அவர் கூறினார்.

இவைகளைப்பற்றி- இது மாதிரியான விபத்துக்களைப் பற்றியும் அவற்றின் தாக்கவிளைவு தன்னுடம்பில் எங்காவது ஓரிடத்தில் இம்மாதிரி விபத்துக்களால் படுகின்ற நோவு பின்னர் அவருக்கு வேறு விளைவுகளைத் தருவதாக இருக்கும்.

இந்த சிறு விபத்துக்களின் உடனடி விளைவுகளை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளாததால் அவை அப்படியே தேக்கமாகிவிடுகின்றன.

பொதுவாகவே வீதி ஒழுங்கு, சாரதிப்பயிற்சி, சாரதியத்துக்கான ஒழுங்கு- விதி-முறைகள் என்பன எங்களிடத்தில் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

வாகனப் பெருக்கம் அதிகமாயிருக்கும் சூழலில் ஏதாவதொரு பொருத்தமான நடைமுறைக்கு நாங்கள் போகவேண்டி இருக்கிறது. இது தவிர்க்கமுடியாததும் கூட.

மதிப்பீட்டின்படி பார்த்தால் கூட அன்மைக்காலத்தில் நிகழ்ந்த விபத்துக்களில் உயிரிழப்புக்கள் கடும் பாதிப்பைத் தந்திருக்கின்றன. பல உடல் உறுப்புச் சேதங்கள், பிற சேதங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஏனையவை மேலே சொன்னவாறா யமைந்தவை.

வாகன விபத்துக்கள், வீதி விபத்துக்களைத் தவிர தொழிற்கூடங்கள், வேலைத்தளங்களில் நிகழும் விபத்துக்களும் இப்போது அதிகமாகத்தானிருக்கின்றன. போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யாமலே எல்லோரும் வேலை செய்கி...

இதைவிட விழிப்புணர்வின்மைதான் அதிகமதிகம் துயரத்தையும் சேதத்தையும் தருவது. பல விடயங்களையும் பேசிய பிறகு மருத்துவர் கேட்டார்.

"நீங்கள்கூட இந்த விபத்தைபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமற்தானே இருக்கிறீர்கள்? ஆனால் உங்களின் காலில் உள் நெரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன பார்த்தீர்களா" என்று.

இந்த நோவு நீங்குவதற்கும் சுமாராகத் தேறுவதற்கும் எப்படியும் இரண்டு வாரங்கள் வரையில் செல்லும்.

ஆனால் அந்த விபத்தின் கணங்கள் அப்போதே எந்தச் சுவடுமின்றி மறைந்து போயின.

இங்கே வடுவும் நோவும் தான் தங்கிவிட்டன.

**வெளிவாசல் பாலன்**

---

# உலக மொழிகளில் தமிழ்...


## சில அவதானங்கள்

கறி என்பதற்கு ஆங்கிலச் சொல் என்ன? என்று யாரேனும் உங்களை கேட்டால் நீங்கள் உடனே Curry என்று கூறிவிடுவீர்கள். தமிழ் மொழிச் சொல் 'கறி' என்பதற்கும் அதற்கான ஆங்கிலப்பதம் Curry என்பதற்குமிடையே தொனி ஒருமிப்பை நீங்கள் உணர்வீர்கள் அல்லவா. அவ்வாறானால் கறி என்பது ஒன்றில் தமிழ்ச்சொல்லாக இருந்து ஆங்கிலத்திலும் பயின்று வருதல் வேண்டும். அல்லது ஆங்கில சொல்லாக இருந்து தமிழில் அவ்வாறே பயின்று வருதல் வேண்டும். கீழைத்தேய. மேலைத்தேய உணவு பழக்கவழக்கங்கள். சமூக பண்பாட்டு அம்சங்களை வைத்து ஆராய்கையில் கறி என்பது தமிழ் என்பதும் அது ஆங்கிலத்திலும் அவ்வாறே வழக்கிலிருந்து வருகிறது என்ற முடிவுக்கு வரலாம்.

உலகின் ஆதி மொழிகளான கிரேக்கம். இலத்தீன். சமஸ்கிருதம். பாளி. சீனம் ஆகியவற்றோடு தமிழும் ஒன்றாக திகழ்கிறது. இத்தகைய ஆதிமொழியான தமிழ் இலக்கண. இலக்கிய செழுமை மிகுந்தது. பழைமை வாய்ந்த மொழியெனினும் இன்றும் இளமை குன்றாது இயங்குகிறது. தொடக்க காலத்தில் தமிழ் மொழி பிறமொழிகளிடம் இரவல் பெறாமல் (சொற்களை) தனித்தே இயங்கியது. எனினும் பிற்காலத்தில் அந்நிய மொழிகளின் சேர்க்கையால் பிறமொழிச்சொற்கள் தமிழையே ஆக்கிரமித்துக்கொண்ட துயரம் தோய்ந்த பக்கம் ஒரு புறமிருக்க. பிறமொழிகளில் தமிழ்ச்சொற்களும் நுழைந்து நிலைபெற்று இன்றும் அம்மொழிகளில் வழங்கிவருகிறது. என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்விடயம் தமிழின் சேய் மொழிகளான தெலுங்கு. கன்னடம். துளு. மலையாளம். குடகு கோண்டா. துத்தம்.ராஜ்மகால். ஒராவோன். ஆகிய மொழிகளில் தமிழ்சொற்கள் மிகுதியாக நின்று வழங்கி வருவது இயல்பே எனினும் அதற்கும் அப்பால் ஆங்கில முதலான உலக மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கதொன்றாகிறது.

இவ்வகையில் அனைத்துலக மொழியான ஆங்கில மொழியிலும் குறிப்பிடத்தக்க அளவு தமிழ்ச்சொற்கள் வழக்கிலுள்ளன. அத்தகைய சொற்களில் ஒன்றே 'கறி' என்பதாகும். இவ்வாறு பிறமொழிகளில் பயின்று வரும் தமிழ்ச்



சொற்களைப் பற்றிய ஆய்வுகள் முழுமையாக செய்யப்படாமல் இருப்பது பெருங்குறையாகும். இது மிகுந்த சிரமமானதும் சிக்கலானதுமாகும் என்பதும் உண்மையே. எனினும் பிறமொழிகளில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் என மொழிபற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் குறிப்பிட்ட சொற்களைத்தானும் நம்மில் பலர் இன்றும் அறியாதிருக்கின்ற நிலை தொடரவே செய்கிறது. இதனால் தமிழ்ச் சொற்களையே அந்நிய மொழிச்சொற்களாக கருதிவிடும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விடுகிறோம். அறியாமை இருளுக்குள் அகப்பட்டுக்கொள்கிறோம்.

மேலும் ஆங்கில மொழியில் கறி(Curry) என்பவற்றினைவிட கட்டுமரம் (CATAMARAN). அணைக்கட்டு (ANNICUT). அரிசி(RICE) மாங்காய் (MANGO). மிளகுத் தண்ணீர்(MULLAGI TAWNY). மண்வெட்டி (MAMOTY) சுருட்டு (SERUTE). கூலி (COOLIE) போன்ற பல தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் வழக்கிலுள்ளன.

இதனைவிட. கிரேக்க மொழியில் அரிசி(அறோசா) தோகை (துகி) முதலிய தமிழ்ச்சொற்களும் எகிப்திய மொழியில் அப்பா - அத்தான் (அத்) முதலிய தமிழ்ச்சொற்களும் வழக்கிலுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

யப்பானியருக்கும் தமிழருக்குமிடையே மொழி. பண்பாட்டு அம்சங்களில் ஒற்றுமைகள் காணப்படுவதாகவும் அவை தமிழருக்கும் யப்பானியருக்குமிடையே நெடுங்காலம் நிலவிய தொடர்புகளால் ஏற்பட்டவை என்பதும் அண்மைக்கால ஆராய்ச்சிகளில் ஆதார பூர்வமாக நிரூபணமாகியுள்ளன. அவ்வகையில் யப்பானிய மொழியிலும் பல தமிழ்ச் சொற்கள் வழக்கிலுள்ளதாக அவ்வாராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் சிங்கள மொழியிலும் ஆயிரக்கணக்கான தமிழ்ச்சொற்கள் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

தமிழில் மிகுதியாக சொற்களை கலக்க செய்த சமஸ்கிருத மொழியிலும் கணிசமான எண்ணிக்கையில் தமிழ்ச் சொற்கள் புழக்கத்திலுள்ளன. மீன்.நீர். நிலம். கூந்தல். குடிசை.கலை. பழம். பூசை என்பன அவற்றுள் சிலவாகும். என மொழியியலாளர்கள் கூறுகின்றனர். இதில் பூசை என்ற சொல் சர்ச்சைக்குரியதொன்றாக இருந்து வந்துள்ளது. அதாவது பூஜா என்ற வட சொல்லே தமிழில் பூசை என வழங்குவதாக சிலர் வாதிட்டனர்.இதனை நம்பி வந்த சூழ்நிலையில் 'பூசெய்' என்ற தமிழ் சொல்லே பிற்காலத்தில் 'பூசை' மருவி வழங்கலாயிற்று என்பதும் அதுவே வடமொழியில் பூஜா என அழைக்கப்படுகிறது என்பது பின்பு அறிஞர்களால் சான்றாதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டன. தமிழ்சொற்களையே நாம் அறியாமையால் பிறமொழிச்சொற்களாக கருதி. அந்நியப்படுத்திவிடும் ஆபத்தை இவ்விடயம் தெளிவாக சுட்டிநிற்கிறது.

பிறமொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்கள் பற்றிய நடுநிலையானதும் விரிவானதுமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுமிடத்து. உலக மொழிகளில் கலந்துள்ள தமிழ்ச்சொற்கள் பற்றிய புதிய தகவல்கள் பல வெளிவரலாம். அவ்வாறு வரும்போது அந்தந்த மொழிகளுக்கும் தமிழ்மொழிக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகள் இதன் மூலம் தெரியவரும். அந்தந்த மொழி பேசும் இனத்தாருக்கும் தமிழருக்குமிடையிலான அரசியல். பொருளாதார. சமூக பண்பாட்டு வரலாற்று. தொடர்புகள் பற்றிய பல அரிய தகவல்களைக் கொண்டு வருவதாய் அவ்வாராய்ச்சிகள் அமையும் என்பது திண்ணம். இத்தகைய ஆராய்ச்சிகள் தமிழின் தொன்மைக்கும் அதன் ஆளுமைக்கும் மட்டுமின்றி. அது நின்று நிலவிய புலங்களையும் அப்புலங்களின் பின்னணிகளையும் சான்றுகாட்டுவதாய் அமைவதும் உறுதி.

**தருமைவதனன்.**

## "முதுமையைப் பேணி முதியோரை மதிப்போம்" முதுமையியல் ஓர் ஆரம்ப வாசல்

# துளிராகி விழுதாகி அரவணைப்பின்றி சருகாகிப் போன முதுமை

**எஸ். ஜெயானந்தன்**

முதுமைபேண் விருத்திகள் மூன்றாம் உலக நாடுகளில் மொட்டாகி, மொட்ட விழ்ந்து மலராது சருகாகிப்போகும் ஓர் தொய்வு நிலைப் போக்கே காணப்படுகின்றன. இந் நிலைக்கு இலங்கையும் ஆட்பட்டு, அதனூடாக சமூக சமநிலையின்மையினைத் தோற்றுவித் துள்ளது எனலாம். இச்சமநிலை இன்மையானது இந் நூற்றாண்டில் இப்பிரச்சினையினை இழிவுநிலைப் புள்ளியிலிருந்து உயர்வுநிலை நோக்கி நகர்த்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவை, நாட்டில் அதிகரித்த முதியோர் இல்லங்களும், அதனூடாகவே கூடிச்செல்லும் அங்கத்தவர் தொகையையும், அதற்கான வளப்பற்றாக்குறையையும் எடுத்துக்காட்டு கின்றன. இன்றைய இத்தகைய நிலைக்கு உயர்தகவல் தொழில்நுட்பப் பரிவர்த்தனையும், அதிகரித்த வேலைப்பழுவும், அதனூடே ஏற்பட்ட நாகரீகப் பன்முகப்படுத்தலுடன், அதன் வயப்பட்ட இளம் சமூகமும், இதன் பயனாக உண்டான பொருளாதார (குடும்ப) பற்றாக்குறை யுமே காரணமாக அமைந்தன.

அத்தோடு இளம்சமூகத்தின் இளம்துள்ளல் போக்கும், இன்றைய சூழ்நிலை காரணமாகப் பராதீனப்படுத்தப்பட்டுச் சிதைவு பெற்ற மனிதாபிமான சிந்தனைகளும், தொழில்நுட்பப் பரவலாக்கல் என்ற பதத்தால், உட்புகுத்தப்பட்ட கலாச்சார வலையமைப்பும் "முதுமை" என்ற முத்தான சொத்தைப் பேணும் மானிட சமூக அமைப்பில், அதற்கான இட ஒதுக்கீட்டில் அவர்களின் மனநிலையில் ஓர் வறுமை நிலையே காணப்பட்டதென்றால் மிகையாகாது.

ஆனால், முதுமையாளர்களின் இறந் தகாலமானது, வளமானதாகவும், வாழ்க்கைப் பண்புகள் நிறைந்ததாகவும், அன்பு, அறன் கொண்டதாகவும், தமக்கெனவும், தம் எதிர்கால சந்ததிக்கென மீதப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்புக்களைத் தமது வசதிக்கு ஏற்ப கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றன.

இத்தகைய வசதி வாய்ப்புக்களைக் கொண்ட "முதுமைகள்" (முதியோர்) எதிர்பார்ப் பது இன்றைய சமூகத்திடமிருந்து தங்கப் பதுமைகளோ அல்லது தங்கத்தட்டில் தாம் பூலமோ அல்ல அன்புடன் கூடிய அரவணைப் பையும் அதனுடன் கூடிய உண்டியும், உடையும் ஆகும். அதாவது, ஆக்கிய கூழும் அன்பும் அவர்கள் வாழ்வில் இன்பத் தென்பூட்டும் செயலாகும்.

ஆனால் இன்று, இவையனைத்தும் ஒரு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்ட செயற்பாடு போன்றே காணப்படுகின்றன. இத் தகைய நிலையால் ஏற்பட்ட அவமானமானது முதியோர் வாழ்வில் அவர்களது எதிர்காலம், "கனவுக்கொள்கையிலும்" கண்டுகொள்ள முடியாத ஓர் சிந்தனையாக அமைந்ததால், அவர்களால் தமது நிகழ்கால வாழ்வு நிலையினை ஜீரணிக்கமுடியாததொன்றாக அமைந்துவிட்டதெனலாம்.

"முதுமை" என்பது எப்போதும் மதிக்கப்பட வேண்டியதுடன், சுகவாழ்வு கொடுக் கப்பட வேண்டியதொன்றாகும். இங்கு சுகவாழ்வு என்பது உடல் ரீதியான இம்சைகளைத் தவிர்ப்பதுடன், உளம் சம்மந்தப்பட்ட நெருக்கீடு களையும் கொடுக்காது ஓர் சுதந்திர உணர்வுடன் கூடிய வன்மமற்ற இன்ப அன்பு நிலையினை அல்லது அச்சூழலை ஏற்படுத்துதல் ஆகும்.

ஆனால் முதியோர் வாழ்வில் "இன்பஅன்பு" என்ற நிலையானது இந்த நூற் றாண்டினை பொறுத்தவரை அதுஓர் பகற்கனவு ஆகும். இதற்கு பல்வேறு பட்ட பல்நிலைக் காரணங்கள் பின்னணியாக அமைவதைக் காணலாம்.

இன்றைய சுருங்கிவரும் குடும்ப அமைப்பும் விரிந்துவரும் தகவல் தொழில்நுட்ப பரிவர்த்தனையும் பல்ஊடகங்களின் கலாச்சார பரிமாற்றத்தால் ஏற்பட்ட "புதியவை புனைவும்" இதன் பயனாக மனித குலத்தில் உண்டான எழுந்தமான போக்குகளும் "முதுமையியல்" ஓர் ஆய்வுப்பொருளாக இன்று மாற்றங்கண்டது எனலாம்.

இந்தவகையில், இன்று யாழ்குடா நாட்டினை எடுத்து நோக்குகையில், முதியோர் பலர் அடிமைகளாகவும், ஆதரவற்ற அநாதை களாகவும், பணமிருந்தும் பாசம்காட்ட ஆளில் லாது பாசத்திற்கு ஏங்கும் ஜீவன்களாகவும், பணத்தினைக் கொடுத்து வாடகைப்பாசத் தினைப் பெறும் சூழ்நிலைக் கைதிகளாகவும் காணப்படுகின்றனர்.

உள்நாட்டு வாழ்மக்களின் வறுமை, போர், பொருளாதாரத்தடை என்பவற்றின் விளைவால் குடும்பங்களின் மத்தியில் ஏற்பட்ட இழப்பு (மரணம் அல்லது ஊனம்) காரணமாகக் குடும்பங்கள் மத்தியில் போதிய பராமரிப்பின்மை யும், முதியோர் மீது போதிய கவனங்கொள்ளல் இல்லாது போகக் காரணமாயின.


அதாவது ஓர் குடும்பத்தில் இளம் வயதையுடைய ஒருவர் காணாமல் அல்லது இறந்து அல்லது ஊனம் அடைய நேரிட்டால் அவ் இளைஞன் அக்குடும்ப பொருளாதார சுமைதாங்கியில் முக்கிய பங்கினைக்கொண் டிருந்தால் இவ் இழப்பினூடாக ஏற்படும் விரக்தி நிலை ஓர் நிலையற்ற மன உணர்வை தோற்று வித்துவிடும். இந்நிலையானது அக்குடும்பம் சார்பில் தங்கி வாழும் முதுமைகள் மீது ஓர் விளைவைத் தோற்றுவித்துவிடுகின்றன.

இந்நிலையானது அக்குடும்பம் சார்பில் வாழும் முதியோருக்கு மனஉடைவை ஏற்படுத் திவிடும் இதன் காரணமாக ஏற்பட்ட மனஉலைச் சலைப் போக்க அவர்கள் அக்குடும்பம் சார்பான தமது இருப்பை விலக்கத்துணிந்து அதனூடாக ஏற்பட்ட வெளியேற்றம் ஓர் அநாதை நிலை மைக்கு ஆட்படுத்திவிடுகின்றது.

மேலும் பிள்ளைகள் அற்ற முதி யோர்கள் (விழுதுகள்) அவர்களின் உரித் தாளர்களின் ஆசைவார்த்தைகளால் சொத்துக் கள் அபகரிக்கப்பட்டு பின் தனித்துவிடப்படல் போன்றன முதியோருக்கான தகவல் பொரு ளாதார பாதுகாப்புப் பிரச்சினைகளை தோற்று வித்துவிடுகின்றது எனலாம்.

இவ்வாறு பெருக்கெடுத்தோர் முதியோர் பிரச்சினையானது முதியோருக்கான பொது வாழ்விடங்களின் தேவையையோ அல்லது அவசியத்தையோ நீழ்ச்சியடையச் செய்தன. இவ்வாறு நீழ்ச்சியடைந்த தேவைக்கு ஏற்ப யாழ்.குடாநாட்டு முதியோர் மையங்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை முதியோர் இல்லங்களானது மரபு வாய்ந்த வசதிவாய்ப்புக்களையும் மட்டுப்படுத்தப்பட்ட இடவமைப்புக்களையும் கொண்ட நவீனமயப் பாடு குறைந்த தகுந்த முகாமை செயற்திட்டங் கள் குன்றிய இல்லங்களாகவே காணப்படு கின்றன.



இதன்பயனாக அதிகரித்த முதியோர் வருகைக்கு ஏற்ப தம்மை சுதாகரித்துக்கொள்ள வேண்டிய நிலையே இங்கு காணப்படுகின்றது. அத்தோடு சிறந்த போதிய பணியாளர்கள் இல்லாததுடன் முதுமையியல் போதிய பயிற்சி பெற்ற பணியாளர்களும் அரிதாகவே காணப்படு கின்றனர்.

இதன் விளைவாக முதியோர் இல்லங்கள் தமது சேவையில் முழுமை பெறமுடியாது திண்டாடுவதை காணலாம். இங்கு சேவை மனப்பான்மை கொண்ட தாதிகள் வைத்திய நிபுணர்கள் சிறந்த உளநல ஆற்றுப்படுத்தலாளர்கள் உடற்பயிற்சி நிபுணர்கள் ஆன்மீகப்போதகர்கள் முதுமையியல் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் தோட்டக்கலை நிபுணர்கள், சமையற்கலை நிபுணர்கள், பொழுதுபோக்கு ஒழுங்கமைப்பாளர் கள், என்போருக்கு பற்றாக்குறை காணப்படுவ தோடு இச்சேவைக்கு உள்வரும் பணியாளர்கள் பலர் சேவைமனப்பான்மையைவிட தொண்டு ளிய அடிப்படையை (சம்பள அடிப்படை) நோக் காக கொண்டிருத்தலும் பெரும் குறைபாடாகும்.

எனவே இத்தகைய குறைபாட்டினைப் போக்க வேலையற்றிருக்கும் துறைசார் பட்டதாரிகள் இச்சேவைக்கு உட்புகுவதோடு தொண்டூளியத்துடன் கூடிய சேவையினை ஆற்றுகின்றபோது வேலையற்றோர் என்ற தமது பிரச்சினையில் இருந்து விடுபடவும் இவர்களுக்கு சேவைசெய்தோம் என்ற மனமகிழ்வையும் பெறமுடியும். இதற்காக அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதிரீதியான பங்களிப்பினை மனிதாபிமான அடிப்படையில் செய்தல்வேண்டும்.

இத்தோடு இன்று முதியோர் இளைய சக அமைப்பினால் மதிக்கப்படாத தன்மையும் இன்றைய சமூகக்கட்டமைப்பில் பெரும் குறை பாடாகக்காணப்படுகின்றது. இதற்கு கலாச்சார மாற்றத்துடன் கூடிய கல்விப் போதனை முறைகளும் குறைபாடாக அமைகின்றன.

எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடு களை தவிர்ப்பதற்காக "முதுமையியல்" என்ற பாடத்திட்டம் மாணவர்கள் மத்தியில் சிறு பராயம தொட்டே போதிக்கப்படுதல் சிறப்பானதாகும்.

இதனூடாக இன்றைய இளையோரே நாளைய முதியோர் என்பதை புரியவைப்பத னூடாக இன்று நாம் செய்பவைதான் நாளை நமக்கு என்ற யதார்த்த நிலையினை உணர வைத்தல் வேண்டும். இதனூடாக அன்பு அறன் எனும் நிலையினை வளர்த்து ஓர் அறிவியல் பூர்வமான சிந்தனைச் சமூகத்தை உருவாக்க முடியும்.

முதியோர்களின் மரணச்சடங்குகளில், லண்டன், கனடா, சுவிஸ், ஜேர்மனி, நோர்வே, அமெரிக்கா, என தமது பெயர்களுக்குப் பின் னால் படிக்காத பட்டங்களாக சூட்டி மகிழ்வுடன் மரண அறிவித்தல்களைக்கொடுக்கின்றனர்.

இருக்கும்போது கிடைக்காத அன்பும், உதவியும் இறந்த பின்பு அறிவித்தலும் (மரண), கொண்டாட்டமுமாக மாறுவது பெரும் மன வே தனைக்குரிய செயற்பாடாகும். அதாவது இருக் கும்போது உண்ண உணவும், உபசரிக்க ஆளும், அன்பு கொள்ள மகவும், ஏனைய வசதி களும் ஒழுங்காகக் கிடைப்பதில்லை, ஆனால் இறந்த பின்பு "பல்லக்குப் பவனி" என்ற நிலை மாற்றப்படவேண்டும் அல்லது மாற்றம் காணவேண்டும்.

இப்படிப்பட்ட இருள்சூழ்ந்த விழுது களின் (முதியோர்) வாழ்வானது, இருக்கும் போதே இருப்பைச் செம்மைப்படுத்துவதாக அமைதல் வேண்டும். இதற்காக இவர்களின் ஏழ்மை (பணம், அன்பு) வாழ்வானது, கொடை வள்ளல்கள், மற்றும் மனித நேயம் கொண்ட வர்கள், பொது அமைப்புக்கள் என்பவற்றின் உதவியுடன் ஒளியூட்டப்பட்டு, சுகவாழ்வு கிடைக்க வழிசெய்தல் வேண்டும்.

இவர்கள் நம்நாட்டின் இறந்தகாலச் சிற்பிகள் எம் சமூக உருவாக்கத்தின் அடிச் சுவர்கள், கலாச்சார கட்டுமானத்தின் ஆலம் விழுதுகள், இவர்கள் இன்று சருகாகிப் போனாலும், அன்பின் அடிவேர்கள்.

எனவே இவர்கள் அன்பு செலுத்தப் பட வேண்டியவர்கள், அகமகிழ்ந்து அரவணைக் கப்பட வேண்டியவர்கள், சுகவாழ்வும், சுதந்திர மும், அதனுடன் கூடிய மன நிம்மதியும் அளிக் கப்படவேண்டியவர்கள்.

இப்படிப்பட்டவர்களை கடந்தகால வன் செயலானது, முதியோர் இல்லங்களையும் விட்டுவைக்கவில்லை. அடைக்கலம் தேடி வந்த அநாதைகளை அலற அலற அடித்துக் கொண்ட அவலமான ஓர் நிகழ்வு கைதடி முதியோர் இல்லமான "சாந்திகத்தில்" நடந்தேறியமை நெஞ்சைப் பிசைந்து பிழியும் நிகழ்வாகவே அமைகின்றன.

இவ்வாறு எதுவும் அறியாத அப்பாவி அநாதைகளை அநியாயமாக அழித்தொழித்த கொடுமைக்கும் அதற்கு உடன்பட்ட அரச பயங்கரவாதச் செயலுக்கும் ஆண்டவன்தான் நீதியான தண்டனை வழங்கவேண்டும்.

இன்று முதியோர்: இந்நிலையினை எதிர் கொள்வதை அவதானிக்கும் எமது சிறு துளிர் கள் (சிறுபிள்ளைகள்) நாளை அவை மொட் டாகி மலராகி: நாம் விழுதாகும்போது, எமக்கு இதே தண்டனையையே கொடுக்கலாம். என்பதை எல்லோரும் மனதில் நிறுத்தவேண்டும். ●








# தாவீதுகளின் கதை



மிக நீளமான வரலாற்று உறக்கம் ஒன்றின் பின் - கும்பகர்ண உறக்கம் - போரரக்கன் விழித்துக் கொண்டான். ஆழமாய்த் தூங்கிக் கொண்டிருந்தவனின் உறக்கத்தை கனவு கலைத்துப்போயிற்று. உறக்கம் கலைந்தது. உடலை அப்படியும், இப்படியுமாக அசைத்து... வலியெடுத்த கை, கால் மூட்டுக்கள் சுகம்பெற அவற்றையும் இஸ்டம் போல் எறிந்தான்.

உறக்கம் கலைந்தவன் உடன் எழுந்தானில்லை. உடலில் அப்பியிருந்த சோம்பல் பறக்க, உடம்புக்குத் தெம்பூட்டும் காரியங்களைச் செய்தான். இக்காலம் சுமார் நாற்பது தொடக்கம் ஐம்பது ஆண்டு களாய் இருந்தது எனச் சில வரலாற்றாய்வாளர்கள் கணித்துக் கொண்டனர்.

விழிப்புநிலை கொண்டவனின் சோம்பல் முறிப்பில் ஆங்காங்கே மக்கள் கிலிகொண்டனர்.

அப்புறம் எழுந்து உட்கார்ந்துகொண்டான் இரத்தக்கறை படிந்த கடவாய்ப் பற்கள் கோரமாக வெளித்தெரிய இரண்டுமூன்று முறை கொட்டாவி விட்டுக் கொண்டான். அது மிகுந்த வெப்பமுடைய தாய் இருந்தது. அதன் உஷ்ணம் சில இடங்களை எரித்துப்போயிற்று.

அதுவே வரவிருக்கும் பிரளயத்திற்கான அறிகுறியாயிற்று. அவனுக்குப் பசி பொறுக்கமுடியாமல் இருந்தது. தாகம் வேறு வயிறாற உண்ண வேண்டும்.... தாகம் தீரக் குடிக்கவேண்டும்.

பிரளயம் ஒன்றை உண்டாக்கவிரும்பினான்.

மனிதர்களையும், மனித இரத்தத்தையும் புசித்துப் பசியாற்ற எண்ணினான். மனித இரத்தத்தினது சுவையை எண்ணியதும் அவனது நாவில் எச்சில் ஊறியது. வாயைச் சப்புக்கொட்டிக்கொண்டான்.

பூமிக்குத் தான் செல்வது தகுதியை மீறிய செயலா அவனுக்குப்பட்டது. அது உண்மையும் கூட ஆகவே பிரதானி ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அவன்மூலம் காரியமாற்ற எண்ணினான்.

இதற்கென நேர்முகத் தேர்வொன்று வைக்க எண்ணினான். இதன்பொருட்டு இதில் கலந்துகொள்ளவருபவர்கள் கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் குறித்த நீண்ட பட்டியல் ஒன்றையும் வெளியிட்டான். ஒவ்வொரு பிரதான நிபந்தனையின் பின்னும் நீண்ட உப நிபந்தனைகள் வரிசைப்படுத்தப் பட்டிருந்தன.

ஏராளம் நிபந்தனைகளைக்கொண்ட அப்பட்டியலில் பிரதான தகைமையாக இருக்க வேண்டியிருந்தது. - அவர்கள் மந்திரவாதிகளைவிடவும், கதைகளில் வரும் கொடியவர்களை விடவும், மிருகங்களை விடவும், அரக்கர்களைவிடவும் செயற்றிறன் மிக்கவர்களாக இருக்கவேண்டியிருந்தார்கள்.

அதிசயமாக இத்தகுதியை பிறப்பாலேயே யாரேனும் பெற்றிருப்பின்... தாய்வழியாகவோ, தந்தைவழியாகவோ பரம்பரைச் சொத்தாகப் பெற்றிருப்பின் அவர்கள் அதற்கான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டியிருந்தார்கள்.

மேற்குறிப்பிட்ட தகுதிகள் இல்லாவிடின், அதற்குச் சமனான இன்னொரு தகுதியான அவர்கள் மனிதனும் மனிதனும் புணரப்பிறவாமல், விலங்கும் மனிதனும் புணரப்பிறந்தவர்களாகவோ அவர்களின் வாரிசுகளாகவோ இருக்கவேண்டும். இத்தகுதியை நிரூபிக்க பிறப்பத்தாட்சிப் பத்திரம் தேவைப்பட்டது.

பிரதான நிபந்தனையொன்றின் உப நிபந்தனையாக அவர்கள் பேச்சுவன்மை மிக்கவர்களாயும் இருக்கவேண்டியிருந்தார்கள். - ஏனெனில் மக்கள் விழிப்பு நிலை அடையாமல் மயக்க நிலையிலேயே இருக்கவேண்டும். கவர்ச்சி மிக்க பேச்சின் மூலம் இதனை நிறைவேற்றலாம். பேச்சின் படி நடக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. காரியம் நடந்தால் சரி.

பிரதானிகளுக்கு மக்கள் ஆதரவும் இருக்கவேண்டியிருந்தது. அவர்கள் மதம் இனம், மொழி, வாழிட வேறுபாடு இதில் ஏதாவது ஒன்றைக் கொண்டோ அல்லது அனைத்தையும் வைத்தோ பிரளயம் உண்டாக்க வேண்டியவர்களாயிருந்தனர். மக்களையும் அதற்கேற்றாற்போல் திசை திருப்ப வேண்டும். பிரதானி பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்குள் ஆண்,பெண் பேதம் கிடையாது திறமை உள்ளவர்களுக்குத்தான் முதலிடம். அரக்கனின் மனமறிந்து நடந்தாகவேண்டும்.

அரக்கன் நீண்டபிரளயத்தின் ஏராளம் பிரதானிகள் மாறியிருந்தனர். பிரதானியாயிருந்த சிலர் தாம் உண்டாக்கிய பிரளயத்தின் வெள்ளத்துள் அள்ளுண்டுபோயினர். இது முரண் சோகம் மிக்கதாயும்... வேடிக்கை நிறைந்ததாகவும் இருந்தது.

ஆண்.பெண் பேதமின்றி பிரதானிகள் வந்துபோயினர்.

● ● ●

சுலபமானதும் கவர்ச்சிகரமானதுமான இலக்குகள்தான் குறிவைக்கப்படுகின்றன. எப்போதும் போரில் நிலங்களையும் வெற்றிகளையும்போல பெண்களும் பிரதான குறியாய் இருக்கின்றனர். போரரக்கனின் விருப்பப்பட்சணமாயும் அமைந்துவிட்டது அவர்களின் சாபக்கேடே.

பெண்கள் என்றாலே இரைதான் அதிலும் இளமை மிளிரும் யுவதிகள் தான் முதலிலக்கு.

ஆயினும் எழுபது வயது மூதாட்டியினதும்... பன்னிரண்டு வயதுச் சிறுமியினதும்... அவலக்குரல் தாங்கிய காற்று பேய்த்தனமாக முகத்தில் அறைந்துபோனது. போரரக்கனின் பிரதானி ஆணாயிருப்பதோ... பெண்ணாயிருப்பதோ பெண்களின் அவல நிலையில் தாக்கம் செலுத்தியதில்லை. இன்னும் சரியாகச் சொல்லப்போனால் பிரதானியாய் பெண்கள் இருந்த காலத்தில்தான் பெண்கள் அதிகம் இரையாக்கப்பட்டனர்.

போரரக்கன் பட்டாளத்தவரின் அடக்கிவைக்கப்பட்டிருக்கும் விரக தாபத்தை தூண்டக் கூடிய விதமாய் தோற்றம் கொள்வது பெண்களின் குற்றமானது.

இரைகொள்ளப்படும் பெண்கள் நாலைந்துபேராலோ... சமயங்களில் பத்து வரையான ஆட்களினாலோ உணவாக்கப் படுகின்றனர். பின் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஆழமான கிடங்குகளிலோ... மலக்குழிகளிலோ இடப்பட்டு பதனிடப் படுகிறார்கள்.

பட்டாளம் விலகிய இடங்களில் காணப்படும் உள்ளாடைகள் தான் பிறருக்கு பெண்கள் பதனிடப்பட்டிருக்கும் சேதி சொல்லிற்று. ஆரம்பத்தில் எப்போதோ தன் மகவிற்கு பாலூட்டிக்கொண்டிருந்த பெண் ஒருத்தியிடமிருந்து குழந்தை பிரிக்கப்பட்டு, அவளது பால் வடியும் மார்புகளில் தமக்குப் பிரியமான தமது மொழியினதான எழுத்தொன்றைக் குறிசுட்டார்களாம். கலைநயமிக்க போரரக்கர் பட்டாளம் ஆடைகளையப்பெற்ற பெண்ணின் மார்பழகையும் அதை மேலும் மெருகூட்டி தாம் செய்த கலைப்படைப்பையும் எண்ணிப் புலகாங்கிதம் கொண்டிருக்கக் கூடும். பிரளயம் பூமி அனைத்துக்கும் வசதியாய் இருந்தது.

**யோ. கர்ணன்**

துன்பப்பட்ட மக்கள் வலிபொறுக்கமுடியாமல் சர்வ வல்லமை பொருந்திய போரரக்கனிற்கு எதிராக கலகம் புரிய முனைந்தனர். அல்லது கல்லெறிந்தனர். இது பிரதானிக்குக் கோபமூட்டிற்று. “வல்லமை பொருந்தியவர்களை எதிர்ப்போர் வாழ்வழிந்துபோவதாக” பிரதானி சாபமிட்டுப்போனான்.

போரரக்கனிற்கு எதிராகக் கலகம் புரிய முனைவோர் கற்களையும் வார்த்தைகளையும் பதுக்கி வைத்திருக்கலாம் என்ற ஐயம் மேலிட போரரக்கர் பட்டாளம் சோதனையை முடுக்கி விட்டது.

அகால வேளைகளிலும் வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டன... யாருடையதோவான முதிராத குரல்களைக் காற்றுச் சுமந்து போனது...

வீதிதோறும் மறியலிடங்கள் முளைத்தன.

பெண்களிற்குப் பொல்லாத காலமானது.

மறியல் மறைப்புக்களில் சோதனை நடந்தது.

தேடுதல் முடிவில் தம்மைப் பறிகொடுத்தவர்களாய் பெண்கள் சோர்ந்து வெளியேறினர்.

சந்தேகத்திற்கிடமானோர். கேள்விகளால் துளைக்கப்பட்டனர்.

“நீ மனதிற்குள் யானைக்கு சாபமிட்டாயா?”

“நீ சிங்கம் குறித்து என்ன நினைக்கிறாய்?”

“நீ புலியை வாழ்த்திக் கவிதை பாடினாயா?”

இவ்வுலகம் மெதுவாய் பிராணிகள் உலகமாகிக்கொண்டுபோகிறதா?” என மக்கள் ஐயம் கொண்டனர்.

● ● ●

போரரக்கனிற்கு மிகுந்த பரப்பளவினதான வெட்டவெளிகளில் தான் பிரியம் அதிகம்.

மனிதர்கள் கனவுகண்டு உருவாக்கிய வீடுகளையும்... பாடசாலைகளையும்.... கோயில்களையும்... இன்ன பிறகட்டடங்களையும் குண்டுவைத்தும்... குண்டுபோட்டும் தகர்ந்தழித்தது போரரக்கன் பட்டாளம். எங்கும் கட்டடங்களின் சிதைவு. கட்டடங்களினுள் இருந்த மனிதர்களின் மரணம் வீடுகளில் இருக்க அஞ்சி கோயில்களுக்குள்ளும்... தேவாலயங்களிற்குள்ளும் தஞ்சம் புகுந்தோர் குறிவைக்கப்பட்டனர்.

மனித மூளையின் உன்னத படைப்புக்களின் ஒன்றாய் விமானம் தாயாரிக்கப்பட்டது.

கிரோசிமா...நாகசாகி... போல மீளவுமொரு துன்பப்பதிவு பதியப்பட்டது.

மிக இளம் குழந்தைகளும்... பெண்களும்... பெரியவர்களும் இறந்துபோயினர்.

பிரளயபூமியில் பிரவாகம் கொண்டோடியது இரத்த ஆறு. மிகச்சிறியதாய் ஊற்றெடுத்து பின் வேகம் கூட்டி, கரைய கட்டி எதிர்ப்பட்டோரை அள்ளிக்கொண்டோடியது. சன்னதங்கொண்ட போரரக்கன் பட்டாளம் ஆற்றில் தாகசாந்தி செய்தது. இரத்தம் குடித்த அவர்கள் விழிகள் சிவந்திருந்தன. உணர்வுகள் விறைத்தேறின. சிறுநீரும் இரத்தமாய்க் கழித்தனர்.

இளம் மனிதர்கள் குழுவொன்று கவணெடுத்து கரந்துறைவதாய் பேசிக்கொண்டனர். கையில் கவணெடுத்த அவர்கள் கோலியாத்தின் நெற்றிப்பொட்டில் கல்லால் அடிப்பதாகவும் போரரக்கன் பட்டாளம் இப்போது அஞ்சுவதாகவும்.... கவணெடுத்தோர் தேவர்களால் ஆசிர்வதிக்கப் பட்டவாகளாயிருக்க வேண்டும் என்ற பேச்சும் இருந்தது.

பிரதானிக்குக் கணக்கிட முடியா கோபம் ஏராளம் சட்டங்களும்... திட்டங்களும் கொண்டு வந்தான். உபபிரதானிகளையும்... பட்டாளத்தையும் கடிந்துகொண்டான். வீரர்கள் அஞ்சி நடுங்கினர்.

இடிந்து தரைமட்டமாயும்... சாம்பல் மேடுகளாகியும் விட்ட வீடுகளின் மேலால் ரோந்து புரியும்போது போரரக்கன் பட்டாளம் அச்சம் கொள்ள வேண்டியிருந்தது.

தரைக்குள் ஒளித்திருந்து உயிர்பறிக்கும் பொறிகள் ஆங்காங்கு விதைக்கப்பட்டன. அவை விரைவிலேயே குட்டிகள்போட்டு எங்கணுமாய்ப் பரவின.

போரரக்கன் பட்டாளம் கோபம் கொண்டது.

குழந்தைகளின் பிஞ்சுப் பாதங்களையும்... பெண்களின் மென்மையான பாதங்களையும்... துண்டித்தனர். பசியோடு இருந்த பொறிகளிற்கு அவற்றை இரையாய் இட்டு மகிழ்ந்தனர்.

அழகியதும் மென்மையானதுமான பாதங்கள் துண்டிக்கப்பட்ட குழந்தைகளும்... பெண்களும் பெரிதாய் ஒப்பாரிவைத்து அழுது மாண்டனர்.

● ● ●

போரரக்கன் பட்டாளம் களம்புகுந்த இடங்களில் அனர்த்தங்களைப் பற்றிக் கணக்கிடும்படி இறைவன் கூட தேவர்களிற்கு கட்டளையிடுவது கிடையாது. அங்கு ஏற்படும் அழிவுகள் குறித்த விபரத்தை அழித்தற்கடவுள் கூட அறிவதில்லையாம். அவரையும் மீறிய வல்லமையுடையோனாய் போரரக்கனிருந்தான்.

போரரக்கனிற்கு பசி மெதுவாயாற சுவையறிந்து உண்ணத்தொடங்கினான்.

இளைய உடல்களினதும்... இரத்தத்தினதும்... உயிரினதும் அலாதியான சுவை அவனுக்குப் பிடித்துப்போயிற்று. ஆயினும் மாற்றம்வேண்டி வெவ்வேறு பராயத்தினரையும் நாடாமல் விடவில்லை.

பிரளய பூமியின் தெருக்களை பாதி மனிதர்கள் நிறைத்தார்கள். ஒற்றைக் கை..கால்...கண்.. முதலியவற்றையோ, இரண்டு கை...கால்... கண்களையோ போரரக்கனிற்கு உணவாகக் கொடுத்துவிட்டு உலவினர்.

உணவுப்பொருட்களை விடவும்...ஆடைகளை விடவும், ஊன்றுகோல்களும்... சக்கர நாற்காலிகளும் இறக்குமதி செய்யவோ... உற்பத்தி செய்யவோ வேண்டியிருந்தது.

ஒரு கட்டத்தில், இருக்கும் மனிதர்களை விடவும்.. ஊர்ந்துதிரியும் எறும்புகளை விடவும் ஊன்றுகோல்களும்... சக்கரநாற்காலிகளும் அதிகரித்துவிடுமோ என்ற அச்சங்கொள்ள வேண்டியிருந்தது.

ஆனாலும் கவனடி ஓயவில்லை.

அவர்களின் கல்வீச்சு முன்னையதிலும் பார்க்கத் தீவிரமும், துல்லியமும் மிக்கதாய் மாறியிருந்தது.

அவர்களின் கவனடி சில வேளைகளில் போரரக்கனின் ➥

மற்றவர்கள் செழிப்படைய உதவுபவனே இலட்சியவாதி. - ஹென்றிஃபோர்ட்.

உணவுத்தட்டுவரை சென்றதாகவும் தகவலொன்று உலவியது.

உணவுதேடிப் புறப்பட்டவன் இப்போது உபத்திரந்தருபவர்களைத் தேடியலைய வேண்டியதாயிற்று. நாளடைவில் அவர்களுடன் பொருதவேண்டியதாகவும் ஆயிற்று.

கர்ப்பிணியாயிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு தாவீதுகளை ஈன்றெடுக்கப் போவதாகவும்...

பெண்களின் நெற்றியில் துலங்கும் சிவந்த குங்குமம் புரட்சியின் குறியீடாகவும் அவர்களிற்குப் பட்டது.

கத்திகொண்டு ஒவ்வொரு பெண்ணின் வயிறும் கிழிக்கப்பட்டு குழந்தைகள் கைப்பற்றப்பட்டன. நாளடைவில் கவனடிப்போரின் கல் வீச்சு அதிகரிக்க போரரக்கனின் கையில் இலேசாக நடுக்கம் பிடிக்க "சூப்" அருந்துவது அவனுக்குச் சிரமமானதாக மாறியது.

குங்குமம் வைத்த நெற்றியுடைய கழுத்துக்கள் சீவப்பட்டன. அவை போரரக்கனினதும், பிரதானிகளினதும் மாளிகைகளில் கொலுவைக்கப்பட்டன.

ஆயினும் தாவீதுகள் பல்கிப் பெருகிக் கொண்டேயிருந்தனர்.

தாவீதுகளின் கைகளையும், கால்களையும், தலைகளையும் வெட்டும் முயற்சியில் போரரக்கன் பட்டாளம் இறங்கியது.

தாவீதுகளிற்கு மீளவும் கைகளும்... கால்களும்.... தலைகளும் முளைத்தன. புதிதாய்க் கவணெடுத்தார்கள். அவர்கள் அதிமானுட புத்திரர்கள் தானென்றும்... மீட்பர்கள் தானென்றும் நம்ப மறுத்த பலரும்நம்பத்தொடங்கினர்.

● ● ●

போரரக்கனிற்கான உணவு வழங்கல் வீதம் குறைவடையலாயிற்று. இயல்பாக ஆறிக்கொண்டிருந்த பசியை அது கிளறத் தொடங்கியது. எப்போதுமே பசித்தறியாத அவனிற்கு பசி மிக்க கொடுமை செய்தது.

பிரதானிகளையும் அழைத்தான். அவர்களைக் கடிந்தும், கடித்தும் கொண்டான். அவர்கள் அலறியபடி ஓடினர். பட்டாளத்தில் தம் கோபங்களைச் செலுத்தினர்.

போரரக்கன் பசி மேலிட கோரமாகச் சிரித்து வெப்பக்காற்று உமிழ்ந்தான்.

எங்கும் அனலெரித்துப் போயிற்று. பச்சைப்புற்கள் ஒன்று கூட இல்லாமல் எல்லாம் கருகியது.

ஊரெல்லாம் சாம்பல் மேடு.

எல்லாத் தரப்பிலும் பல்லாயிரம் பேர் மாண்டனர். அவர்கள் குருதியில் கடலும் வானும் சிவந்தது.

மனிதர்களற்ற உலகம் உருவாகுமே என அஞ்சவேண்டியதாயிற்று. பிணமலை குவிந்து கிடந்தது.

பசியாறலாமென போரரக்கன் சப்புக்கொட்டிக் கொண்டிருக்க, அவ்வுணவு அவனுக்குப் போக மார்க்கமற்றுப்போயிற்று. தாவீதுகள் தரையிலும் கடலிலும், கவணுடன் காவல் நின்றனர்.

போரரக்கன் அரக்கர்களிடம் ஓடினான். அவர்களிடம் ஓர் புஸ்பக விமானம் இருந்தது. அது இராவணன் பாவனையிலிருந்தது. இராவணன் மரணிக்க அரக்கர்களால் கவரப்பட்டதாகவும் இருந்தது.

அரக்கர்கள் அதனை அவனுக்கு அன்பளித்தனர்.

விண்ணில் யாலம் புரிந்தபடி போரரக்கனின் புஸ்பக விமானம் காற்றைக்கிழித்துப்போனது.

நம்பிக்கையீனம் கொண்டிருந்த போரரக்கன் பட்டாளம் உற்சாகம் கொள்ளலாயிற்று. தம்மால் தயாரிக்கப்பட்ட உணவை அனுப்ப ஒரு மார்க்கம் கிட்டியதை அவர்கள் கைதட்டி ஆரவாரித்து மகிழ்ந்தனர். அம்மகிழ்ச்சியும் நீடிக்கவில்லை.

புஸ்பக விமான ஓட்டியின் கண்ணில் கவண் கல்லொன்று பட்டது.

அவன் பார்வை பறிபோக புஸ்பக விமானமும் தீண்டுவாரற்றுப் போனது.

பசி மேலிட, போரரக்கன் உடலில் கலோரிக் குறைபாடெழ அவனுக்கு இலேசாக நடுக்கம் பிடித்தது. விரல் நடுக்கத்தை மறைக்க கைகளைக் கோர்த்துக் கொண்டான்.

பிரதானிகள் பாதுகாப்பு கேள்விக்குறியாயிற்று. பிரதானிகளிற்கிருந்த ஆதரவு பட்டாளத்திலும், மக்கள் மத்தியிலும் வீழ்ச்சியுறத் தொடங்கியது.

போரரக்கனிற்காகத் தயாரிக்கப்பட்டு அனுப்ப மார்க்கமற்றுப் போன பிணவுடல்களை பிரளயப் பூமியிலேயே எரிக்கவும், புதைக்கவும் செய்தனர். எரிக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கை ஆயிரமாய்... பல்லாயிரமாய் இருந்தமையால் தகன இடத்திலிருந்து எழுந்த கரும்புகை வானலாவியது. அது சூரியனையும் மறைத்தது. அதனால் எல்லோர் மனங்களும் கறுக்கவும், கனக்கவும் செய்தது.

இரத்த ஆற்றினதும்... பிணக்குவியலினதும்... மணம் பொறுக்கமுடியாத மக்கள் மூக்கைப் பொத்திக்கொண்டனர்.

● ● ●

மெது நடையில் வந்தாலும் தீர்ப்புக்கூற தர்மம் வந்து சேர்ந்துவிடுமென்ற நம்பிக்கை காலாதி காலமாக கல்லெடுத்தோர் கூட்டத்திடமிருந்தது.

அதர்மங்கள் செழித்தோங்கும் இடங்களில் அதிமானிட புத்திர ரூபத்தில் கடவுளின் அவதாரம் தோன்றி தர்மத்தை நிலைநாட்டுமென்ற நம்பிக்கையும் இருந்தது.

அது நடப்பதாகவே அவர்களுக்குத் தோன்றியது.

அனலெரித்துப்போன பூமியில் புற்கள் துளிர்விட்டன. இருந்த நீரனைத்தும் போரரக்கனால் உறிஞ்சப்பட்டிருப்பினும் இரத்த ஆறே அதற்கு நீராகியது. அழித்துப்போன இரத்த ஆறு வயல்களின் விளைச்சலுக்கு உதவியது.

புதையுண்டு போன பிணங்களெல்லாம் நித்திரையால் விழித்தெழுவதுபோல எழுந்தன. பூமியின் அடி ஆழங்களில் புதையுண்டு போனவை எழுச்சியின் உரங்களாயின.

உணவு பதனிடப்பட்ட கிடங்குகளில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் வீடுகளும் பிற பொருட்களும் தயாரிக்கப்பட்டன.

மொத்தத்தில் எலும்புக்கூடுகளாலும்... இரத்தத்தினாலும்... மண்டையோடுகளினாலும்..ஆன நகரமென்றாலும் மனிதர்கள் வசிக்கப் பிரியங்கொள்ளும் பூமியாயிற்று. அனலெரித்த நிலங்களில் மலர்ந்த பூக்களை பறித்துப் பெண்கள் தலையில் சூடிக் கொண்டனர். பெண்கள் வாழ்விலும் நிர்ப்பந்தங்களற்றுப் போயின.

மண்டையோட்டு மனிதர்களெனவும்.. இரத்தவெறிபிடித்த, பிணந்தின்னும் மனிதர்கள் இவர்களென்றும் தோற்றோடிய போரரக்கர் பட்டாளம் சுட்டுவிரல் நீட்டியது. இரத்தம் தேங்கிய குளங்களில் நீச்சலடிக்கும் இவர்கள் பிணந்தின்னுபவர்களை விட வேறு யாராயிருக்க முடியுமென்று கேள்வியும் எழுப்பினர்.

தாங்கள் உண்டுபண்ணிய அழிவையே பிறர்தலையில் சுமத்தும் இலாவகத்தை அவர்கள் வெகு காலமாகவே கற்று வைத்திருந்தனர்.

அரக்கர்களும்... பிணம் தின்னிகளும் ஓடோடிவந்து போரரக்கன் பட்டாளத்தை வழிமொழிந்தனர். போரக்கனின் பட்டாளமே சத்தியத்தின் காவலர்களாயிருக்க முடியுமென்று பெரிதாய்க் கத்தின.

கடவுளும்...

தேவர்களும்... முனிவர்களும் தமக்குள் சிரித்துக்கொண்டனர். தேவர்கள் கவணெடுத்தோரை இரகசியமாய் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். அவர்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்களானார்கள். அதுவே வரவிருக்கும் காலங்களில் அவர்கள் பெறவிருக்கும் வெற்றிகளுக்கு கட்டியங்கூறிற்று.

● ● ●

மனிதர்களின் எண்ணிக்கை அருகியதோ, அல்லது மனிதர்களின் உடலெங்கும் முள்முளைத்ததோ காரணமாயிற்று- போரரக்கனிற்கும் அவன் பட்டாளத்திற்கும் மனிதர்களை உண்பது சிரமமானதற்கு.

அவர்கள் உடல் மெலியத் தொடங்கியது.

பிரதானிகளுக்கெதிராக அவர்கள் சார்ந்தோர் கிளர்ச்சிசெய்யத் தொடங்கினர்.

பிரதானிகள் பேச்சிலிருந்து கவர்ச்சியின் சாயம் கரையத் தொடங்கியது. இதுவே கவணெடுத்தோருக்கு உகந்த பொழுதாயிற்று.

அவர்கள் போரரக்கனின் நெற்றிக்குக் குறிவைத்தடித்தார்கள்.

தாவீதுகளின் அடியில் கோலியாத் நிலைகுலைந்து போனான்.

தலையைப்பிடித்தபடி குந்தியிருந்து விட்டான். உதவிகோரினான். எவரும் வரவில்லை. பிரதாணிகள் மேகங்களுக்குள் பதுங்கிக்கொண்டனர். பட்டாளத்தவர் காற்றிலேறி விரைந்தோடி மறைந்தனர். சிலர் மணலுக்குள் மறைந்தனர்.

போரரக்கன் பரிதாபமாக விழித்துக்கொண்டு நின்றான்.

"வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என ஒரு பெரியவர் சொல்லிப்போனார்.

இப்போது கதை மாறியிருந்தது. போரரக்கன்மீதே போர் ஏறிநின்றது. சுமைதாங்க முடியாது அவன் நசுங்கி அழுதுகொண்டிருந்தான். ஆயினும் அவன் இறவா வரம் பெற்றவன் என்பது அனைவருக்கும் தெரியும்.

காற்றுக்கூட புகமுடியாத சிறு போத்தல் ஒன்றினுள் அடைத்தெறிய முடியும் சிறு புள்ளியளவு ஓட்டையாயிருப்பினும் அவனால் தப்பித்து வெளிவரமுடியும்.

கவணெடுத்தோர் கையில் இப்போது ஒரு போத்தல். வாயொடுங்கிய போத்தல். அதற்குள் பேரரக்கனை அடைத்து...இறுக மூடி... கடலில் எறிய வேண்டும். (கோபாலன்கள் கடலில் மிதக்கும் அப்போத்தலை எடுத்துத் திறக்கக்கூடாது. திறந்தாலும் ஏற்கெனவே ஓர் அரக்கனை அடைத்தது போல இவனையும் அடைத்துவிடவேண்டும்.)

போத்தலுக்குள் நுளைய போரரக்கன் மறுத்தான்... முரண்டு பிடித்தான் அவனுடம்பில் சிறு தென்பு இருப்பதே அவனது பிடிவாதத்தின் காரணமெனவும் போர் இன்னும் சற்று நேரமழுத்த போரரக்கனின் தென்பு இல்லாது போய்விடுமென்றும்...அதன் பின் அவனை அடைத்து தூர எறியலாமென்றும்அவர்கள் தீர்மாணித்தனர்.

மூடி திறந்த போத்தலை வைத்துக்கொண்டு அவர்கள் காத்திருந்தனர். போரரக்கன் மீது மெதுமெதுவாய் வலிமையிழக்க ஆரம்பித்தான்.

●

# உருவழிதல்

கனவுகளில் வாழ்தல் எனக்
காலங்கள் சாகும்
இதயத்துள்
மௌனச்சிறகடிப்புகள்மட்டுமே...
எதிர்பார்ப்புகளுடன் இமைமடல்கள் சோர
இன்னும்
இழப்பதற்கு என்ன இருக்கிறது.
இளமையைத்தவிர!

வெற்றிடங்களைத்தேடும்
விண்ணப்பங்களுடன்
விளம்பரப்படுத்தப்படும் இருப்பில்
நம்பிக்கைகள் விதைபடும்
அல்லது...
புதைபடும்!எனினும்
தூரத்துப்பச்சையாக
எதிர்கால விருட்சம்!

இந்த மெழுகு வர்த்தி
ஜீவனுடன் ஒளிர-ஒரு
ஒளிப் பொறியைத்
தானம் செய்ய யார் வருவார்?
உருகி அழிவதற்காகவா
இந்த காத்திருத்தல் தவம்?
சுற்றும் உலகினை
சுழலும் விழிகளுடன்
சுற்றிலும் துருவிக் களைத்தபின்
முற்றும் புரிந்த நிலையில் புரியாமல் போனது
"நான்"மட்டுமே!

இருட்டில்
விடிவெள்ளியை தரையில் தேடியதில்
அர்த்தமற்று அறுந்த தூக்கம்
விடியலில்
தொடர ஆரம்பிக்க
ஒரு வாழ்வின் மரணம் தொடர்கிறது

ராதேயன்

# புறப்படு...!

ஈன்ற முதல்
ஈர்க்குத் தடியோடும் ஈரத்தினுள்ளும்
இருந்து விட்ட காலம்
இனியும் வேண்டாம்!

பளிச்சிட வை
பானைகளை மட்டுமல்ல
மழுங்கிப் போன - உன்
மூளையையும்.

துப்பரவு செய்
வீட்டு முற்றத்தை மட்டுமல்ல!
விதைக்காமல் இருக்கும் - உன்
விளை மனதையும்.

புறப்படு!
புறத்திற்கல்ல
பூமியோடு ஐக்கியமான
புனிதப் போருக்கு!

வி.றஜனி

# குழந்தைநாதம்

## இவர்களும் விழிப்படைந்துவிட்டார்கள்

கரன் எப்போதும் மற்றவர்களைவிட தான் உயர்ந்தவன் என்ற இறுமாப்புக்கொண்டவன் அந்த ஊர்ப் பாடசாலையில் கல்வி கற்கும் சின்னப்பருவத்தில் கூட யாருடனும் சேரமாட்டான். ஒதுங்கியே இருப்பான். தன்னிடம் இருக்கும் உடைகளைப் பற்றியும், விளையாட்டுப் பொருட்களைப் பற்றியும் மற்றமாணவர்களுக்கு கூறிப் பெருமைப்படுவான். விதம்விதமான பொருட்களைக் காட்டி தன் தாய் மீதும் தந்தை மீதும் உள்ள மதிப்பை வெளிப்படுத்துவான்.

ஆனால் யாரும் அப் பொருட்களைத் தொடுவதைக் கூட அனுமதிக்கமாட்டான். கோபப்படுவான். ஏசுவான் அதனால் மற்ற மாணவர்கள் அவனது எந்தப் பொருட்களிலும் தொடுவதில்லை.



அவன் கூறுபவற்றை எல்லாம் விரும்பியோ விரும்பாமலோ கேட்டுக்கொண்டிருப்பது அவர்களுக்கு வழமையாகி விட்டது.

கரன் படிப்பிலும் கெட்டிக்காரன் அல்ல. விளையாட்டிலும் அவனுக்கு திறமை இல்லை. இதனால் ஏனையோர் மீது அவனுக்கு பொறாமை அதிகம். அதை அவன் காட்டிக்கொள்வதில்லை.

இவனது போக்கை விரும்பாதவர்களும் இருந்தார்கள். இருந்தும் யாரும் பகைமையைக் கொண்டதில்லை. அவர்கள் எல்லோரும் இவனுடன் அன்பாக இருப்தையே விரும்பினார்கள்.

ஒருநாள் எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக ஒரு சம்பவம் நடந்தது.

கரன் பாடசாலைக்கு வந்ததும் மிட்டாய் கொடுத்தான். அவர்களும் வாங்கிக்கொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

கரன் புன்முறுவல் பூத்தான்.

இன்று அவனுக்கு பிறந்த தினம் என்றே எல்லோரும் நினைத்தார்கள். அவன் புதிய உடைகள் அணிந்திருந்தான்.

குமார் மட்டும்தான் அவனது கபட நோக்கத்தைப் புரிந்து கொண்டவன். அவனது குடிசை தான் கரனின் மாளிகைக்கு கிட்ட இருக்கிறது. கரன் தாயிடம் கூறியதை குமார் அறிந்திருந்தான்.

கரன் வெளியே சென்ற போது குமார் உண்மையை வெளிப்படுத்தினான்.

இவனுக்கு பிறந்ததினம் இன்றைக்கில்லை. தான் வகுப்புத் தலைவனாக வாறத்துக்கு உங்கட ஒத்துழைப்பைக் கேட்கப் போறான். அதுதான்: என அங்கும் இங்கும் பார்த்தபடியே கூறினான் குமார்.

தீபன் அந்த வகுப்பில் எல்லோரதும் ஆதரவைப் பெற்றவன். அவனது அன்பான வார்த்தைகளும் மதிக்கும் தன்மைகளும் உதவி செய்யும் மனப்போக்கும் கெட்டித்தனங்களும் எல்லாருடைய மனமும் அவன பக்கம் அன்பைச் செலுத்தியது.

குமார் கூறியதைக்கேட்ட எல்லோரும் வாயைக் கையால் பொதிக்கொண்டு 'கொல்' எனச் சிரித்தனர்.

அவர்கள் " வரட்டும் வரட்டும்" எனத் தலை ஆட்டி விழி மடல்களைச் சுருக்கி மேலும் கீழுமாக அசைத்தனர்.

"இவனைத் தலைவன் ஆக்கினால் ஒவ்வொரு நாளும் மிட்டாய் தின்னலாம்" என்றான் வரன்.

மீண்டும் சிரிப்பொலி பலமாகியது.

வெளியே சென்ற கரன் வகுப்பிற்குள் வந்து சேர்ந்தான்.

" கரன் உன்ர இனிப்பு இன்னும் வாயிலைதான் கிடக்குது" என்று பல்லெல்லாம் தெரியச் சிரித்தான் வரன்.

கரன் சிரித்துக்கொண்டே தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான்.

"நீதான் எங்கட தலைவன்"

எல்லோரும் ஏகோபித்த குரலில் கத்தினார்கள் வகுப்பிற்கு ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

வகுப்பறையில் அமைதி நிலவியது.

எல்லோருக்கும் கடதாசித் துண்டுகள் வழங்கினார் வகுப்பாசிரியர்.

உங்களுக்கு விருப்பியவின பெயரை எழுதித்தரும்படி கூறினார்.

வாக்குச் சீட்டுகள் எண்ணப் பட்டன.

ஆசிரியரே நடுவர்.

அவரே தீர்ப்பையும் வழங்கினார்.

கரனுக்கு ஒரு வாக்கும் தீபனுக்கு இருபத்தாறு வாக்குகளும், வரனுக்கு ஒரு வாக்கும் கிடைத்திருந்தன.

ஆசிரியர் தீபனைப் பாராட் டினார்.

எல்லா மாணவர்களும் கை தட்டி தமது மகிழ்ச்சியை வெளிக் காட்டினர்.

சகல துறைகளிலும் முதல்வனாக இருப்பவனும் தீபன்தான். ஆனாலும் மாணவர் தலைவனாக வரும் எண்ணம் அவனுக்கு இருந்ததில்லை. ஆனால் அவனே தலைவனாக தெரிவுசெய்யப்பட்டான்.

கரன் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருந்தான். அவன் பற்களை நெருடிக்கொண்டு எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான். ஏமாற்றம் அவனை வாட்டியது.

தீபன் மீது ஏற்பட்ட கோபத்தால் அவனது உடல் நடுங்கியது தன்னைவிட குறைந்த வாழ்க்கையில் உள்ள தீபன் தனக்குத் தலைவனா?

அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை. தங்களுடைய வீட்டில் கூலி செய்யும் ஒருத்தியின் மகன் எனக்குத் தலைவனா?

கரன் மேசை மீது தலையைச் சாய்த்துக் கொண்டான்.

அவனுக்கு தாங்கமுடியாத அழுகை வந்தது. கண்களை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டான்

"நன்றி கெட்டவங்கள்"

மற்ற மாணவர்களை மனதினுள் பொரிந்து கொண்டான்.

அந்தச் சின்ன வயதில் அவனுக்கு இப்படி ஒரு திமிர்.

வரன் அவனைத் தட்டி எழுப்பினான்.அவன் வரனை எரித்து விடுவது போல் பார்த்தான்.

" சேர் கூப்பிடுகிறார் என்றான் வரன். அவன் எழுந்து சென்றான்.

ஆசிரியருக்கு அவனைப் பற்றி நன்கு தெரியும்.

அவர் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

"என்ன தலைஇடியா"?

"இல்லை சேர்"

"அப்ப"

தீபன் எங்கட வீட்டு......

அவன் வர்த்தையை முடிக்கவில்லை. தலைகுனிந்து நின்றான்.

மற்றவனை மதிக்கத் தெரிந்தவனின் மதிப்பு தானாக உயரும் என்பதை இனியாவது உணர்ந்து கொள் போய் இரு.

நான் இனி இஞ்சை.....

கவலைப்படாதை அடுத்த முறை நான்தான்........ ஆசிரியர் அவனது முதுகைத் தட்டிக்கொடுத்தார். கரன் எதுவும் பேசவில்லை.

**முருகு.பாரிமகன்**

## கல்வி

மணி இன்றி ஒலியில்லை
பூ இன்றி மணமில்லை
காய் இன்றி பழமில்லை
மரம் இன்றி நிழல் இல்லை
உடல் இன்றி உயிர் இல்லை
கல்வியின்றி எதிர்காலமில்லை.

**கி.அனோல்ட்**

## நட்பு

நான் என்பது நட்பல்ல
நாங்கள் என்பதே நட்பு
உபத்திரம் செய்வது நட்பல்ல
உதவி செய்வதே நட்பு
நண்பர்களுக்கு உயிரைக் கொடுப்பதே நட்பு
அவர்கள் உயிரைப் பறிப்பது நட்பல்ல
ஆபத்தில் கைகொடுப்பதே நட்பு
ஆபத்தில் விலகி நிற்பது நட்பல்ல
இன்பத்தில் மட்டும் இருப்பது நட்பல்ல
துன்பத்திலும் பங்கு கொள்வதே நட்பு.

**இ.கேசவன்**

## உலகம் உங்களை விரும்ப

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை
உதிர்க்கத்தவறாதீர்.
தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும்
பாராட்டுதலைத் தவறாதீர்.
முடிந்தாலும் முடியாவிட்டாலும்
உதவமாட்டேன் என்றாதீர்.
விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்
வாய்நிறைய
எவரையும் வரவேற்றுவிடுங்கள்
அரைகுறை நண்பராகினாலும் அப்போதுதான்
அறிமுகமாகி இருந்தாலும் பண்பாக பேசுங்கள்
குற்றமானாலும் குறையானாலும் அதைப்
பெரிசுபடுத்தாதீர்
ஏற்றுக்கொள்ளக் கூடாத கருத்தாக
இருந்தாலும் எதிர்வாதம்
செய்யாதீர்.

**சு.தர்சன்**

## வாரம் ஒரு குறள்



சூதாட்டத்தை நம்பியவர்கள் உருக்குலைந்து போனது தான் வழமையும் வரலாறும். ஏனெனில் சூதாட்டம் ஒரு புதைகுழி என்று கூடச் சொல்லலாம். பார்க்கும் போது புதைகுழி ஆழமில்லாதது போலவே காட்சி தரும். இறங்கினால் மீண்டுவருவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

தருமர் சூதாட்டத்தில்தான் தனது நாடு. நகர். சொத்து எல்லாவற்றையும் இழந்தார். ஏன் தனது மனைவியை கூட சூதாட்டத்தில் வைத்து ஆடினார். எதிலும் நல்லதையே காணும் தருமர்கூட சூதாட்டத்தில் வெற்றி பெறவில்லை என்பது வரலாற்றுக்கதை.

அதனால் எவ்வளவுதான் கெட்டித்தனம் இருந்தால் கூட சூதாட்டத்தில் இறங்கிவிடக் கூடாது அது மீனுக்கு வைக்கப்படும் இரையுடன் மறைந்திருக்கும் தூண்டில் இரும்பைப் போன்றது தூண்டில் இரும்பை விழுங்கும் மீனின் அவலம் தான் சூதாட்டத்தில் இறங்கும் எவருக்கும் நிகழக் கூடியது சூதாட்டம் வாழ்க்கையை மட்டுமல்ல நமது குடும்பத்தையும் அழித்துவிடும் நம்மையும் கொன்று விடும் இதனைத்தான்

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூ உம்
தூண்டிற்பொன்மீன்விழுங்கியற்று"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 25

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ழ | க | மோ | கெ | க | றி | இ |
| மா | டு | ம் | மா | தீ | சை | வி |
| ஞா | தி | வீ | த | ரு | ர் | ல |
| யி | தூ | க | கே | சீ | கை | ங் |
| ப | சீ | ச் | ய | மே | நா | த |
| யூ | ரி | ரை | போ | ல | த் | பூ |
| மோ | ர | ப் | வே | தி | ர் | மீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -23 இன் விடைகள்

01. உதைபந்தாட்டம்.
02. கிளித்தட்டு.
03. கபடி.

01. கிணறு,
02. குளம்.

### சொற்சிலம்பம் - 23 இன் பரிசுக்குரியவர்

சு. பால்ராஜ்
பு/றோ.க.வித்தியாலயம்
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 23 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.குமரேசன்
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

02. க.தேனிகா
இல-759 சிவிச்செனர்ர்,
வட்டக்கச்சி.

03. வ.யோகராசா,
9ம் வட்டாரம்,
கொக்கட்டிச்சோலை.

04. வே. அகமொழி
இல-921 சிவிச் சென்ரர்,
வட்டக்கச்சி.

05. தியாகதேவி
தர்சினி மருந்தகம்,
இரணைப்பாலை.

06. தி.ராகவன்
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

01. வகுப்பறையில் காணப்படுபவை?

01) ........................................
02) ........................................
03) ........................................

சொற்சிலம்பம் -25.
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.


02. பாலில் இருந்து எவற்றைப் பெறலாம்?

01) ........................................
02) ........................................

பெயர் :- ........................................

முகவரி :- ........................................

........................................



# புரிதலும் தெளிதலும்

இது தேர்தல் காலம் இவ்வளவு காலமும் தேர்தல் காய்ச்சல் என்பது இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள்தான் அமோகமாக இருந்தது.

ஆனால் இந்தமுறை புலிகள் இயக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பினை பகிரங்கமாக ஆதரித்து தேர்தலுக்கு எல்லாவகையாலும் பச்சைக்கொடி காட்டியதையடுத்து,

இந்தத் தேர்தல் காய்ச்சல் எங்களின் மத்தியில் இருந்த பலருக்கும் அமோகமாக அடித்ததாம்.

பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல்செய்ய முன்னர்.

இந்தத் தேர்தலுக்கு புலிகள் இயக்கத்தின் ஆதரவும் அனுசரணையும் இருப்பதையடுத்து தென்னிலங்கையில் பெரும் முதலீடுகளை செய்து விட்டு உள்ளூர் தலைவர்களாக கௌரவப் பதவிகள் வகித்தபலர்.

இந்தத் தேர்தலில் தாற்பரியத்தையும் இந்தத் தேர்தல் மூலம் புலிகள் இயக்கம் வகுக்கும் வியூகத்தையும் புரிந்துகொள்ளாது.




## தேர்தல் விஜயங்கள்

திடீரென வன்னிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்கள்.

இந்த உள்ளூர் ஆசாமிகளின் திடீர் பிரசன்னத்தைக் கண்ட மக்கள் இவர்களின் திடீர் விஜயம் என்ன என்பதை அறிவதில் ஆர்வம் காட்டிய போதுதான் அவர்களுக்கு உண்மைபுரிந்துபோனது.

இந்தத் தலைவர்கள் மக்களிடம் மெல்ல நாடி பிடித்துப் பார்த்தார்களாம். தங்களைப் புலிகள் வேட்பாளர்களாக நிறுத்துமாறு கோரினால் வாய்ப்புக்கள் அதிகம் இருக்குமோ தங்களுக்கு அழைப்பு வருமோ இதனைச்சாதிக்கமுடியுமோ என்றவாறெல்லாம் கேட்டார்களாம்.

இதில் முக்கியமாக பல உள்ளூர் தலைவர்களும் உள்ளடக்கமாம். அதோடு ஆனந்தசங்கரியார் மூலம்பெற்ற சமாதான நீதவான் பட்டம் வேறு புதிதாக உள்ளதாம்.

அதோடு முன்பு ஆனந்தசங்கரியாருக்கு தேர்தல் பிரச்சாரத்துக்கு எனத் தனது சொந்தப்பணத்தில் கார்வாங்கிக் கொடுத்து கூட்டுறவுச் சங்கத்தலைவராக வந்த தலைவரும் உள்ளடக்கமாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு பெரியவர் குசுகுசுத்தாராம் தேர்தல் பிரச்சாரத்துக்கு கார் வாங்கிக்கொடுத்த தலைவர் விடுதலைப் போருக்கு இதுவரை எதைக் கொடுத்தார் என்றாராம்.

மேலும் இந்த உள்ளூர்த் தலைவர்கள் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் பெயர் விபரங்கள் வெளிவந்தவுடன் ஏமாற்றத்துடன் இந்தப் பழம் புளிக்கும் என்று கூறிவிட்டு தமது திடீர் சூறாவளிப் பயணத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்களாம்.

இன்னுமா இவர்கள் திருந்தவில்லை, இன்னுமா இவர்கள் சுபபோக வாழ்க்கைக்கான பதவிகளாக மட்டும் நாடாளுமன்றை பயன்படுத்துவதிலிருந்து விடுபடவில்லை என மக்கள் அங்கலாய்த்ததை அவதானிக்காமல் இருக்கமுடியவில்லை.

பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்கள். தேர்தல் வந்தால்ஆசாமிகள் எல்லாம் வாய்திறப்பார்கள் போலுள்ளது.

பதவிகள், பட்டங்கள் மட்டுமல்ல இனத்தின் விடுதலையையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஏனென்றால் எங்களின் விடுதலைக்காக பதவிப்பட்டங்களுக்கு அப்பால் சிலுவைகளைச் சுமந்த தியாகிகள் வரலாற்றின் உதாரணங்களாக உள்ளதை மறந்துவிடக்கூடாது.

— வேழினி

---

**தொடர் - 08**

மமா என்கினா தெருவின் நடைபாதையில் வியாபாரிகளென்று ஆங்காங்கு தினசரிப்பத்திரிகைகளை விற்பவர்களே கடை பரப்பியிருந்தார்கள் 'த நேஷன' ,ஈஸ்ற் அஃபிக்கன் ஸ்ராடட் போன்ற தினசரிகளும் பல்வேறு ஜனரஞ்சக ஆங்கில சஞ்சிகைகளும் அடுக்கியிருந்தன கலை இலக்கியம் சார்ந்த சஞ் சிகைகளோ, ஏனைய துறைசார் வெயீடுகளோ கண்ணிற் படவில்லை. அவற்றிற்குப் புத்தகசாலைகளுக்குத்தான் செல்ல வேண்டும் என்று தெரிந்தது. பத்திரிகைகள் எல்லாம் அநேகமாக 'ரப்லெயிட் அளவினதாகவே இருந்தன விலைகளும் ஒப்பீட்டளவில் எம் நாட்டிலும் பார்க்க மிகக் கூடுதலாகவே இருந்தன.

இங்கே மிகப் பிரபலமான தினசரி எது என்று கேட்டேன் ஈஸ்ற் அஃப்றிக்கன் ஸ்ராண்டட் என்றார் அலிகான் தி நேஷன் என்றார் அயூப். இருவரும் ஏக காலத்திலேயே மறுமொழி சொன்னார்கள். இந்தத் தினசரிகள் ஒவ்வொன்றும் விலை முப்பத்தைந்து ஷில்லிங் அதாவது எங்கள் காசில் கிட்டத்தட்ட ஐம்பது ரூபாய் முதலாவதில் மட்டும் ஒன்றை வாங்கிக்கொண்டேன் நூற்றாண்டு கண்ட பத்திரிகை அது என்பது தெரிந்தது வாங்கிப் புரட்டிப் பார்த்ததோடு சரி அதை பிறகு படிக்கவே நேரம் கிட்டவில்லை அந்த ஒருவாரமும்!

நைரோபி நடைபாதையை நோட்டம் விட்டுக்கொண்டிருந்த அந்த அரை மணித்தியாலத்திலும்,பின்னர் அந்த நகர் முழுவதும் சுற்றிய நேரத்திலும்,ஏனைய நகர்ப்புறம், நாட்டுப்புறம் என்றெல்லாம் போய் வந்தவேளையிலும், இன்னுமொரு விசயத்தை உணரமுடிந்தது அதாவது சனநெரிசல் கூட அவ்வளவாகத்தென்படவில்லை. இடிபடும் கூட்டம் நெருக்கு வாரம் என்றெல்லாம் குறிப்பிடத்தக்கதாக எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் காணநேரவில்லை.ஏறத்தாழ ஆறு லட்சம் சதுரகிலோ மீற்றர் பரப்பளவுள்ள கென்யாவின் மக்கள் தொகை அண்ணளவாக 27 மில்லியன் நிலப பரப்பில் அரைவாசிக்கும் மேற்பட்டவை காடுகள், மலைகள், சமவெளி போன்றவை. மூன்றிலொரு



பங்கு சனத்தொகை நகரத்திலும் அண்டிய பிரதேசத்திலும் வாழ்கிறது.

செல்வாவும் விமுக்தியும் கமெராக் கடையிலிருந்து வெளிவந்தார்கள். அலிஸிடமும் அலிகானிடமும் விடைபெற்றுக்கொண்டு, அடுத்த ஒரு வாரத்திற்கான எங்கள் தலைவிதியை அயூப்பின் கைகளில் ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டோம்.

நைரோபி அழகான நகரம் அகன்ற அமைதியான சாலைகள். வாகனங்கள் நிறைய இருந்தாலும், சத்தம் புகை இருந்ததா இல்லை. ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரமடைந்த எந்த ஒரு மூன்றாம் உலக நாட்டின் தலைநகரிலும் போலவே புதிய பெரிய நவீன கட்டடங்களும், வெள்ளையர் ஆட்சிக்காலத்தின் அடையாளங்களான காலனித்துவக் கட்டடங்களும் கலந்தே தெரிந்தன. நகரில் மசூதிகளுக்கும், கிறிஸ்த்தவ தேவாலயங்களுக்குங் கூடக் குறைவில்லை. மசூதிகளில் ஸம்பியா மசூதி, இஸ்லாமியா மசூதி, இரண்டும் கம்பீரமாக காட்சி தந்தன.மக்கள் தொகையில் முக்கால்வாசிப் பேர் கிறிஸ்த்தவர்கள், பத்திலொருபங்கினர்




முஸ்லிம்கள்,ஏனையோர் பாரம்பரிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுபவர்கள்.

நகரில் போய்கொண்டிருந்த போது, இன்னொரு நாட்டிலிருக்கின்ற வித்தியாசம் பெரிதாகத்தெரியவில்லை. சூழல், தரைத்தோற்றம் மட்டுமின்றி, தெருவிலிலும் அதே இடதுபுற வாகன ஓட்டம்,அதே மொடல் வாகனங்கள். இங்கே இருக்கின்ற சகல ஜப்பானிய கார்களும், டெலிக்கா, நிசான் வான்களுந்தான் அங்கும் ஓடிக்கொண்டிருந்தன. பேஜோக்களும் கொஞ்சம். மிக முக்கியமான வித்தியாசமென்ன வெனறால், பஸ்களையே அங்கு காண வில்லை! வாதியங்கோவின் "சிலுவையில் சாத்தான் நாவலின் மூலம் நன்கு பரிச்சயமான மட்டாட்டுக்கள் என்கிற தனியார் மினிபஸ்கள்-வான்கள்தான் பொதுப்போக்குவரத்தைக் கையாள்வதைக்காண முடிகின்ற 'உஹுரு' ("சுதந்திரம் என்று பொருள்") பெருஞ்சாலை வழியாகப் போய் கிழக்கிலிருந்து வருகிற மொம்பாஸா பாதையில் ஏறினோம் ஆனால் நாங்கள் மொம்பாஸாவுக்குப் போகப் போவதில்லை என்பதில் விமுக்திக்கு நிறையவே கவலை. சற்றுமுன், அவருடைய-அந்த மொம்பாஸாவுக்குப் போக விரும்பும்-வேண்டுகோளையும், அலிஸ் மிகவருத்தத்துடன் மறுதலித்திருந்தார்,ஒரு கட்டத்தில்,தமது சொந்தச் செலவில் அங்கு போய் வருவதாக விமுக்தி கேட்டுக்கூட.மொம்பாஸா எமது சுற்றுலாத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாட்டில் நைரோபிக்கடுத்த பெருநகர் அது. மிக நீண்டகாலமாகவே துறைமுக நகராகப் பெயர் பெற்றிருந்தது.ஆபிரிக்காவின் அடிமைவர்த்தகத்தில் இடம்பெற்றிருந்த பெரிய துறைமுகம்.இந்தக் காரணங்களால் அந்த நகரைப்பார்க்க விமுக்தி ஆர்வம் கொண்டிருந்தும் அது நிறைவேறமுடியாமலாயிற்று. எம்மைப் பொறுத்தளவில்,ஏற்கனவே கென்யா சென்று வந்திருந்த நண்பர் சொன்ன விஷயம் நினைவிலிருந்தது:

மொம்பாஸா கடற்கரை, எங்கள் பண்ணைக் கடற்கரை மாதிரித்தானிருக்கும்.பெரிய வித்தியாசமில்லை!'எனவே,மொம்பாஸா போகாததில் எனக்கும் செல்வாவுக்கும் பெரிய வருத்தமில்லை.

வடக்கே எத்தியோப்பிய எல்லை வரை நீண்டுகிடக்கும் A-2 நெடுஞ்சாலையில் எமது பயணம் ஆரம்பமாகியது .ஆபிரிக்காவின் கிழக்குக்கரையில் உள்ள பெரியநாடு, கென்யா. கிழக்கே, சோமாலியா"வும் கடலும்.தெற்கே, தன்ஸானியா. மேற்கே, உகண்டா.என அதன் எல்லைகள் சற்று வரையறுக்கப் பட்டுள்ளன.இந்த A-2 நெடுஞ்சாலையில் போய் மேற்கே திரும்பினால்,இருநூறு கிலோமீற்றர் தொலைவில் கென்ய மலை உள்ளது. ஆபிரிக்காவின் இரண்டாவது பெரிய மலை அது. 5200 மீற்றர் உயரம். நீர்க்கமறப் பனி படர்ந்திருக்கும் அதன் முகடுகளும் அவற்றின் பளபளப்பும் பல மைல் தொலைவுக்குத் தெரியும் என்றார்கள்

அவ்வளவு உயரத்திற்குப் போகப் போவதில்லை என்றாலும் அந்த மலையை நோக்கித் தான் நாங்கள் போய்க் கொண்டிருந்தோம்: அதன் அரைவாசி உயரத்தில் நாம் சென்றடைய வேண்டிய இடமிருந்தது. மதியம் ஒன்றரைக்குள் அங்கு போய் விடலாமென்றார், அயூப் இப்போது மணி பத்து ஆகிக் கொண்டிருந்தது. இன்னமும் நைரோபி எல்லைக் குள்ளேயே பொய்க்கொண்டிருந்தோம். நகர் இரண்டு புறமும் நழுவிக் கொண்டிருந்தது. பூங்காக்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் தாண்டிக்கொண்டிருந்தன.. கென்ய இந்துக் கழகம், இந்துப் பல்கலைக் கழகத்திற்கான நிலம், சீக்கிய குருத்வாரா, குருநானக் ஆஸ்பத்திரி- என்று பெயர்ப்பலகைகள் பெரிதாய் ஓடிக்கொண்டிருந்தன. 'ட்றைவ் இன் சினிமா' ஒன்றும் கடந்து போனது. நகர் நெரிசலின்றி அமைதியாய் இயங்கிக் கொண்டிருந்தது. நகர மாந்தர் வாழ்விடங்கள் பற்றிக் கேட்டேன். வீடுகள், தொடர் மாடிக் குடியிருப்புக்கள் வசதியாகவே உள்ளன என்றார் அயூப் 'தண்ணீர்க் குழாய் மூலம் விநியோகிக்கிறார்கள். சில இடங்களில் விற்பனை செய்வதுமுண்டு'

'கழிவு நீர் அமைப்பு?

'இருக்கிறது. ஆனால் பழசாகி விட்டது. நகரின் வளர்ச்சிக்கேற்றபடி அது வளரவில்லை.'

'கென்யன் ப்ருவரி' என்றதொரு பெரிய பெயர்ப்பலகை யுடன் ஒரு பெரிய இடத்தில், ஒரு பெரிய கட்டடம் தாண்டி ஓடியது. 'எங்கள் பியர் உலகப் புகழ்வாய்ந்தது' அயூப் குரலில் பெருமை தொனித்தது.

கெற்றோல், மொபில், ரோற்றல், ஷெல் என்று விதம் விதமாக பெற்றோல் நிறப்பு நிலையங்கள்!

'விலை எப்படி'?

'பெற்றோல் லீற்றர் 59 ஷில்லிங், டீசல் 46 ஷில்லிங்' இது கிட்டத்தட்ட எங்கள் விலைகளுக்குச் சமனாய்ப் பட்டது. 'பிஸ்ரானி ஸ்ரேடியம்' என்ற பாரிய விளையாட்டரங்கைத் தாண்டிக் கொண்டிருந்தோம். அயூப் ஒவ்வொன்றாக காட்டி விளக்கிக் கொண்டே வந்தார். அவர் வலு சாதாரணமாக அதேவேளை சரியாகவும்- ஆங்கிலம் பேசினார்.உற்சாகமான, கலகலப்பான மனிதராயிருந்தார். நெடுநாள் பழகிய மாதிரி ஒருநாள் நட்பு நெருக்கம் உடனடியாகவே எம்முள் புகுந்தது. (தொடரும்)




# இளையநாதம்

## மறைக்கப்பட்ட வெளி!

இப்பொழுதும் பார்க்கிறேன்
அந்தப் பெருவெளியும்
ஆங்காங்கே சிறு பற்றைகளும்
மெல்லத் துளிர் விடும்
சின்னஞ் சிறுமரமும்
அவற்றின் அடியுள்
புதையுண்டுபோன – எம்
ஆருயிர் செல்வங்களும்
உப்பு நீர்ப்பரப்பும்
உலர்ந்த தரையுமாய்
அப்படியே தான் இருக்கின்றன.
மெல்லச் சிறகடிக்கும்
வெள்ளைப் புறாவால்
எடுக்கப்பட்ட மண்ணும்
புதைக்கப்பட்ட குழியும்
ம(றை)றக்கப்பட்டு விட
அருகே
அழகாய் தெரிகிறது
கண்டிவீதி மேலாய்
கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும்
வெள்ளை நிறம் பூசிய
வரவேற்பு வளைவு.

மா.தமிழவன்,

## வேண்டும் சமாதானம்

அலை ஓய்ந்த கடல் போல
இடி இல்லா மழைபோல
பூகம்பமில்லா பூமி போல
புயல் வீசாத் தென்றலைப் போல
ஓயவேண்டும் போர்
உருவாக வேண்டும் சமாதானம்.

எஸ். நிருஷனா,

## சுதந்திரம்

மாடி வீட்டின் படிக்கட்டுக்களில்
தங்கச் செயின் மாட்டிய நாய்
வெள்ளித்தட்டில் புரியாணி.
உண்டு களைத்து படுத்திருக்கிறது.
வீதியில் மெலிந்த சிறு நாய்
உணவுக்காய் அலைந்தபோது
தங்கச் சங்கிலி மாட்டிய நாயின் ஏப்பம்.
மெலிந்த நாய் கூறியது,
"உயிரினத்துக்கு தேவையானது சுதந்திரம்."
சுதந்திர ஏப்பம்விட்டது.

ச.இ. வினோதன்.

## அன்னை

கருவில் என்னை
உருவாக்கியதும்
தன்னை
எருவாக்கி எனக்கு
வளமான வாழ்வை
உருவாக்கித் தந்தவள்
அன்னையே.

## வேண்டும்

வேலையில்லாப் பஞ்சம்
தீர வேண்டும்
சமாதானம் நிலைக்க
வேண்டும்.

வினோ

## நிலவு

ஆகாயத்தில்
ஆண்டவன் சுட்ட
தோசை.

## சொல்ல வேண்டி வந்த பொய்கள்

அது இந்திய இராணுவம் எம் மண்ணை ஆக்கிரமித்து இருந்த காலம் அவர்களுடன் சேர்ந்து தேசவிரோதிகளும் தமது அட்டகாசங்களைப் புரிந்த காலம். எங்கும் ஒரேகைதுகள், தலைமறைவுகள், கொலைகள் என்பன தாராளமாய் நடந்து கொண்டிருந்தன.

அவ்வாறான ஒரு நாளில் தான் எனது அப்பாவையும் இந்திய இராணுவம் கைது செய்தது. அது நடந்து இரண்டு நாட்களின் பின் இராணுவத்துடன் தேசவிரோதிகளும் ஜீப் ஒன்றில் வந்து எங்கள் வீட்டை சுற்றி இறங்கினார்கள். வந்தவர்கள் வீட்டை சல்லடை போட்டார்கள். ஏற்கெனவே அப்பாவை கைதுசெய்த கோபமும் பயமும் எங்கள் மனதில் நிறைந்திருந்தது. இப்போது அண்ணாவைக் கேட்டார்கள். ஆனால் அவர் உண்மையிலேயே வீட்டில் இருக்கவில்லை. இல்லை என்று சொல்லக் கேட்கவில்லை. எம்மை அடித்தார்கள். இயல்பிலேயே வாய்க்காரியான எனது பெரியக்கா கண்டபடி அவர்களை திட்டித் தீர்த்தவள். கற்கள் மண்ணையும் அவர்கள் மீது எறிந்தாள். இதனால் கோபமடைந்த தேசவிரோதி ஒருவன் அவளை சுடுவதற்கு பாய்ந்து வந்தான். அப்போது அம்மா அவனுடைய காலைப்பிடித்தவாறு மெதுவாய் ஒரு பொய் சொன்னாள் "தம்பி அவளுக்கு மென்ரலடா அவளை ஒண்டும் செய்யாதை" என்று எனக்கோ அந்தவேளை பெரியக்காவை பார்க்க குபீர் எனச் சிரிப்புத்தான் வந்தது. வெகுகஸ்ரப்பட்டு அடக்கிக் கொண்டேன். வந்தவன் ஜீப்பை நோக்கிச் சென்றுவிட்டான். அம்மாவின் கண்ணீர் கலந்த பொய்யால் காப்பாற்றப்பட்ட எனது அக்கா தற்போது பல்வைத்தியராக இருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவகி.

## எப்பொருள் யார் வாய் கேட்பினும்

எங்கள் வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதை நாம் தான் தீர்மானிக்கமுடியும். முதலில் நமது வாழ்க்கை வரம்புகள் நமக்குத் தெரியவேண்டும்.

வெறும் உபதேசங்கள் வாழ்வை உருவாக்கிவிட உதவாது, என்றாலும் எல்லா உபதேசங்களையும் நாம் செவிமடுக்கலாம். அவற்றை நாம்வெறும் ஆலோசனைகளாக மட்டும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவற்றை எல்லாம் நாம் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. அனைத்தையும் அலசி ஆராய்ந்து, எங்களுக்கு எது சரி என்பதை நாம் தான் நிர்ணயிக்க வேண்டும்.

பொதுவாக ஆலோசனைகளையும், கருத்துக்களையும் சொல்பவர்கள் தங்களுடைய கண்ணோட்டத்தில்தான் சொல்கிறார்கள்



சொல்பவருக்கும் எமக்கும் இடையே கால சூழ்நிலைகளும், அனுபவங்களும் மாறுபடவே செய்கின்றன. அவற்றை நமது நிலையிலிருந்து ஆலோசித்து சீர்தூக்கிப்பார்த்து, எமக்கு பயனுடையவற்றை மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல! வெற்றி பெற்ற ஒருவரின் வாழ்க்கையை முற்றுமுழுதாக நமக்கு முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்றக்கூடாது. ஒரு துறையில் ஒருவர் பெறுகின்ற வெற்றிக்கு பல்வேறு காரணங்கள் இருக்கும் எனினும் உற்சாகம் பெறவும், சில படிப்பினைகளை தெரிந்து கொள்ளவும் இவை எமக்கு பயன்படலாம்.

நம்முடைய திறமைகளையும், அதற்குள்ள எல்லைகளையும் எங்கள் வாழ்க்கைப் போக்கில் அமைத்துள்ள சூழ்நிலையினையும் சரியாக மதிப்பீடு செய்து, சரியான வாழ்க்கை இலக்கினை நாமாகவே நிர்ணயம் செய்வதே சாலச்சிறந்தது.

வாழத்தெரியாமல் நாம் தவறான பாதைகளை உருவாக்கிக் கொள்கின்றபோது எமது இலக்கு தொலைதூரம் சென்றுவிடுகின்றது. வாழ்க்கையில் நினைத்தது அனைத்தையும் சாதித்துவிடுவது சாத்தியமில்லை. எனவே எமக்கு மேலான இலட்சியங்களையோ, ஏராளமான நோக்கங்களையோ வைத்துக்கொண்டு, எதையும் முழுமையாக நிறைவேற்றிவிடமுடியாமல் தடுமாறி, தோல்வியுற்று ஏமாற்றத்திற்குள்ளாவதைவிட, சரியான பொருத்தமான இலக்கைத் தேர்வுசெய்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம் இலக்குப் பொருத்தமானதாக இருக்கும் போது வெற்றி எமது வசமாகும். இதனால் தேவையான இன்பமும் கிடைத்து வாழ்வில் வெற்றியீட்டுகிறோம்.

திட்டமிட்ட இலக்கை தேர்வு செய்து, வெற்றியீட்டுங்கள். வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம், தங்களுடைய உண்மையான ஆற்றலையும், சாதிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளையும் உணர்ந்து, உண்மையாக உழைத்து, நம்பிக்கை என்னும் அச்சாணியின் துணைகொண்டு வெற்றியீட்டியவர்களே!

எனவே வெற்றியையும், அதை அடைவதற்கான சாத்தியக்கூறுகளையும் நினைத்துச் செயற்படுங்கள். அப்படியான வாழ்வில் வெற்றி நிச்சயம். சூழ்நிலை சாதகம் இல்லாதபோது மனநிலையைச் சாதகமாக்கிக்கொள்ளப் பழகினால் நிம்மதியும், மகிழ்வும், வெற்றியும் கிடைக்கும்.

ஆம், உனக்கு நீதான் முதலாளி: வழிகாட்டி!

'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதற்கமைய, உங்களுக்குப் பொருத்தமானதை நீங்களே தேர்வுசெய்து வெற்றியில் ஆனந்தக் கூத்தாடுங்கள்.

ச.முருகானந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 60

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | |
| | 09 | | | | 13 | |
| 15 | | 17 | | | | 21 |
| | | | 25 | | | |
| | | | | | 34 | |
| | 37 | | | 40 | | |
| 43 | | | 46 | | | |

பெயர்:-....................................
முகவரி:-....................................
....................................
....................................

### இடமிருந்து வலம்

01. மாசி மாதத்தில் வரும் சிவ விரதம்.
09. பொதி சுமக்கும் மிருகம்.
13. ஒட்டுவதற்கு பயன்படுவது (மாறியுள்ளது)
15. திருக்குறலை இயற்றியவர்.
25. இல்லம்.
34. பசுவில் இருந்து பெறப்படுவது. (மாறியுள்ளது)
43. பாதை.
46. மன்னன் (மாறியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. இது கைப்பழக்கம் என்பர்.
06. ஒழுங்கு (குழம்பியுள்ளது)
09. வெண்மைக்கு எதிரானது.
17. ஆண்டு.
21. தேர்தலில் போட்டியிடுபவர். (தலைகீழாக உள்ளது)
25. இசைக் கருவிகளில் ஒன்று.
37. கண்.
40. சிரசு (தலைகீழாகவுள்ளது)

### குறுக்கெழுத்துப்போட்டி இல.58 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கடவுள்.
06. கண்.
08. த்ந்திரம்.
15. அல்லி.
19. அநீதி.
32. மோகம்.
48. கடை

**மேலிருந்து கீழ்**

01. கதலி.
07. அண்ணன்.
19. திங்கள்.
20. நீலம்.
23. இடபம்.
24. கலகம்.
29. நேசம்.
42. கோடை.
46. மா

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.60
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.58 இன் பரிசுக்குரியவர்

T.S.சங்கீதா, T. சம்பூரணி,
யா/யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.58 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. அ. அமல்ராச், காவல் பணிமனை, முள்ளியவளை.
02. குமார், 9ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
03. கோ. வாசுகி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.
04. ப. கிருஷ்ணபிள்ளை, இடதுகரை, முத்துஐயன் கட்டு.
05. சி.தனுசா, கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்.
06. செ.நிலா, நல்லூர், யாழ்ப்பாணம்.

# ஏன் இந்த அடிமையின் மோகம்?

இது ஒரு விளையாட்டுப் போட்டிகளின் காலம் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், கழகங்களின் விளையாட்டுப் போட்டிகள், தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டுக்கள் எனப் பல்வேறு போட்டிகளின் கோலங்களாக நிறைக்கப்பட்ட காலம் எல்லோரிடையேயும் உற்சாகம் தொற்றிக்கொண்டுள்ளது. வருடத் தொடக்கத்திலேயே இதன் தயார்ப்படுத்தல், பயிற்சிகளில் ஈடுபடத்தொடங்கி ஒருவரிடம் வெற்றியைக் கொடுத்துவிட்டு ஏனையோர் தமது திறமையைப் பங்குபற்றுதல் மூலம் நிரூபித்துள்ளனர்.

உலகில் மிக உயர்ந்த விளையாட்டு நிறுவனமான ஒலிம்பிக்கின் அடிப்படைக் கோட்பாடான வெற்றியை அல்லது மிகத்திறமையான பயிற்சியுடனான பங்குபற்று தலே முக்கியம் எனும் விளையாட்டின் மிகச்



சிறந்த விழுமியத்தை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். ஆயினும், இன்றைய உலகின் புதிய ஒழுங்கின் போக்கில் வெற்றிக்காக விளையாட்டின் உயர்ந்த விழுமியங்களை (Values) இழக்கத் தயாராகிவிட்ட போக்கு மலிந்துவிட்டது. இது உலகமயமாதல் நோக்கிய போக்கின் வணிகக் கலாச்சாரத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகிவிட்டது. ஏனென்றால் விளையாட்டும் இன்று விற்பனைப்பண்டமாகிவிட்டது. விளையாட்டின் விழுமியங்களை இழந்து போவதற்கான பிரதான காரணியாக இதுவே அமைந்துவிட்டது.

எந்தப் பல்கலைக்கழகங்களாலும் கற்றுக்கொடுக்க முடியாத மிகச் சிறந்த வாழ்க்கைக்கான பாடங்களை விளையாட்டு மைதானங்கள் கற்றுக் கொடுக்கின்றன என்றார் மூன்றாவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவின் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ப.அரியரத்தினம். இவ்வாறான சிறப்புக்கொண்ட விளையாட்டுக்கள் எமது தேசிய அடையாளங்களைப் புறக்கணிப்பதில், அல்லது அதுபற்றிக் கவலைப்படாதிருக்கும் நிலைமை இப்போது பலம் பெற்று வருகிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அகில இலங்கைப் பாடசாலைகள் உடற் பயிற்சிப் போட்டி வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதற் தடவையாக வடகிழக்கு மாகாணத்தில் ஐந்து பாடசாலைகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. ஏறக்குறைய இருபத்தி ஐந்து பாடசாலைகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து கலந்து கொண்டன. இந்தப் போட்டியில் நான்கு பாடசாலைகள் ஆங்கிலத்தில் கட்டளைகளையும், ஒரு பாடசாலை தமிழில் கட்டளைகளையும், ஏனைய இருபது பாடசாலைகளும் சிங்களத்தில் கட்டளை



களையும் இட்டுக்கொண்டிருந்தது. சிங்களத்தில் கட்டளைகளை இட்ட பாடசாலைகளில் பல ஆங்கில மொழி மூல கற்கைகளைக்கொண்ட தேசியக் கல்லூரிகள் ஆகும்.

வடக்கு கிழக்குப் பாடசாலைகள் நான்கு மட்டுமே ஆங்கிலத்தில் தமது கட்டளைகளைக் கொண்டிருந்தது. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டன. ஒன்று சிங்களவர்கள் நடுவர்களாக இருப்பதால் தமிழ்க் கட்டளைகள் புரியாது எனக் கூறப்பட்டது. சிறிலங்காவில் நடாத்தப்பட்ட சர்வதேசப் போட்டிகளான ஆசிய மெய்வல்லுனர் போட்டி, ஆசிய சிராண்ட் பிரிக்ஸ் போட்டிகளில் பல்வேறு மொழி பேசும் பல நாட்டின் ஓட்ட வீரர்களுக்கான புறப்படுகை சிங்களத்திலேயே வழங்கப்பட்டதைப் போட்டியைப் பார்த்தவர்கள் அறிவர். இன்னுமொரு காரணம், தமிழ் மொழி கட்டளைக்குப் போதாமையானது எனப் பலரும் கூறுவர். கட்டளைகள் ஒலிச்சத்தம் (Rhyme) மூலமே புரிந்துகொள்ளப்படக் கூடியது. எனவே அதற்கேற்றவாறு மொழியை மாற்றுவது தவறாகாது. இது இன்று எல்லா மொழிகளிலும் பின்பற்றப்படுகிறது. இன்னுமொன்று ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக இது பயன்படும் என்பார்கள். இங்கு மொழி கற்பதற்கான சந்தர்ப்பங்கள் வேறு வழிகளிலும் வழங்கும் வாய்ப்புண்டு. ஒரு தேசிய இனத்தின் அடையாளங்களில் மொழி உபயோகிக்கப்படும் இடங்கள் முக்கிய மானவை. பத்தாம் வகுப்புவரை தமிழில் மட்டுமே படித்த இராமேஸ்வரச் சிறுவனே பின்னர் ஆங்கில மொழிமூலம் கற்று உலகில் சிறந்த விஞ்ஞானியானார். தன்னுடைய உளச்சம நிலைக்காக, தமிழிலேயே இன்றும் கவிதைகளை எழுதிவரு கிறார்.

ஆங்கில மொழி மூலமே எமக்கு வளர்ச்சியடைந்த விஞ்ஞானமும், உயர் தொழில்நுட்பமும் கிடைத்தது. ஆங்கிலம் எமக்கு அறிவின் நுழைவாயிலே அன்றின், எமது வாழ்வின் வெளிப்பாடு அல்ல.


எமது தேசிய இனத்தின் விடுதலைக்காக, எமது தேசிய இனத்தின் அடையாளங்களின் அங்கீகாரத்துக்குப் போராடும் நாம், நாம் அவற்றை ஆங்கிலத்துக்கு மாற்றீடாக்கிக் கொள்ள முடியாது. எம்முடைய தேசிய அடையாளங்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களைப் புறக்கணிப்பதும் ஒரு வகையான 'அடிப்படையின் மோகம்' தான். இதனைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும். இன்னொருவனுக்கு அடிமையாகவா இத்தனை கண்ணீரையும், செந்நீரையும் சிந்தினோம் எனும் கேள்வி எழுகிறது.

# போரின் நெருக்கடியிலிருந்தும் உயர்வுபெற்ற உதைபந்தாட்ட வீரன்

கிளிநொச்சிக்கும், வவுனியாவிற்குமிடையே நடைபெற்ற போட்டியில் நான் நன்றாகச் செய்திருந்ததாகப் பலரும் பாராட்டினார்கள், ஆனால் தமிழர் தாயகத்தின் மிகச் சிறந்த கோல் காப்பாளராக தெரிந்தெடுக்கப்படுவேன் என நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை" எனச் சொல்கிறார் பாக்கியலிங்கம் வசந்தீபன் இவர் கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணியின் கோல்காப்பாளராக இடம்பெற்றவர் கடந்த மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவில் தமிழர் தாயகத்தின் மிகச் சிறந்த கோல்காப்பாளராக தெரிவு செய்யப்பட்டு லெப்.கேணல் விக்டர் விருது வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கிளிநொச்சி மத்தியகல்லூரியில் க.பொ.த(உயர் தரம்) கலைப்பிரிவில் கல்விகற்கும் இருபது வயதுடைய இந்த இளைஞன் உடுப்பிட்டி இமையாணன் கிராமத் தில் பிறந்தவர். சூரியக்கதிர்-11 நடவடிக்கையுடன் இடம் பெயர்ந்து மல் லாவி யோகபுரம் ம.வியில் கல்வி கற்கும் போதே பதினைந்து வயதுக் குட்பட்ட உதைபந்தாட்ட அணியில் இணைந்து தனது உதைபந்தாட்டத்தை தொடங்கினார். ஆரம்பத்தில் முன்வரிசை ஆட்டக்காரராக தொடங்கிய இவர் பின்னர் பதினேழு வயதுக் குட்பட்ட பிரிவு, பத்தொன்பது வயதுக் குட்பட்ட பிரிவுகளுக்கு கோல்காப்பாளரானார்.

உதைபந்தாட்டத்தில் ஈடுபாடும் வளர்ச்சியும் ஏற்படுவதற்கு யோகபுரம் மகாவித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் விஜயநவகிருஸ்ணன் அவர்களின் முயற்சியும் பயிற்சியுமே காரணம் என்கிறார். ஆரம்பத்தில் மல்லாவி மத்திய விளையாட்டுக் கழகத்துக்காக ஆடிய இவர் பின்னர் திரு. வில்வராசாவின் அறிமுகத்தினால் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தில் இணைந்துகொண்டார்.



விளையாட்டுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜேர்மன் கோல்காப்பாளர் பயிற்றுனர்களால் வழங்கப்பட்ட பயிற்சியில் நிறைய புதிய விடயங்களைக் கற்றுக் கொண்டதைத் தெரிவித்தார்.

உதைபந்தாட்டத்தில் மட்டுமல்ல மெய்வல்லுனர் நிகழ்வுகளில் உயரம்பாய்தலிலும் மிகச் சிறப்பாக செயற்பட்ட இவர் 2001 ஆம் ஆண்டு வலய மட்டத்தில் 5'8'' உயரத்தைத் தாண்டினார். அப்போது மாகணமட்ட பாடசாலைகள் சாதனையாக 5'9'' இருந்தது. துணுக்காய் வலய உடற் கல்விக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வசந்தி சந்திரபாலன் மிகுந்த உற்சாகமூட்டி மாகாணமட்ட சாதனையைநோக்கிப் பயிற்சிக்கும்படி கூறினார். ஆனால் என்னுடைய பெற்றோர்கள் மாகாணமட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்காத காரணத்தால் அந்தச் சந்தர்ப்பம் இழக்கப்பட்டு விட்டது. பின்நாட்களில் இது எனது தந்தைக்குப் பெரும் மனவருத்தத்தைக் கொடுத்தது. தற்போது சிறந்த கோல்காப்பாளராக தெரிவு செய்யப்பட்டதையிட்டு அவர் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை போட்டிக்கான தயார்ப்படுத்தலில் காட்டிய ஆர்வமும் கடுமையான பயிற்சியுமே என்னுடைய இந்தச் சிறப்புக்கு காரணமாய் அமைந்தது. எமது பயிற்றுனர்கள் திரு. குணரட்ணம் அவர்களின் முயற்சியே இந்தக் கௌரவத்திற்கான அடிப்படையாகும். அவருடைய கடுமையான பயிற்சி துணிச்சலைத் தந்தது. நம்பிக்கையூட்டிய பயிற்சியும் புதிய தெம்பும் எங்களைச் சிறப்பாக செயற்பட வைத்தது.

என்னை மேலதிக கோல் காப்பாளராக அறிவித்த போது அணியில் கலந்து கொள்ள வேண்டாமென பலர் கூறினர். ஆனால் மேலதிக கோல் காப்பாளராக இருந்து கொண்டே எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் மூலம் இந்தக் கௌரவத்தைப் பெற்றுக் கொண்டேன்.

மாவட்டத் தெரிவு அணிக்குரிய கடினமான பயிற்சிகள் தொடர்ந்தால் கிளிநொச்சி மாவட்டமும் உதைபந்தாட்டத்தில் சாதனை புரிய முடியும் எனும் நம்பிக்கை எழுந்துள்ளது. எமது மாவட்டத்தின் கௌரவத்திற்காக அணி வீரர்கள் போட்டி பொறாண்மையின்றி ஒத்துழைக்கும் போது நாம் சிறந்த அணியாக மாறமுடியும் வவுனியா-கிளிநொச்சிப் போட்டியே எனக்கு இந்தக் கௌரவத்தைப் பெற்றுத் தந்தது. ஆனால் போட்டியின் போது தலையில் காயம் ஏற்பட்டு ஒருநாள் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டேன். உதைபந்தாட்டம் வன்முறையில்லா நெறிமுறை ஆட்டமாக வளரவேண்டுமென விரும்புகிறேன்.

என்னுடைய சிறப்பில் எனக்கு வழிகாட்டியவர்கள், நண்பர்கள், எப்பொழுதுமே என்னை உற்சாகப் படுத்தும் என்னுடைய மைத்துனர் இராஜவேந்தன் ஆகியோருக்கு நான் எப்போதுமே நன்றிக் கடமைப்பட்டவன் என்கிறார் வசந்தீபன்.

# இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலும் யாழ்ப்பாண மக்களின் மனோபாவமும்

யாழ்.மக்கள் இலங்கை நாடாளு மன்றத் தேர்தலை ஆர்வத்தோடு எதிர் கொண்ட காலங்கள் முன்பு இருந்தன. அத் தகைய ஆர்வமே தமிழர்களை எதிர்க் கட்சித் தலைவர் பதவிவரை கொண்டு சென் றது. ஆனால் கடந்த இரண்டு தசாப்தங் களாக் யாழ்.மக்கள் ஆர்வமற்ற நாடாளு மன்ற அரசியல் நிலைப்பாட்டையே கொண் டுள்ளனர். ஆனாலும் இந்தத் தேர்தல் மீண் டும் ஒரு ஆர்வம் கொண்ட மனப்பாண் மையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

கடந்த இரு தசாப்தகாலங்களிலேயே யாழ்பாணத்தில் சகல அடிப் படைக் கட்டுமானங்களும் அழிந்து ஒழிந்தன. உயிர்ப் படுகொலைகள், காணாமல் போனமை, அங்கவீனங் கள், போரின் கொடுமையால் மன வியாதியால் பாதிக்கப் பட்டோர், அங்கவீனமாகப் பிறக்கும் குழந்தைகள் என்று உயிருடன் சம்மந்தப்பட்ட மனிதப்பாதிப் புக்கள் ஒருபுறம், குண்டுமழைகளாலும், செல்தாக்குதல்களாலும், யுத்தம் நடைபெற்ற இடம் நடைபெறாத இடம் என்ற வேறுபா டின்றி யாழ்.மாவட்டத்தில் சகல பகுதிகளும் பௌதீக வளங்களின் சோவை இழந்துள் ளன. அதைவிட 20 வருடகாலமாக தமது வாழ் விடங்களைவிட்டு அகதிகளாகி அவலவாழ்வு வாழும் மக்கள் தொகை ஒரு புறமுள்ளது.

இந்நாட்டு மக்களுக்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் உதவிகளும், சலுகைகளும் யாழ்.குடா நாட்டு மக்களுக்கு நேரடி யாகவே மறுக்கப்பட்டுள் ளது. கடல் வளங்கள் மீன வர்களின் பயன்பாட்டிற்கு மறுக்கப்பட்டுள்ளது. சிறை யில் வாழும் தமிழ்க் கைதி களுக்காகத் தீர்வேதும் கிடைத்ததாக இல்லை. இவையாவும், இன்று யாழ்.மக்கள் சர்வசாதா ரணமாக யாவரும் அரசியல வாதிகளின் பால் வெறுப் படையச் செய்துள்ள பிரச்சினைகள் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தமிழ் பிரதேசம யாவற்றிற்குமே இது பொருந்தும். ஆனால் யாழ்.மக்களின் பாரம்பரிய வாழ் வியல் கோலங்களில் சிதைவை ஏற்படுத்தி அவர்களது சமூகக் கட்டுக்கோப்பைத் தகாத்து சமூகச் சீரழிவை ஏற்படுத்துவதையும் பேரினவாதிகள் மேற்கொண்டனர். இத்தகைய போக்கிற்கு தமிழர்களின் உள்ளக விரோ தங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது உண்மையே.

தமிழ் மக்கள் சர்வதேச ரீதியாக முன்னுதாரணம் காட்டிப் பேசப்படும் இன மாக மாறியுள்ளனர். தமிழர்கள் உலகில் ஒரு சக்திமிக்க பேரம்பேசும் ஆற்றல்மிக்க வர்கள் என்பதனைப் பல்வேறுவகையாக நிரூபித்து நிற்கின்றனர். அத்தகைய சாதனை கள் யாவற்றையும் இத்தனை தடைகளின் மத்தியிலேயே நடத்திமுடித்துள்ளனர் என்பது இங்கு விசேட அம்சம், ஆனால் இன்று அரசியல் ரீதியாக மிகவும் குழப்பமான நிலையிலேயே யாழ்.மக்கள் தெளிவுபட வேண்டியவர்கள்.

**கிராமிய மக்களின் மனோநிலை**

யாழ்ப்பாண மாவட்டத்தின் பின் தங்கிய கிராமப்புறங்கள் பல்வேறு அசௌ கரியங்களுடன் அடிப்படை வசதிகள் இன்றி உள்ள பகுதிகளையும் கொண்டது. காரை நகர் கல்லந்தாழ்வு, ஊரி, களபூமி, மாதகல், சில்லாலை, பிரான்பற்று,கட்டுடை போன்ற கிராம மக்கள் தேர்தல் தொடர்பாகக் கருத் துக் கூறுகையில் "எத்தனை தேர்தலைக் கண்டோம், அரசியல் வாதிகளைக் கண் டோம். தேர்தல் காலத்தில் எம்மைத்தேடி வருவார்கள் தேர்தல் முடிந்தால், யாரும் அவர்களைத் தேடிப்பிடிக்க முடியாது, வறுமை ஒழிப்பேன், வீதி அமைப்பேன், வைத்திய சாலை அமைப்பேன் என்பார்கள், ஆனால் என்றைக்குமே எமது கிராமங்களை இவர் கள் எட்டிப் பார்க்கமாட்டார்கள், 1978ம் ஆண்டுத் தேர்தலில் எங்கள் ஊருக்கு தபால் நிலையம் ஒன்றைத் தருவதாகக் கூறினார்கள் வென்றார்கள் இன்றுவரை தபால்பபெட்டிகூட எமது ஊரில் இல்லை என்றார். சில்லாலை சாந்தை என்ற இடத்துப் பெரியவர்.

உண்மையில் யாழ்.மாவட்டக் கிரா மப்புற மக்களின் ஆதங்கங்கள் நியாய மானவையே, நகரப்புற அபிவிருத்திகளி லும், நகரப்புற பாடசாலைகளின் வளர்ச்சி யிலும் அக்கறை காட்டும் அரசியல்வாதி கள் கிராமங்களை ஏறெடுத்தும் பார்க்க வில்லை என்பது அம்மக்களின் கவலையாகும்.

எமது கிராமம் சகல வழிகளாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. யாழ்.நகரில் இருந்து பிரதான வீதியாக 6கி.மீற்றரில் இருக்கும் எமது கிராம மக்களுக்கு இன் னும் மின்சாரம் கிடைக்கவில்லை. ஒரு உருப் படியான நூல்நிலையம் இல்லை, இதோ இதுதான் எங்கள் பஸ்தரிப்பு நிலையம் இத னைப் படம் பிடித்துப் போடுங்கள் என்றார் கட்டுடைக் கிராமவாசி ஒருவர்.

சித்தங்கேணிக் கிழக்கில் ஒரு வயோதிபர் தனது கருத்தில் "ஏழைவீட்டில் கோழிக்கறி எண்டால் ஒன்றில் ஏழைக்குக் காச்சல் இல்லாட்டிக் கோழிக்குக் காச்சல்" ஆனால் அரசியல்வாதிகள் எங்கிட ஊருக்கு வாறதெண்டால் தனியத் தேர்தல் விழா வருகுதெண்டு அர்த்தம். ஆனால் இந்தத் தேர்தல் எங்களுக்கெல்லாம் கொள்கை ரீதியாக முக்கியமானது என்பதால் நாங்கள் நிச்சயமாக வாக்களிக்க வேண்டும்.

**நடு வயதினரும், இளையவர்களும் வர்த்தகர்களும்**

எல்லாரும் சொன்னதைத்தானே இந்த முறையும் திருப்பிச் சொல்லுவினம் புதுசா ஒன்றுமில்லை யார் வந்தாலும் ஒன்று தான் இவர்களுக்கு நாங்கள் பாடுபடுறதால எந்த நன்மையும் எங்களுக்குக் கிடைக்கப்போவ தில்லை நாடாளுமன்றத்திற்கான தெரிவான பிறகு அவையலைக் காணவும் ஏலாது அதுக் குப் பிறகு அவைக்கு நேரமும் இருக்காது.

என்னதான் இருந்தாலும் பழைய காலம் போல இப்பவும் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது அதைவிட சிங்கள அரசின் நாடாளுமன்றங்கள் எத் தனை வருடம் என்பது சந்தேகத்திற்கு உள்ளா கியுள்ளது. போற போக்கைப் பார்த்தால் "குறைந்த காலப்பகுதியில் கூடிய தேர்தல் கண்ட நாடு"என்ட சாதனைகூட இலங் கைக்கு கிடைக்கலாம் அதனால தமிழ் அரசியல வாதிகள் சொன்னதைச் செய்யவேணும் என்றார் இளம் வர்த்தகர் ஒருவர்.

**அரச அலுவலர்கள்**


தேர்தல் காலம் என்றாலே அது பொயயும் புழுகும் அதிகரிக்கும் காலம்தான். ஆனால் இலங்கையில் நடைபெறும் 13வது நாடாளுமன்றத் பொதுத் தேர்தல் பல பொய்மை களுக்குகெதிராக ஒரே யொரு மெய்யை மட்டும் கூறும தேர்தல். அதாவது "தமிழ மக்கள் தமதுரிமை களை மீட்டெடுக்க ஒரே அணியில் திரண்டு நிற் கிறார்கள் அவர்களின் பின்னணியில் இராணுவ, இராஜதந்திர, அரசியல் ரீதியில் இலங்கை அர சிற்கு சமபலம் கொண்ட விடுதலைப்புலிகள் நிற் கின்றார்கள். இந்த உண்மையை சர்வதேசம் புரிந்துகொண்டது. ஆனால் மீண்டும் தமிழர்களுக்கு முன்வைக்கப்படும் கருத் துக்கணிப்பே இத்தேர்தலாகும். இவ்வாறு கூறுகின்றார் இளைப்பாறிய அதிபர் ஒருவர்.

தமிழர்கள் முன்பெல்லாம் உயர் பதவிகளையும், அதிக அதிகாரங்களையும் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். ஆனால் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த சிங் கள அரசுகள் தமிழர்களைத் திட்டமிட்டுப் புறக்கணித்ததன் விளைவாக நாம் இன்று அத்தகைய பதவிகளை எட்டிப்பார்க்க முடி யாமல் உள்ளோம். நாம் போராடியே எமது உரிமைகளைப் பெறவேண்டும். இந்த வகை யில் போராடியே இன்று இலங்கை அரசு தமிழர் தரப்புடன் சமாதானத்திற்கு வந்துள் ளது. ஆகவே தற்போது தமிழர்கள் ஒன்றி ணைந்து எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை சர்வதேசத்திற்கு முன்வைக்க வேண்டும். இதில் கட்சி அரசியலோ, சுய லாபம் கொண்ட மாற்றுக்கருத்துக்களுக்கு இடமளிக்கவோகூடாது. தமிழர்கள் கூடி நின்றால் கோடி நன்மை, ஒற்றுமை நீங்கி னால் அனைவருக்கும் தாழ்வே என்கிறார் ஒரு தபால் அதிபர்.

**ஆதி**



**பல தேர்தல்கள் வந்து போயிற்று அந்தத் தேர்தல்களில் எல்லாம் காணப்படாத சில முக்கியத்துவம் இந்தத் தேர் தலில் இருக்கிறது. இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் முக் கியமாக தமிழர் பிரதேசத்தின் அதிக மக்கள் தொகை யையும் அதிக நாடாளுமன்ற ஆசனங்களையும் கொண் டுள்ள யாழ்.மாவட்டம் நல்லமுறையில் எதிர்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தல் தமிழர்கள் கடந்த காலங்களில் புரிந்த தியாகங்களுக்கும், பெற்றுக்கொண்ட பாரிய வெற்றிகளுக்கும் பின்னால் தமிழர்களின் ஒரு மித்த குரலையும், ஒன்றுபடும் பலத்தையும், தென்பகுதிக்கு மட்டுமல்ல சர்வ உலகிற்கும் நிலைநாட்டப்போகிறது. ஆகவே நாங்கள் இந்த வெற்றிக்காக உழைக்கவேண்டும்.**




## யார் பணக்காரன்

தன்னைச்சுற்றி இருந்தவர்களிடம் நபிகள் நாயகம் கேட்டார்.-
"உலகில் பெரிய பணக்காரர் யார்?"
ஒவ்வொருவரும் ஆளுக்கொரு பதில் சொன்னார்கள்
எனினும் ஒன்றுமே சரியாக அமையவில்லை
கடைசியாக அவரே அதற்கான பதிலை கூறினார்.
"இறைவன் கொடுத்தது சொற்ப மேயானாலும் அதை
வைத்து திருப்தியடைபவன்தான் பெரிய பணக்காரன்"

## தோகையும், சோகையும்

மயில்தனது தோகையை விரித்து
கர்வத்துடன் நடந்தது.
தனது தோகையின் அழகுபற்றி அதற்கு
அளவற்ற பெருமை
கர்வமும் பெருமையும் கொப்புளிக்க
எதிரேவந்த கொக்கைப்
பார்த்து பரிதாபப்பட்டு கூறியது.
"பாவம்... நீ... உன் சிறகுகள்
வண்ணப்பூச்சு ஏதுமின்றி இப்படிச்
சோகையாக இருக்கிறதே...!"
மயிலை தீர்க்கமாகப் பார்த்த கொக்கு
கூறியது.
"உன்தோகை அழகாக இருக்கலாம்,
ஆனால் அந்தத்தோகை
உனக்கு வானத்தில் உயரப்பறக்க
உதவுவதே கிடையாது. ஆனால்
என்னுடைய தோகை சோகையாகத்
தோன்றினாலும் என்னை
மேகம் வரைக்கும் தூக்கிச் செல்லும"

## உலகமைதி

மாந்த நேயம்
பேசின
அணுக்குண்டுகள்
புறாக்களை
பறக்கவிட்டன
கழுகுகள்
போராடிக் கொண்டிருக்கிறது
அமைதி.

காசி.ஆனந்தன்.

## ஒரு சிலேடை

ஒரு முறை சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் கூவத்தில் முதலை இருப்ப தாக வெளிவந்த செய்தியை குறிப்பிட்டு "கூவத்தில் அரசு முதலையை போட்டிருக் கிறதா? என்று கிண்டலாகக் கேட்டார்.

ஆம்... கூவம் சீரமைய வேண்டும், சுத்தமாக வேண்டும் என்பதற்காக அரசு நிறைய முதலை (மூலதனம்) போட்டிருக்கிறது என்றார் அப்போதைய முதல்வர் கருணாநிதி. அந்தச் சிலேடையில் இன்புற்ற சட்டமன் றத்தின் சிரிப்பை அடக்க வெகுநேரமானது

## நகைச்சுவை இரண்டு

01) "எனக்கு திருமணமே ஆகாதுடா!"
"ஏன்டா"
எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் எங்கம்மா வுக்குப் பிடிக்கல! தன்னை மாதிரி ஒரு பெண் கிடைத்கால் தான் கட்டிவைப்பாளாம்!
பின் என்ன, அம்மா மாதிரியே ஒரு பெண்ணைப் பாரேன்!"
"பார்த்தேனே! எங்க அப்பா இப்படி ஒரு மனைவி வேண்டவே வேண்டாண்டாங் கிறார்!"

02) "எனக்கு ரெண்டு மகன்கள். ஒருத்தன் டாக்டர் இன்னொருத்தன் வக்கீல்!"
"அப்ப நீ அதிர்ஷ்டசாலிதான்!"
"வயித்தெரிச்சலைக்கிளப்பாதே! போனமாசம் ஒரு ஆக்சிடெண்ட்ல எனக்கு நல்லகாயம். டாக்டர் மகன் உடனே அதைக் குணப்படுத் தனுங்கிறான்! வக்கீல் மகன் அதிக நஷ்டஈடுபெற குணப்படுத்தக்கூடா துங்கிறான்!"


பொறுக்கி.

நாமறிந்த கேடுகளை விட பல்லாயிரம் கேடுகள் நம் சோம்பலிலிருந்து பிறக்கின்றன. - வில்லியம் ஷேக்ஸ்பியர்

இலங்கை எங்கும் பரந்த சேவை செய்து வருகின்ற டொஷீபா வட இலங்கை மக்களின் வாழ்வோடும் ஒன்றிணைய இப்போது யாழ்ப்பாணத்தில்...


# TOSHIBA COPIERS

காரியாலய உபகரணங்கள் விற்பனை நிலையம் இப்போது யாழ்ப்பாணத்தில்




சர்வதேச தரம் மிக்க டொஷீபா கொப்பியர்கள் மற்றும் ஏனைய ஒஃபீஸ் ஓட்டோமேசன்உற்பத்திகள் என்பன கட்டுபடியான விலையில் இப்போது உங்கள் சொந்த ஊரிலேயே

* அனலோக் போட்டோ கொப்பி மெஷின்
* லெப்டொப் கொம்பியூட்டர்
* டெலிபோன் சிஸ்டம்
* டிஜிடல் போட்டோ கொப்பி மெஷின்
* ஃபக்ஸ் மெஷின்கள்



ஜோன்கீல்ஸ் ஒஃபீஸ் ஓட்டோமேசன் மற்றும் IIS ஒஃபீஸ் ஓட்டோமேசன் ஆகியன ஒன்றிணைந்து யாழ் மக்களுக்கு மிகச்சிறந்த சேவையை இப்போது வழங்குகின்றன.

விசேட சலுகை 31 மார்ச் 2004 வரை மட்டுமே

விற்பனை முகவர்:-

IIS Office Automation

TOSHIBA FROM JOHN KEELLS

John Keells Group

மேலதிக தகவல்களுக்கு:
அஷோக் 0777725241
நௌஷான் 0722260197

IIS ஒஃபீஸ் ஓட்டோமேசன்
360/3, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி-021-4590190

(சி-9266)

## வெள்ளிநாத வாசகர்களுக்கு

**வெள்ளி நாதத்திற்கு ஆக்கங்களை அனுப்பிவரும் வாசகர்களே!**

நீங்கள் அனுப்பும் ஆக்கங்களுடன் உங்கள் முகவரியை தெளிவாகவும், முழுமையாகவும் எழுதி அனுப்பிவையுங்கள்.

எமக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கும் வாசகர்களோடு நாம் தொடர்பு கொள்வதற்கு இலகுவாக இருக்கும்.

ஆசிரியர், வெள்ளிநாதம்.

## ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

### சிறந்த படைப்புக்கு 25000/= ரூபா ரொக்கம் பரிசு

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவிக்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்க அது வேண்டுகிறது.

கதை எவ்விடயப் பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன் தவறி வந்ததோ வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்டதாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.


தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.


அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி மே, 15 ஆம் திகதி.

தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
கிளிநொச்சி.



வவுனியா நகரில்
24 மணி நேர
சேவையாற்றி
மக்களின்
நன்மதிப்புப்பெற்ற



# ஸ்ரீவாணிவிலாஸ் சைவ உணவகம்

சைவமும் தமிழும்
செழித்தோங்கும்
யாழ்ப்பாணத்திற்கும்
வந்துவிட்டது.

உங்கள் உணவுத்தேவையை
பூர்த்திசெய்ய விஜயம் செய்யுங்கள்.

# ஸ்ரீவாணிவிலாஸ் சைவ உணவகம்

இல:372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 071-2370211

இல:144, கண்டி வீதி, வவுனியா.
T.P: 024-4589777

Email-vani@wow.lk

(சி-9265)

# நீடித்த வாழ்வுக்கு கீரைகள்

**எமது** நாளாந்த உணவில் முக்கியமாக சேர்க்கப்பட வேண்டியது இலைக்கறியாகும். எங்கும் கிடைக்கும் மலிவானதுமான இலைககறியை உங்கள் நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள். இலைக்கறிகளில் உடலின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் தேவையான உயிர்ச்சத்துக்களும், கனிப்பொருட்களும், காணப்படுகின்றன. அனேகமான இலைக்கறிகளில் உயிர்ச்சத்து சி(C) மற்றும் இரும்பு,கல்சியம்,பொஸ்பரசு ஆகிய போசனைச் சத்துக்களும் நிறைய உண்டு.

மனிதர்களுக்காக இயற்கை அளித்தகொடைதான் கீரைகள் வெறும் கீரைகளைப் பச்சையாகப் பக்குவப்படுத்தி உண்டு வாழ்ந்தாலே ஒருமனிதன் எல்லாவகையான சத்துக்களையும் பெற்று உடல் நலத்தோடு வாழ்ந்து விட முடிகிறது.

உணவில் சரிவிகிதத்தில் இடம் பெறும் போது உடல் உறுப்புக்களின் இயல்பான செயற்பாடு சிறப்பாக அமைகிறது.

கீரையில் இரும்புச்சத்து அதிகம் உண்டு. இரும்புச்சத்தானது இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உயிரணுக்களுக்குத் தேவைப்படும் பிராணவாயுவை எடுத்துச் செல்லவும் உதவுகிறது. இரும்புச் சமைத்து உண்டால் உடல் வலிமையைப் பெறமுடியும். இவற்றில் எல்லா விதமான சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

கிராமப்புறங்களில் கீரை வகைகளை விரும்பிச் சமைத்து உண்கின்றனர். ஆனால் நகரப்புறங்களில் கீரை உண்பவர்களின் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கீரைகள் ஏழைகளின் உணவு என அவர்கள்



சில சாதாரண கீரைகள் இறைச்சி,மீன், முட்டை போன்றவற்றை விட உயர்வானவை. கீரைகள் சத்தான உணவாக மட்டுமல்ல மருந்தாகவும் விளங்குகின்றன. கீரைகள் உண்பதாலேயே சில வகை நோய்கள் நீங்கிவிடுகின்றன.

கீரைகள் சுவையினைத் தருபவை மட்டுமல்லாமல் உடல் நலத்திற்கேற்ற உணவாகவும் மன நலத்தைக் காக்கும் ஒரு சாத்வீக உணவாகவும் திகழ்கின்றது.

அன்றாடம் உணவில் அதிகளவு கீரைகள் சேர்த்துக் கொள்ளும் மக்களால் நீண்டகாலம் வாழமுடியும் நோய்வராமல் தடுக்கும் சக்தியும், நோய் வந்தாலும் விலகிக் குணப்படுத்தும் ஆற்றலும் உடலை எப்போதும் நலத்தோடு வைத்திருக்கும் திறனும் கீரைக்குண்டு. இக்கீரைகள் நாளாந்த சத்து நிறைந்த கீரைவகைகளை எமது உணவில் சேர்த்துக்கொண்டால் இரத்தச்சோகை நோயிலிருந்து விடுபடலாம்.

கல்சியம் இரத்தச் சத்தானது நரம்புகளையும் தசை ஆகியவற்றை சமச்சீராக செயற்படச் செயயும் பல நரம்புகள் உறுதி யாகவும் ஆரோக் கியமாகவும் இருக்கும்.

உயிர்ச்சத்து சி. பற்களுக்கும் பலவீனங்களுக்கும் தேவை. இதன் குறைபாட்டால் முரசு கரைதல், பல் ஈறுகளில் இருந்து இரத்தம் வடிதல் என்பவற்றைத் தடுக்கும். தடிமனைக்கூட வராமல் பாதுகாக்கும்.

மலச்சிக்கலைத் தடுத்து, குடலில் உற்பத்தியாகும் பூச்சிகளை அகற்றி எம்மை நோயிலிருந்து கீரைகள் பாதுகாக்கின்றன. உண்ணும் உணவின் குறைபாடுகளை நீக்கி நல்ல உடற் சக்தியைத் தருகின்றன.

கீரைகளைப் பக்குவமாகச் எண்ணுகிறார்கள். இவர்கள் கீரையிலுள்ள சத்துக்களையும் மருத்துவப் பயன்களையும் முழுமையாக உணராமையே காரணமாகும்.

இலகுவாகக் கிடைக்கக் கூடிய கீரைகள், பொன்னாங்காணி, வல்லாரை, முருங்கையிலை, கங்குன், பூசனி இலை, அகத்தி, குறிஞ்சா, முசுட்டை, தவசி முருங்கை, சண்டி இலை, தூதுவளை, கறிவேப்பிலை, பசளி போன்ற கீரைகள் எங்கும் கிடைக்கும் மலிவானது ஆகவே கீரைகளை அன்றாடம் உணவில் சேர்த்து ஆரோக்கிமாகவும் நலத்துடனும் வாழப் பழகிக்கொள்ளுங்கள்.

எங்கும் வளரக்கூடிய கீரைகளை உங்கள் வீட்டுத்தோட்டங்களில் நாட்டி புத்தம் புது இலைக்கறிகளைச் சமைத்துண்ணலாம்.

**எஸ்.கே**

# பொருண்மிய வாசல்

## எங்கள் போருண்மிய வளம்

**சிதம்பரதிருச்செந்திநாதன்**

காடு எங்களின் வளம் அனைத்து உயிர்களுக்கும் காடு அவசியமானது. காற்று,மண்வளம், நீர்வளம் போன்றவற்றின் ஆதாரமே காடுதான் இவை மனிதனின் அடிப்படைத் தேவைகள்.

நம் முன்னே உள்ள தாவரங்களும்,மரங்களும் பூமியின் நுரையீரல்கள் என்று அறிஞர்கள் சொல்வார்கள் இலை ஒளிச்சேர்க்கையின்போது காபநீர் ஒட்சைட்டை ($Co_2$) ஏற்றுக்கொண்டு நாம் சுவாசிக்கும் ஒட்சிசனை($0_2$) வெளிப்படுத்துகின்றது. அதாவது நாம் சுவாசிக்கும் ஒட்சிசன்களின் மூலம் காடுகளோ, மரங்களோ.



இந்த சின்ன அடிப்படை உண்மையினை புரிந்து, உணர்ந்து கொள்ளலாம் நாங்கள் காடுகளை, மரங்களை அழிக்கின்றோம்.

இதுமட்டுமல்லாது காட்டுப்பகுதியிலுள்ள மண் விசேட தன்மை கொண்டது. நீரை வேகமாக உறிஞ்சி சேமிக்கும் தன்மைகொண்டது. உயிர்ச்சத்துக்கள்,பூச்சிகள் தாவரங்களின் வேர்கள் போன்றன காட்டு மண்ணில் அதிகமாக இருப்பதே அந்த மண் நீரை உறிஞ்சுவதன் அடிப்படைக்காரணம் பயிர்ச்செய்கை நிலத்தைவிட காட்டுமண் மூன்று மடங்கு நீரைச் சேகரித்து வைக்கும் ஆற்றல் பெற்றது. அதனாலேயே வருடம் முழுவதும் சிறிது சிறிதாக நீரூற்றாகவும்.ஏனைய வழிகளிலும் நீரை வெளிப்படுத்துகிறது.

இதனாலேயே ஆற்றுப் பகுதிகள் வருடம் முழுவதும் வற்றாமல் நீரை வழங்குகின்றன.

காடுகளை அழிப்பதன் மூலம் இவற்றுக்கு பதிலீடுகளை நாம் எவ்விதம் தேடிக்கொள்ள முடியும்?


## மாபெரும் இலக்கியப் போட்டி – 2004

**கப்டன் வானதியின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்தும், கவிதை, சிறுகதை, குறுநாவல், ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்.**

**போட்டி நிபந்தனைகள்**

*படைப்புக்கள் தமிழர் தேசிய விடுதலை, சமூக விடுதலை என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டமைதல் வேண்டும்.*

**கவிதைகள்:-**
மரபுக்கவிதைகளாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமல் அமைதல்வேண்டும்.

**சிறுகதைகள்:-**
தட்டச்சுத் தாளில் 06 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

**குறுநாவல்கள்:-**
தட்டச்சுத் தாளில் 06 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

**கட்டுரைகள்:-**
தட்டச்சுத் தாளில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமல் அமைவதோடு, தரவுகள் உண்மையானவையாக இருக்க வேண்டும்.

**ஓவியங்கள்:-**
தட்டச்சுத்தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.

◆ போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.
◆ ஒருவர் எத்தனை படைப்புக்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
◆ படைப்புக்கள் அனைத்தும் தட்டச்சுத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவான கையெழுத்திலோ அல்லது தட்டச்சுப் பதித்தோ அனுப்புதல் வேண்டும்.
◆ படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாகவோ, வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டவையாகவோ இருத்தல் கூடாது.
◆ நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவர்களும் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
◆ போட்டிக்கான அனைத்துப் படைப்புக்களும் தபால் மூலமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
□ படைப்பாளிகளின் பெயர், முகவரி என்பவற்றைத் தனித தாளில் தெளிவாக எழுதி இணைக்கப்படல் வேண்டும்.
□ நிபந்தனைகளுக்கு அமைவாக வந்து சேரும் படைப்புக்களே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
□ நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

**பரிசுகள் வெல்ல இன்றே தயாராகுங்கள்**
**போட்டி முடிவுத் திகதி: 31-03-2004**

**படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி**

"மாபெரும் இலக்கியப் போட்டி 2004"
கப்டன் வானதி வெளியீட்டகம்,
இல 61, கனகபுரம்,
கிளிநொச்சி.

(3537)



விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
முடுப்பனிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்.



வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம் Vanni Institute of Technology

Vanni Vision'04

**கணினி உயர் தொழில்நுட்பக் கண்காட்சி**

கிளிநொச்சி மாநகரில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப நிறுவகமான 'வன்னிரெக்' இலவச கணினி செயல்முறைக் கண்காட்சியொன்றை நடத்துகின்றது. இக் கண்காட்சியில் கணினி மென்பொருள், வன்பொருள் மற்றும் இலத்திரனியல் பிரயோகங்களை செய்முறை விளக்கங்களுடன் கண்டு பயன்பெற வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : மார்ச் 5 - 6, 2004 (இரு நாட்கள்)
காட்சிநேரம் : காலை 8:30 - 12:00, மாலை 1:30 - 5:00

www.vanni.org
info@vanni.org

பதிவாளர்,
வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம்,
கிளிநொச்சி.

Vanni Tech
Vanni Institute of Technology

(சி-9308)

7ஆம் பக்கத் தொடர்ச்சி

அவரின் நகைச்சுவை உடல் அசைவு களால் கடந்தகால,நிகழ்கால சம் பவங்களை போராளிகளுக்கு எடுத்துச் சொல்வார். அவரின் அச்செய்கைகள் அப்போது பொழுது போக்கு அம்சமாக போராளிகளுக்கு இருந்தது.

இந்தியப்படையின் சுற்றி வளைப்புக்கள் அடிக்கடிநடைபெறும் சூழல் உருவாகியது. அதனால் உணவுப்பொருட்களுக்கான தட்டுப் பாடுகளும் நெருக்கீடுகளும் எழ ஆரம் பித்தது. போராளிகள் பிரிந்து தன வாய்,மணலாறுக்கூறு இறால்குழி என வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நெருக்கடியான காலகட்டங் களிலும் அப்போராளிகளுடன் வாழக் கூடிய மனத்தளத்திலே காணப்பட்டார்.

இச்சூழல் இறுக்க நிலையில் இருந்து தளர்வான நிலைக்கு வரக்கூடிய எந்தவொரு அறிகுறி களும் காணப்படவில்லை மாறாக மிகமிக இறுக்கமான போர்ச்சூழலே உருவாகியது. இத்தகைய காலகட் டத்தில் போராளிகள் அவரைத்தம் பலகாமப்பகுதிக்கு பாதுகாப்பாக அனுப்பிவைத்தார்கள். அவர் கவலை யுடன்பிரிவை ஏந்திச்சென்றார்.

தம்பலகாமத்தில் சிலநாட் கள் கழித்தபின் கப்பல்துறை பகுதிக்கு போராளிகளின் உதவி யுடன் சென்று அங்கு மறைமுகப் பணிகளில் ஈடுபட லானார்.

இந்தியப்படை கப்பல் ஏற போராளிகள் வாகனங்களில் உலாவர அண்ணனும் தன்குடும்பத்துடன் இணைந்து வாழத்தொடங்கினார். தன்குடும்பப் பொருளாதாரபிரச் சினைகளையொட்டி அவர் அவ்வ ளவு கவனம் செலுத்தவில்லை. அவரின் தொழில்சார்நிபுணத்துவ அறிவும் அனுபவ அறிவும் நிட்சயம் ஒரு இலட்சாதிபதியாக வாழ்ந்தி ருப்பார்.ஆனால் அவரின் எண்ண அலைகள் உயர்ந்த கொள்கைக்காக போராடுபவர்களுக்கான பணி செய்வ திலே கவனத்தை ஈர்த்தது அதுவே அவரின் சீரியகடமையாக கருதினார்.

மீண்டும் தன்கையில் ஒலி வாங்கியை தூக்கியபடி வாகனத்தில் ஒரு அறிவிப்பாளராக வலம்வந்தார். வெறும் அறிவிப்பாளர் அல்ல, தமிழ் இனத்தின்பாதுகாப்புக்காகவும், வாழ்விற்காகவும் அதிக இரத்தம் சிந்தும் விடுதலைப்புலிகளுக்கு பக்க பலமாக கருத்து தூவலை தூவினார்.

பிறேமதாசாவின் அரசியல் சூழ்ச்சி வெளியானதும் சண்டை மூண்டது. சிங்கள சாத்தான்கள் தமிழ் தேசியபக்திமிக்கவர்களையும் ,அப்பா வித்தமிழர்களையும் கடத்தி மிருகத் தனமாக கொன்று ஒழித்தார்கள். அண்ணனும் இலக்கு வைத்து எதிரி யால் கடத்தப்பட்டார் அவரின் ஆயு ளும் அதில் சிக்குண்டு 40 வயதில் படுகொலை செய்யப்பட்டார். அவரது உயிரற்ற உடலைக்கூட மனை யாள்,பிள்ளைகள், உறவினர் களால் காணமுடியாமல் போனது. இச்செய்தி அவரது குடும்பத்தின ருக்கும் அவருடன்பழகிய போராளி களுக்கும் இடி இடித்துப் போயிருந்தது. மனைவி பிள்ளைகள் மீளாத் துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். தமிழ ரின் புராதனப் பெருமை என்ன? இன் றுள்ள நிலை என்ன? தமிழர்கள் மீண்டும் பெருமையுடன் விளங்கக் கூடிய காலத்தை உருவாக்கிய விடுதலைப்புலிகளுடன் இணைந்து பங்காற்றவேண்டும் என்கின்ற எண் ணம் அவரின் மனதில் முதல் இடத் தை பெற்றே இருந்தது.

பகுத்தறிவிற்கு அனுகள வும்- முரணாக இல்லாத அவரின் செயல்கள், ஏழ்மைநிலையில் இருப் போர்க்கு உதவும் அவரின் மனிதம் எல்லாவற்றிலும் மிகவும் அற்புதமாக அவரின் உடல் மனம் விடுதலைப் போருக்காக அற்பணித்திருந்தது. அவரின் இணையற்ற உறுதியும் உயிரை துச்சமாகமதிக்கும் தியாக உணர்ச்சியும் உயர்வானதே.

ஒருவரது செயல்களால் சமூகம் எவ்வளவு தூரம் பலன் அடைகின்றதென்பதனை ஆதார மாகக் கொண்டே அவரை அச்சமூகம் கௌரவிக்கின்றது. அந்த வகையில் இருதய அண்ணர் பற்றிய ஞாபகம் எதிர் காலச்சந்ததிகளின் இதயங்களில் போற்றப்படுவர். ●

---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திவருகிறது. தமிழ்-முஸ்லிம் விரோதப்போக்கை வளர்த்துவிடுவதில் பெரும் பாடுபடுகின்ற ஜே.வி.பி அதன் ஒரு அங்கமாகவே முஸ்லிம்கள் தனியலகு கோரும் விடயத்தை பெரிதாக முன்னிலைப்படுத்தி பிரச்சாரம் செய்கிறது. கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெறும் மர்மக்கொலைகளை புலிகளின் தலையில் சுமத்தி கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு எனும் போர்வையில் தமிழரைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.


ஆனால் இன்றய காலகட்டத்தில் ஜே.வி.பி தன்னை இலங்கை அரசியல் முக்கிய களப் பொருளாக மாற்றிவிட்து. அதாவது பொதுசன ஐக்கிய முன்னணியுடன் செய்து கொண்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் பலம்வாய்ந்த இனவாதப் பின்னணியை ஏற்படுத்தி விட்டதில் இக்கட்சி வெற்றிபெற்றே உள்ளது. இனிவரும்காலங்களில் இலங்கை அரசிலயலை ஆட்டம் காண வைக்கும் முக்கிய கருப்பொருளாக இந்த இனவாதக் கட்சி திகழப்போவதை எவரும் மறுக்கமுடியாது.

வெவ்வேறு கொள்கை களைக்கொண்ட (தமிழின ஒழிப்புத் தவிர) இருவேறு கட்சிகள் ஒன்றாக கூட்டுச் சேர்ந்தமை சமாதானத்திற்கு மீண்டும் இந்நாட்டில் சாவுமணி அடிக்கப்பட்டுள்ளதை உணர்கிறது. அது மட்டுமன்றி ஈ.பி.டீ.பி போன்ற வேறும் சில சமாதான விரோத சக்திகள் ஓரணியில் திரண்டமை கவலையளிக்கும் விடயமாகும்.


ஜே.வி.பி போன்ற இனவாதக்கட்சிகளுடன் ஓரணியில் திரண்டதன் மூலம் பண்டா குடும்பம் பாரம்பரியமாக பேணிவந்த அரசியல் சொத்தாகிய சுதந்திரக்கட்சி இன்று வரலாற்று ரீதியில் தன் தனித்தன்மையை இழந்து விட்டது. இத்தகைய இக்கட்டான நிலைக்கு சுதந்திரக்கட்சியை இட்டுச் சென்றதில் பண்டா குடும்பத்தின் வாரிசாகிய அனுராபண்டாரநாயக்க முழுமூச்சில் செயற்பட் டமை அக்கட்சியின் சோதனைக் காலத்தை தெளிவுபடுத்துகிறது. அது மட்டுமல்ல சுதந்திரக்கட்சியின் தலைவியும் நாட்டின் சனாதிபதி யுமான சந்திரிகா பண்டாரநாயக் காவின் கணவர் நடிகர் குமாரதுங்க வை ஜே.வி.பி கொலை செய்தமை யை இவ்வுலகமே அறிந்துள்ள நிலையில் "அதற்கான ஆதாரம் ஏதும் உண்டா?" என அனுரா எழுப்பியுள்ள கேள்வி சுதந்திரக்கட்சியில் ஜே.வி.பி யின் செல்வாக்கை கோடிட்டு நிற்கின்றது.

அதே வேளை சந்திரிகா பண்டாரநாயக்காவின் புதல்வர்கள் கூடத் தமது தந்தையின் கொலை யைக் காரணம் காட்டி ஜே.வி.பியின் கூட்டை எதிர்த்தமை குறிப்பிடத்தக் கது. அது மட்டுமல்ல இக்கூட்டணி ஆட்சிபீடம் ஏறினால் கூட ஜே.வி. பியின் முரண்பாடான கொள்கை களுடன் அரசாங்கக் குதிரை எவ்வளியால் தன் பயணத்தைத் தொடரப்போகிறது? சென்ற பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் காணப்பட்ட வெளிநாட்டுக் கொள்கைகள் இக்கூட்டணி ஆட்சியிலும் தொடர்வதற்கான சாத்தியங்கள் அதிகம். இவற்றை ஜே.வி.பி சகித்துக்கொள்ளுமா? இப்போது இக் கூட்டணி உறுதி ஓர் நிலையில் காணப்பட்டாலும் கூட ஆட்சி பீடம் ஏறினால் ஓர் உறுதியற்ற நிலையை அடையும்.

எது எவ்வாறு இருப்பினும் இந்நாட்டின் சாபக்கேடான ஜே.வி.பி யை பலவீனப்படுத்தல் என்பது தேர்தலுக்கு முகம் கொடுக்கும் சமா தானத்தை உண்மையில் விரும்பும் தென்னிலங்கை சிங்கள மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.




## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 58



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் – 58**

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 57



செ.நேசன்
கணேசபுரம்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

உன்னை ஈன்ற மண் அந்நியரால் உருக்குலைந்து போனதால்
ஊண் உறக்கம் இழந்து ஏழ்மையின் பிடிக்குள் சிக்கினாயோ
அன்னையவள் வாழ்வளிப்பாள் என்றுணர்ந்து
தடவுகிறாயோ அவள மடியில் தொலைந்துவிட்ட உன் வாழ்வை.

### பாராட்டுக்குரிய வரிகள்

*வியர்வை சிந்தி குருதி சிந்தி*
*வீரர்கள் நடந்த நிலமதில்*
*தடவிப்பார் தாயே*
*வீரர்களின் தடயம் தெரியலாம்.*

சி.இன்பராஜ்,
மீசாலை.

*நடுங்கிடும் கரம் உந்தி குனிந்திடும் தாயே உந்தன் காலதில்*
*காலன் வளமாய் புதைத்திருப்பான் பொறிவெடியும்-இருந்தும்*
*பார்வை தெளிந்திட உந்தன் கரமெடுத்திடும் "பலன்" பொலிந்திட*
*இங்கு உன் வாயதும் செப்பும் நாடும் வளம் பெற்றிட என்றே...*

லோகநாதன் விஜிதா,
விசுவமடு.

*நரை விழுந்த பின்னும்*
*நானிலத்துப் பயிர்விதை - உன்*
*வியர்வையால் உருவானதல்லவா?*
*கவலைகொள்ளாதே கஞ்சியும் பசி போக்கும்.*

இரா.மாலா,
இளங்கோபுரம்.

*வந்தேறு குடிகள் - எம் வளத்தை*
*வாரி எடுத்துவிட்டான் - இருந்தும்*
*கையேந்தும் நிலையிலில்லை நாம்*
*கழிவையும் அமுதமாக்கி களிப்புடன் வாழ்வோம்.*

தி.தர்மினி,
வட்டக்கச்சி.

*கடலேறிய மகன் கரை திரும்பவில்லை*
*பரிதவித்து அவன் வருவானென்று*
*நாளும் நம்பி வந்தேமாந்து கண்ணீரோடு*
*வாழ்விற்காய் மீன் பொறுக்கும் அன்னையிவள்.*

கோ.மணிவண்ணன்,
முள்ளியவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

செயலில் நடத்திக் காட்டுவதே சிறந்த சொற்பொழிவும் சிறந்த பிரச்சாரமும் ஆகும். – மகாத்மா காந்தி







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.